விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
R A M C O
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து


பக்கங்கள்: பதினெட்டு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 புரட்டாதி 11 திங்கட்கிழமை (27.09.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 282

# இலங்கை மீது ஒபாமா பாய்ச்சல்;

# பதில் கொடுக்க தயங்கியது அரசு!

## சொந்த நலனுக்கான அரசியல் குறித்து குற்றச்சாட்டு



(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றிய அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா இலங்கை அரசை கடுமையாக விமர்சித்ததாகவும், ஆனால் அரசு அதற்கான பதிலை தனது உரையில் சேர்க்காது தவிர்த்து விட்டதாகவும் கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஒபாமாவின் பேச்சில் பின்வரும் விடயங்கள் இருந்ததாக பார்வையாளர் தெரிவித்துள்ளனர். தற்போது பொருளாதார நெருக்கடிகள் எமக்கு சுமையாக உள்ளபோதும் மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளும் எமக்கு அச்சத்தைக் கொடுக்கின்றன. (18ஆம் பக்கம் பார்க்க)

## திலீபன் நினைவு நாள் சென்னையில் அனுஷ்டிப்பு

(சென்னை)

விடுதலைப் போராட்டத்தில் உண்ணாவிரதம் மேற்கொண்டு உயிர் நீத்த விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த திலீபனின் 23 ஆம் ஆண்டு நினைவுநாள் நேற்று சென்னையில் அனுஷ்டிக்கப்பட்டது.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் சென்னை வேளச்சேரியில் தாய்மண் அறக்கட்டளை வளாகத்தில் திலீபன் நினைவுநாள் நிகழ்ச்சி நடைபெற்றது. (18ஆம் பக்கம் பார்க்க)

## ரயில் மோதி 3 பேர் பலி

(நீர்கொழும்பு)

சீதுவைப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற ரயில் விபத்தில் 3 பேர் பலியாகியுள்ளனர். ரயில் விபத்தில் உயிரிழந்த 3 பேரின் சடலங்கள் நீர்கொழும்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக நீர்கொழும்பு வைத்தியசாலைப் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த நால்வர் கொழும்பிலிருந்து (18ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவின் பாதுகாப்புக்கு இலங்கையால் அச்சுறுத்தல்!

(கொழும்பு)

தமது நாட்டுப் பாதுகாப்பு தொடர்பாக இலங்கை அச்சுறுத்தலாக அமைந்துள்ளதா என்பதில் இந்தியா தற்போது அதிக அக்கறை காட்டத் தொடங்கியுள்ளது. அண்மையில் மகாராஷ்டிராவில் கைது செய்யப்பட்ட லஷ்கர் ஈ தொய்பா அமைப்பின் ஒருவர் தாம் இலங்கையில் பயிற்சி பெற்றதாக தெரிவித்தமையை அடுத்தே இந்த அக்கறை ஏற்பட்டுள்ளது.

முதலில் இந்தப் போராளிக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் பயிற்சிகளை வழங்கியிருப்பார்களா? என்ற சந்தேகத்தை இந்தியா கொண்டிருந்தது.

எனினும் பின்னர் அது நிரூபிக்கப்படாத நிலையில் இலங்கையின் படையினர் மீது இந்தியாவின் கவனம் திரும்பியுள்ளது.

இலங்கையில் 200 லஷ்கர் ஈ தொய்பா அமைப்பின் உறுப்பினர்கள் இருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளமையை அடுத்தே இந்தியா (18ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதங்கள் இருப்பதாக கிடைத்த தகவலையடுத்து படையினர் தேடுதல்

### கல்வியங்காட்டில் நேற்று பதற்றம்

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு சந்திரசேகரப்பிள்ளையார் ஆலய வீதியிலுள்ள குளம் ஒன்றில் ஆயுதம் இருப்பதாக கிடைத்த தகவலை அடுத்து அப்பகுதியில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டனர். இதனால் அப்பகுதியில் பதற்றம் நிலவியது.

இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ள விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவர் கல்வியங்காடு சந்திரசேகரப்பிள்ளையார் ஆலய வீதியிலுள்ள குளத்தினுள் ஆயுதம் புதைத்து வைக்கப்பட்டுள்ளதாகத் (18ஆம் பக்கம் பார்க்க)

## சரத் பொன்சேகாவின் விடுதலைக்கு பௌத்த பிக்குமார் மூலம் முனைப்பு?

(கொழும்பு)

பிரதான பௌத்த பீடாதிபதிகள் இருவர் சரத் பொன்சேகாவின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் பேசவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

சரத் பொன்சேகாவின் மனைவி அனோமா பொன்சேகாவின் கோரிக்கைக்கு இணங்க அவர்கள் பேச்சுவார்த்தையில் ஈடுபடவிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் அனோமா பொன்சேகா மல்வத்தை மற்றும் அஸ்கிரிய மஹா நாயக்க தேரர்களை சந்தித்து இந்த கோரிக்கையை முன் வைத்ததைத் தொ டர்ந்து அவர்கள் இணக்கம் வெளியிட்டுள்ளனர். (18ஆம் பக்கம் பார்க்க)


## வன்னி மக்களுக்கு உதவுவதற்கு அனைவரும் முன்வர வேண்டும்!

### சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. உரை

(யாழ்ப்பாணம்)

வன்னி மக்களுக்கு உதவ அனைவரும் முன்வரவேண்டும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

மயிலனி சைவ மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் இதனைக் கூறினார். (18ஆம் பக்கம் பார்க்க)



## மீண்டும் சொந்த இடத்தில் வயாவிளான் ம.ம.வி.

(யாழ்ப்பாணம்)

வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் சொந்த இடத்தில் மீண்டும் இயங்குவதற்கான ஆரம்ப விழா நாளை நடைபெறுகின்றது.

இதில் பிரதம அதிதிகளாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபி விருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடா ளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் மு.சந்திரகுமார் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

வயாவிளான் (18ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# புலிகள் இல்லை எனக் கூறுபவர்கள் அவர்கள் மீதான தடையை நீடிப்பது ஏன்?

## கேள்வி எழுப்புகிறார் வைகோ



விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கினால் ஈழத் தமிழர்கள் இலங்கையில் நடந்த போர் குற்றம் குறித்து உலகுக்கு வெளிப் படுத்துவார்கள் என்பதால் தடை நீடிக்கிறது. தனி ஈழம் அமைந்தே தீரும் இலங்கை ஜனாதிபதியை போர்க் குற்றவாளிக் கூண்டில் ஏற்றுவோம் என்றார். (எ-5)

(சென்னை)

**விடுதலைப் புலிகளை அழித்துவிட்டதாகக் கூறுகிறார்கள். இந் நிலையில் அவர்கள் மீதான தடையை மட்டும் நீடிப்பது ஏன்? என மறு மலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ கேள்வி எழுப்பியுள்ளார்.**

விடுதலைப் புலிகள் அழிந்துவிட்டதாகக் கூறுபவர்கள், புலிகள் மீதான தடையை நீட்டிப் பது ஏன்? என்று வைகோ கேள்வி எழுப்பினார்.

திருச்சியில் ஓவியர் புகழேந்தியின் போர் முகங்கள் என்ற ஓவிய கண்காட்சி நடந்து வருகிறது. இதை ம.தி.மு.க பொதுச் செயலா ளர் வைகோ பார்வையிட்டார். பின்னர் செய்தி யாளர்களிடம் பேசினார். அதன்போதே மேற் கண்டவாறு அவர் கூறினார்.

ஓவியர் புகழேந்தி உலகின் மிகச் சிறந்த ஓவியர் ஆவார். இந்த ஓவியங்கள் இலங்கை தமிழர்கள் இந்திய அரசு உதவியோடு- வல்ல ரசு உதவியோடு கொல்லப்பட்டதை உலகுக்கு உணர்த்தும் விதத்தில் அமைந்துள்ளது. இதை பார்த்தால் ஈழத்தமிழர்கள் மிகவும் கொடூர மாக கொல்லப்பட்ட சம்பவத்தை தெரிந்து கொள்ளலாம். இந்த ஓவியங்கள் மூலம் தமிழ் ஆதரவை ஏற்படுத்த வேண்டும்.

23 வருடங்களுக்கு முன் இதே நாளில் திலீபன் இறந்தார். விடுதலைப் புலிகள் எண் ணம் வீண் போவது இல்லை. தமிழ் ஈழம் அமைந்தே தீரும்.

தற்போது இலங்கை அரசு தமிழர்களே இல்லாத நிலையை ஏற்படுத்த முயன்று வருகிறது. இலங்கையில் ஈழத் தமிழர்கள் பகுதி யில் உள்ள இந்து சிவன், முருகன் கோவில் களில் புத்தர் சிலையை வைத்து வருகின்றனர். இதன் மூலம் ஈழத் தமிழர்கள் வாழ்ந்த இடத்தை அழித்து இலங்கையை மாற்றும் முயற்சியில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது.

இந்நிலையில் விடுதலைப் புலிகளை அழித்து விட்டதாக கூறுகிறார்கள். ஆனால் விடுதலைப் புலிகள் இல்லாத நிலையில் விடுதலைப் புலி இயக்கம் மீதான தடையை மட்டும் நீடிப்பது ஏன்?

இது குறித்தான வழக்கில் டெல்லி உயர் நீதிமன்ற தீர்ப்பாயத்தில் நான் வாதாடினேன். இந்த தீர்ப்பாயத்தில் மத்திய அரசு மூலம் தமிழக அரசு சார்பில் அரசிதழ் தாக்கல் செய்யப் பட்டுள் ளது. அதில் விடுதலைப் புலிகள் தமிழ் ஈழத் துடன் தமிழ்நாடும் ஒரு பகுதி என்று கூறி யுள்ளனர். எனவே தமிழ் ஈழம் அமைந் தால் இந்தியாவின் பாதுகாப்பிற்கு பாதிப்பு ஏற்படும் என்று கூறியுள்ளார்கள். இது பச்சை துரோகம்.

விடுதலைப் புலிகள் எந்த ஒரு தீர்மானத் திலும் எந்த ஒரு பகுதியிலும் தமிழ் ஈழத்தின் ஒரு பகுதி தமிழ்நாடு என குறிப்பிடவில்லை.

இலங்கைத் தமிழர்கள் அனைவருமே விடுதலைப் புலிகள் என நினைக்கிறார்கள். இதனால் அவர்கள் எங்கும் செல்ல முடிய வில்லை அதனால் ஈழத் தமிழர்கள் உலக அனாதையாகி விட்டார்கள்.

## தகவல் கொடுப்பவர்களுக்கு 25 லட்சம் ரூபா சன்மானம்

(கொழும்பு)

பேலியகொடையில் கடந்த வெள்ளிக் கிழமை 7 கோடி ரூபா கொள்ளையடிக்கப் பட்ட சம்பவம் தொடர்பான குற்றவாளிகளை கைதுசெய்வதற்கு சரியான தகவல்களை வழங்குபவர்களுக்கு 25 லட்சம் ரூபா சன் மானம் வழங்கப்படும் என பொலிசார் அறிவித் துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை தனியார் வங்கி யொன்றின் தன்னியக்க பணப்பரி மாற்ற இயந்திரங்களில் வைப்பதற்காக வாகன மொன்றில் எடுத்துச் செல்லப்பட்ட 7 கோடி ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. மோட்டார்சைக்கிளில் வந்த ஆயுத பாணி களான ஆறு நபர்கள் வாகனத்தை நிறுத்தி வங்கியின் பணத்தையும் பாதுகாப்பு ஊழியர் களின் துப்பாக்கிகளையும் கொண்டு சென்ற தாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்த விசாரணைகளுக்காக பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரியவின் பணிப்பின்பேரில் 5 பொலிஸ் குழுக்கள் நியமிக் கப்பட்டுள்ளன. (எ-1)

## அமெரிக்க வர்த்தகர்களுடன் ஜனாதிபதி மகிந்த சந்திப்பு

(கொழும்பு)

அமெரிக்க வர்த்தகப் பிரமுகர்களுக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் இடையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இலங்கையில் முதலீடு செய்வதன் மூலம் கிடைக்கப்பெறக் கூடிய வாய்ப்புக்கள் குறித்து இதன்போது தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

விமான பொறியியல், பாதுகாப்பு, சுற்றுலா, உணவு, பானம் போன்ற துறைகளைச் சேர்ந்த சிரேஷ்ட வர்த்தகப் பிரமுகர்கள் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

நியூயோர்க்கின் ஹெல்ம்ஸ்லி ஹோட்ட லில் வர்த்தக பிரமுகர்களுக்கு விருந்துபசார மொன்று வழங்கப்பட்டுள்ளது. கோக்ககோலா, கூகிள், போயிங், ஹில்டன் உள்ளிட்ட மிக முன்னணி வர்த்தகஅமைப்புக்களைச் சேர்ந்த 100 நிறுவனத்தின் பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் பங்குபற்றியுள்ளனர்.

இலங்கயில் முதலீடுகளைச் செய்வது குறித்து கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி தனிப்பட்ட ரீதியில் குறித்த வர்த்தகர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ச-5)

## யாழ்.மாநகர சபையின் பஸ் சேவை ஒக்ரோபர் முதலாம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை இந்திய நட்புறவினை வலுப் படுத்தும் நோக்கில் இந்திய அரசாங்கத்தி னால் யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு அன்ப ளிப்பாக வழங்கப்பட்ட பஸ்வண்டிகள் முதற்கட் டமாக எதிர்வரும் ஒக்ரோபர் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் காலை 6.00 மணிமுதல் பிற்பகல் 4.00 மணிவரையும் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட் களில் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட வுள்ளதாக யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோ.பற்குணராசா தெரிவித்தார்.

மாநகரசபை எல்லைக்குட்டபட்ட, போக்கு வரத்து வாகன வசதிகளற்ற இடங்களூடாக இச்சேவை இடம்பெறவுள்ளது. பாடசாலை மாண வர்கள், அரச அலுவலர்கள் ஆகியோர் இச்சேவை யின் மூலமாக நன்மையடையவுள்ளனர்.

இதில் சிற்றி றைடர் 1 பஸ் வண்டியானது மாம்பழம் சந்தியிலிருந்து ஆரம்பித்து கண்டி வீதி, நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறை வீதி, சுவாமியார் வீதி, கடற்கரை வீதி, மூன் றாம் குறுக்குத்தெரு, பிரதான வீதி, இரண்டாம் குறுக்குத்தெரு, ஆஸ்பத்திரிவீதி, சிவன்பண்ணை வீதி, காரைநகர் வீதி, நாவலர் வீதி, என்ப வற்றினூடாக பயணித்து மீண்டும் மாம்பழம் சந்தியை சென்றடையும்.

சிற்றி றைடர் 2 பஸ் வண்டி மாம்பழம் சந்தி யிலிருந்து ஆரம்பித்து கனகரட்ணம் வீதி, ஆடிய பாதம் வீதி, சட்டநாதர் வீதி, இராம நாதன் வீதி, சிவப்பிரகாசம் வீதி, காங்கேசன்துறை வீதி, ஆஸ் பத்திரி வீதி, கச்சேரி நல்லூர் வீதி, ஆசீர்வாதப் பர் வீதி என்பவற்றினூடாகப் பயணித்து மீண்டும் கனகரட்ணம் வீதியூடாக மாம்பழம் சந்தியை சென்றடையும் என மாநகரசபை முதல்வர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ச)

## இலங்கையில் நாள் ஒன்றுக்கு 100 பேர் இருதய நோயினால் உயிரிழக்கின்றனர்

(கொழும்பு)

இருதய நோய்களினால் இலங்கையில் நாள் ஒன்றுக்கு 100 பேர் உயிரிழப்பதாக தொற்று நோய் அல்லாத சுகாதாரப் பிரிவின் நிபுணர் பாலித கருணாகரப்பெரும தெரிவித் துள்ளார்.

உலகம் முழுவதிலும் இருதய நோய் களினால் வருடாந்தம் பதினேழு மில்லியன் பேர் உயிரிழப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலக இருதய தினத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வுகளில் கலந்து கொண்ட போது அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் வருடாந்தம் சம்பவிக்கும் மரணங்களில் 30 வீதமானவை இருதய நோய் களுடன் தொடர்புடையவை. உயர் குருதி அழுத்தம், நீரிழிவு, புகைப்பிடித்தல் போன்ற காரணங்களினால் இருதய நோய் அதிகமாக ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறந்த சுகாதாரப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுவதன் மூலம் 80 வீதமான நோய் களிலிருந்து விடுபடுவதற்கான சாத்தியம் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். வேலைப்பளு, மன அழுத்தம் போன்ற காரணி களும் இருதய நோய் ஏற்படுவதற்கான பிரதான ஏதுக்களாக சுட்டிக்காட்டப்படுகிறது (ச-5)

## காதல் ஜோடியைத் தேடி இளைஞர் குழு அட்டகாசம்

(யாழ்ப்பாணம்)

காதல் ஜோடி ஒன்றைத் தேடி இரவு நேரத்தில் 25 இற்கும் மேற்பட்ட இளைஞர் கள் அல்வாய்ப் பகுதியில் அட்டகாசம் புரிந் துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இது தொடர் பில் தெரிய வருவதாவது.

வேறொரு ஊரிலிருந்து அல்வாய்ப் பகுதிக்கு காதல் ஜோடி ஒன்று வந்து தங்கி யிருப்பதாகத் தெரிவித்து 10 மோட்டார் சைக்கிள்களில் சுமார் 25 பேர் அங்கு சென்று ஒவ் வொரு வீட்டிலும் விசாரித்துள் ளனர்.

அதன்போது காதலர்களின் படங்க ளைக் காண்பித்து அவர்களைத் தெரியுமா எனக் கேட்டதுடன் தெரியாது எனக் கூறிய வர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் கூறப்பட்டது.

இதனையடுத்து அப்பகுதியில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது. பின்னர் அவர் கள் சென்ற போது தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும் அவர்களிடம் வாள், கத்தி, பொல்லுகள் என்பன காணப்பட்டதாகவும் பிரதேச மக்கள் கூறியுள்ளனர். ச-24)



# இன்று ஒரு தகவல்

## தாவர இயல்புகள்

அலுவலக வேலைகள் முடிந்ததும் எல்லோரும் வீட்டுத்குத்தானே போவார்கள்.

ஆனால், எனக்குத் தெரிந்த ஒருத்தர் என்ன பண்ணுவார் தெரியுமா?

நேராக ஏதாவதொரு 'பார்க்' குக்குப் போவார். மரத்தடியில் கொஞ்சநேரம் தூங்கிவிட்டு நீண்ட நேரம் கழித்துத்தான் வீட்டுக்குப் போவார்.

"ஏன் இப்படி?" என்று கேட்டால்,

'அங்கேதான் எனக்கு நிம்மதி கிடைக்கிறது' என்று சொல்லுவார்.

அவ்வப்போது நிம்மதி வேண்டுமானால் மனிதன் பூங்காவிற்குப் போகிறான். நிரந்தரமாக நிம்மதி வேண்டுமானால் அவன் காட்டுக்குப் போகிறான்.

காடும் பூங்காவும் நம்முடைய கண்ணுக்கு அமைதியாகத் தான் தெரிகிறது.

ஆனால், அங்கே உள்ளுக்குள் தீவிரமான ஒரு யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது.

மரமும் செடிகொடியும் நமக்கு நிம்மதியைக் கொடுக்கிறது.

ஆனால், அவையெல்லாம் நிம்மதியாக இல்லை. உயிர் பிழைப்பதற்கான போராட்டம் அங்கே தீவிரமாக நடந்துகொண்டிருக்கிறது.

இது சம்பந்தமான விபரங்களை கண்டு பிடிக்கும் போது விஞ்ஞானிகளே ஆச்சரியப்பட்டுப் போகிறார்கள்.

தாவரங்களெல்லாம் எதிரிகளை விரட்டியடிக்கிறது. நண்பர்களை கவர்ந்திழுக்கிறது.

இதற்காக அவையெல்லாம் 'வேதியல்' பொருட்களைப் பயன்படுத்துகிறது.

ஒரு தாவரத்துக்குப் போட்டியாக இன்னொருதாவரம் வளர்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள்.

உடனே விசேஷமான ஒரு வேதியல் பொருளை உபயோகப்படுத்தி அதனை விரட்டிவிடுகிறது. இல்லையெனில், அழித்து விடுகிறது.

இந்த வகையில், தாவரங்களின் சாதுரியம், சமயோசிதம், சாமர்த்தியம் - இவற்றையெல்லாம் பார்த்தால் மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது.

இவற்றை ஆராய்வதற்காக ஒரு புதிய அறிவியல் துறையே உருவாகியிருக்கிறது.

அதற்குப் பெயர் அல்லேலோபதி (Alle lopathy) ஒரு செடியிடம் போய் "ஏன் இப்படி சண்டையிட்டுக் கொள்கிறீர்கள்?" என்று கேட்டால் அது என்ன சொல்லும் தெரியுமா?

வாயிருந்தால் இப்படித்தான் சொல்லும்.

"உங்களுக்கு என்ன.... சுலபமாக கேட்டுவிட்டீர்கள்.... எங்களுடைய கஷ்டம் எங்களுக்குத்தான் தெரியும்.

பிராணிகளுக்கெல்லாம் ஒரு ஆபத்து வந்தால் உடனே ஓடிப்போய்விடுகிறது. பறவையாக இருந்தால் பறந்து போய்விடுகிறது.

எலியென்றால் வளைக்குள் ஓடிப்போய் ஒளிந்து கொள்கிறது. நாங்கள் என்ன செய்வது....

சுவரில் ஆணியடித்தது மாதிரி பூமியில் நின்று கொண்டிருக்கிறோம். எங்களால் ஓட முடியுமா? நகர முடியுமா?

நின்ற இடத்திலேயேதான் நாங்கள் ஆகாரத்தைத் தேட வேண்டும். இருந்த இடத்தைவிட்டு அசையாமல் தான் எதிரிகளிடமிருந்து எங்களைக் காப்பற்றிக் கொள்ள வேண்டும்." என்று புலம்ப ஆரம்பித்து விடும்.

அதுவும் நியாயம் தானே!

நமக்கெல்லாம் ஒரு ஆபத்து வந்தால் ஒன்றும் முடியவில்லையாயினும் ஓடியாவது போய்விடலாமே.

தாவரங்கள் என்ன பண்ணும்? பாவம்.

அதுதான் தாவரங்களெல்லாம் சூரிய ஒளியைப் பயன்படுத்தி ஆகாரத்தை தயார் பண்ணிக் கொள்கிறது.

தாவரங்களெல்லாம் உயிர் வாழ்வதற்காவும் இனதைப் பெருக்குவதற்காவும் சில ஆயுதங்களை வைத்திருக்கிறது. முள், செதில் இவையெல்லாம் தான் ஆயுதம். தற்காப்புக்காக சில இரசாயனங்களையும் அது வைத்திருக்கிறது.

தாவர நச்சுக்கள் சில இருக்கின்றன.

உதாரணத்திற்கு Phytotoxins ஐக் கூறலாம்.

ஒலியாண்டார் (oleander) என்று ஒரு புதர்ச் செடி இருக்கிறது. அதனுடைய சாறு கொடிய விஷம்.

அந்தச் செடியின் ஒரு இலையைத் தின்றால் கூட போதும். மனிதன் அவ்வளவு தான்! இறந்து போய்விடுவான்; மிசில்டோ (Mistletoe) என்று ஒரு செடி. அதனுடைய பழத்தைச் சாப்பிட்டாலும் மாடு அவுட். இதுபோன்று பல வகையான விஷச்செடிகள் வயலிலும் காட்டிலும் நிறைய இருக்கிறது.

தாவரங்கள், போட்டியாக வளரும் தாவரத்தை அழிக்க களைகொல்லி மாதிரியான இரசாயனத்தை பயன்படுத்துகிறது. பூச்சிகளை விரட்டுவதற்கு பூச்சிகொல்லி மாதிரியான இரசாயனங்களை உண்டாக்குகிறது.

ஆனால், ஒரு தாவரம் தன்னுடைய எதிரியைக் கொன்று தான் தீரவேண்டும் என்றில்லை. எதிரியை பலவீனப்படுத்துவதோடு சரி.

புகையிலைச் செடியில் நிக்கொட்டினை உற்பத்தி செய்கிறது. அந்த வாசனை பட்டாலே வண்டெல்லாம் செயலிழந்துவிடும்.

ஓக், பைன் என்பவற்றின் இலைகளில் டானின் (Tannin) என்ற அமிலம் இருக்கிறது. சாக பட்சிணிகள் அந்த இலையைத் தின்றால் அவ்வளவுதான். அதிலுள்ள டானிக் அமிலம் பிராணிகளின் வயிற்றில் நொதியத் தாக்கங்களை ஏற்படுத்தி இலைகளை ஜீரணிக்க முடியாமல் செய்துவிடும்.

சில தாவரங்கள் பூச்சிக்கு போதையை உண்டாக்கி விட்டுவிடும்.

சில மரங்கள் ஒன்றுக்கொன்று உதவுவதும் உண்டு.

சிவப்பு ஆல்டர் (Red Alder), வில்லோ (willow) போன்ற மரங்களை வில்லோ போன்ற மரங்களை கம்பளிப்புழு தாக்குகிறது.என்று வைத்துக் கொள்ளுங்கள். உடனே இது எச்சரிக்கை இரசாயனத்தை பரப்புகிறது. பக்கத்திலிருந்த மரங்கள் இதைப்புரிந்து கொண்டு எசசரிக்கையாகி விடுகிறது. அவையெல்லாம் இலைகளில் டானினை சுரக்கிறது. இதனால் புழு பூச்சிக்கு அந்த இலையை சாப்பிடும் ஆசையே விட்டுப் போகிறது.

அதனால், மரம் செடி கொடிகளெல்லாம நிம்மதியாக இருக்கிறது என்று நினைத்துக் கொண்டு அதைப் பார்த்துப் பொறாமைப் படவேண்டாம்.

அலுவலகம் முடிந்தவுடன் மரத்தடியில் போய் உட்காரலாமா என்று நினைப்பவர்களெல்லாம் இனிமேல் துணிந்து போய் வீட்டிலேயே உட்கார்ந்து விடுங்கள். அப்படி ஏதாவது ஆபத் தென்றாலும் 'மரமா' இருந்தால் ஓட முடியாது. நீங்கள் அப்படியில்லையே.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மல்லாகம் மகா வித்தியாலயத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழா

யாழ்.மல்லாகம் மகா வித்தியாலயத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை மறுதினம் புதன்கிழமை மறுநாள் வியாழக் கிழமையும் பிற்பகல் 2.30 மணியளவில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் ஆண்டு விழா சபைத் தலைவரும் அதிபருமான மா.நாகேந்திரசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் முதலாம் நாள் நிகழ்வின் பிரதம அதிதியாக பாரம்பரிய கைத் தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வின் கௌரவ விருந்தினர்களாக நல்லூர் பிரதேசசபை செயலாளர் மே.யோ.சாந்தசீலன், கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிப்பார்.

ஆசியுரையை பழம்பதி தேவஸ்தான ஆதீன கர்த்தா, பிரம்மஸ்ரீ.மு.நாகேந்திரசர்மா ,அருட் தந்தை பென்சமின் ஜெயராசா ஆகியோரும், வரவேற்புரையை பகுதித் தலைவர் திருமதி ஜெ.தர்மபாலன் வழங்குவர்.

இந்நிகழ்வின் இரண்டாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி கலந்து கொண்டு சிறப்பிப்பார்.

கௌரவ விருந்தினராக தெல்லிப்பளை பிரதேச செயலர் சு.முரளிதரன், சிறப்பு விருந்தினராக கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வின் மங்கள இசை யினை வழக்கம்பரை சிவகுமார் குழுவினர் இசைக்கவுள்ளனர். ஆசியுரையை மாவிட்டபுர கந்த சாமி கோவில் ஆதீன கர்த்தா பிரதம குரு மகாராஜ ஸ்ரீ சு.து.சண்முகநாத குருக்கள், குளம் மங்கால் பங்குத்தந்தை அருட் தந்தை றெக்ஸ சவுந்தரா ஆகியோர் வழங்குவார்கள்.

வரவேற்புரையை ஆண்டு விழாச்சபை உப தலைவர். இ.நா கேந்திரன் ஆற்றுவார். மலர் வெளி யீட்டுரையை யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் பா. தனபாலன் நிகழ்த்த, நூலின் முதல் பிரதியை முன்னாள் வலி வடக்குப் பிரதேச சபைத் தலைவர் திருமதி. பா.பாஸ்கரன் பெறுவார்.

மலர் மதிப்புரையை பலாலி ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் அதிபர் கவிஞன் சோ.பத்மநாதன் நிகழ்த்த நன்றியுரை ஆண்டு விழா சபைச் செயலாளரும் பிரதி அதிபருமான ந.ஆனந்தகுமார் ஆற்றுவார்.(ஸ்ரீ-2)

## இராசி பலன்

27.09.2010
(புரட்டாதி 11, திங்கட்கிழமை)
சதுர்த்தி முன்னிரவு 7.32 மணி வரை
பரணி பிற்பகல் 5.13 மணி வரை
இராகுகாலம் 7.32 -9.02 மணி வரை
சுபநேரம் 12.02 - 1.32 மணி வரை
சங்கடகர சதுர்த்தி விரதம்
மகாபரணி, கார்த்திகை விரதம்

**மேடம்** ஆதாயத்தை எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான இலாபம் கிடைக்கலாம், தொழிலில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், ஆழ்ந்த சிந்தனையுண்டு.

**இடபம்** பயணத்தால் பலன் கிடைக்கும் நாள், நண்பர்கள் சந்திப்பால் திடீர் விரயம் ஏற்படலாம், உத்தியோகத்தர்களுக்கு சில மாற்றங்கள் நிகழலாம், சயன சுகக் குறையுண்டு.

**மிதுனம்** எதிர்கால முன்னேற்றத்திற்கு அடித் தளமிடும் நாள், பிறர் உங்களை பாராட்டும் வாய்ப்புண்டு, வெளியூர் தொடர்புகள் நன்மை தரும், தொழிலில் வருமானம் அதிகரிக்கும் நிலையுண்டு.

**கடகம்** தொட்ட காரியம் வெற்றி பெறும் நாள், உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும், தொழிலில் உற்சாகத்துடன் செயற்படுவீர்கள்.

**சிங்கம்** சிக்கல்கள் விலகி சிறப்புகள் அதிகரிக்கும் நாள், வருங்காலத்திற்கான திட்டமொன்றைத் தீட்டுவீர்கள், முற்கோபமும், அலைச்சலும் அகலும், பயணத்தின் மூலம் அனுகூலம் கிடைக்கும்.

**கன்னி** கந்தன் வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை எடுக்க வேண்டியேற்படலாம். வெளியூர் பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை.

**துலாம்** சுற்றத்தாரின் வருகையுண்டு, தொகை எதிர் பார்த்தபடியே வந்து சேரும், பயணத்தில் ஆதாயம் ஏற்படும், சென்ற இடத்தில் செல்வாக்கு அதிகரிக்கும், வழிபாட்டால் முன்னேற்றம் காண வேண்டியநாள்.

**விருச்சிகம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், புகழ் கூடும், திருமண முயற்சி வெற்றி தரும், பகைவர்கள் மனம்மாறுவர்.

**தனுசு** பூமியால் இலாபம் கிட்டும், இல்லம்தேடி இனிய செய்திகள் வந்து சேரும், பொருட் சேர்க்கையுண்டு, பொதுப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், புத்திரர் வழி நன்மையுண்டு.

**மகரம்** பெற்றோர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், பிறருக்காக எடுத்த முயற்சிகள் வெற்றி பெறும், பயணங்கள் நன்மை தரும், வெளியூர் தொடர்புகள் ஏற்படலாம்.

**கும்பம்** உடன்பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டும் நாள், நீண்ட நாளைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும், குடும்பப் பொறுப்புக்கள் கூடும், பிரிந்தவர்கள் மீண்டும் இணையும் வாய்ப்புண்டு.

**மீனம்** பணவரவு திருப்தி தரும், பக்கபலமாக இருப்பவர்கள் உறுதுணை புரிவர், தொழிலை வரிவுபடுத்தும் முயற்சியில் ஈடுபடுவீர்கள், பேச்சுக்களில் மேன்மை காணப்படும்.

வளவன்

## உரக் களஞ்சியம் புனரமைப்பு

பெரிய தம்பனை உரக் களஞ்சிய சாலையை புனரமைக்கும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலக பிரிவில் அடுத்த மாதம் முதலாம் திகதியுடன் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.இந்தப் பிரதேச செயலக பிரிவில் 229 குடும்பங் களைச் சேர்ந்த 818 பேர் அடுத்த மாதம் முதலாம் திகதி மீள்குடியேற்றப் படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட மீள்குடியேற்ற திட்டப் பணிப்பாளர் ஏ.கேதீஸ்வரன் குறிப்பிட்டார்.(ச-3)

## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை யாழ்.மாவட்ட பெறுபேறுகள்

யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்

க.சயிதா 174, த.திலக்சனா 168, லெ.கெபின் 163, ஸ்ரீ.நிலானி 161, தே.சங்கரன் 161, க.திசாளினி 161, வி.ஜெனார்த்தன் 147, ம.சுகந்தன் 147, ச.ஹரிகரன் 146, சு.லக்சா 144, சு.சுதனிகா 144, கு.மதீபன் 143


தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை

கி.நாகராசன் 161, தே.தயானன் 155, ப.கஜந் 154, கு.மாதங்கி 154, பா.அருட்கடாட்சம் 153, இ.ராஹினி 153,ம.மேனகன் 153, ஜெ.ஜெனோசன் 145, பா.தனுரராஜ் 143, ப.டிலெக்ஷன் 143, சி.அனிருத்ரன் 142, சி.தனோயன் 142, சி.பிரியங்கன் 142 . (ஸ்ரீ)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 60 |
| தக்காளி | 100 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 |
| கோவா | 60 | 60 | 70 |
| கரட் | 60 | 60 | 60 |
| பூசணி | 40 | 35 | 30 |
| புடோல் | 40 | 40 | 60 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 70 | 60 | 70 |
| பெரிய வெங்காயம் | 80 | 50 | 80 |
| பாகற்காய் | 80 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 30 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 50 |
| பயற்றங்காய் | 60 | 60 | 60 |
| லீக்ஸ் | 90 | 120 | 100 |
| பீற்றூட் | 30 | 20 | 30 |
| கறிமிளகாய் | 60 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 100 | 60 | 90 |
| போஞ்சி | 120 | - | 100 |
| கத்தரிதம்புள்ள | 50 | 35 | 40 |
| கீரை - 1 பிடி | 10 | 15 | 20 |
| தேசிக்காய் | 80 | 60 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35-40 | 35 |







ஆசிரியர் தினத்தை முன்னிட்டு யாழ்.இந்துக்கல்லூரியின் ஆசிரியர்கள் மற்றும் மாணவ முதல்வர்களுக்கிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் நாணயச்சுழற்சி இடம்பெறுவதையும் போட்டி நடைபெறுவதைதயும் பங்குபற்றிய ஆசிரியர்கள் மற்றும் மாணவ முதல்வர்களையும் படங்களில் காணலாம்.

# இப்படியும் கடனை வசூல் செய்யலாம்; பெட்டிக்கடைக்காரரின் புது டெக்னிக்



(கடலூர்)

கடனை திருப்பித் தராதவர்கள் பெயரை கரும்பலகையில் எழுதி கடையின் முன் மாட்டி, வராக் கடனை வசூலித்தார் கடலூர் பெட்டிக் கடைக்காரர்.

கடலூர் புதுப்பாளையர் இரட்டைப் பிள்ளையார் கோவில் தெருவைச் சேர்ந்தவர் செல்வமணி. இவர் அதே பகுதியில் பெட்டிக்கடை நடத்தி வருகிறார். கடைக்கு வரும் வாடிக்கையாளர்களுக்கு கொடுத்த கடன் நீண்ட நாட்களாகத் திரும்பவில்லை. பலமுறை கேட்டும், ஒருவரும் காதில் வாங்கிக் கொள்வதாக இல்லை. இதனால் கடுப்பான செல்வமணி தனது கடையில், கடனுக்கு பொருள் வாங்கி பணம் தராதவர்களின் பெயர்பட்டியலை கரும்பலகையில் எழுதி கடை முன் மாட்டினார். அதிர்ச்சியடைந்த கடன் வாங்கியோரில் பலர் உடனடியாக கடனை திருப்பிக் கொடுக்கத் ஆரம்பித்தனர்.

இதுபற்றி செல்வமணி கூறுகையில், 20க்கும் மேற்பட்டவர்களிடமிருந்து எட்டாயிரம் ரூபாய் அளவிற்கு பாக்கி வரவேண்டியிருந்தது. கரும்பலலகை மாட்டிய 3 மணி நேரத்தில் நான்காயிரம் ரூபாய் வசூலாகியுள்ளது. மேலும் கரும்பலகையில் எழுதப்படாத சிலரும் கடனை திருப்பித் தந்துவிட்டனர். தற்போது ஆறு பேர் மட்டுமே கடனைத் திருப்பித்தர வேண்டிய பட்டியலில் உள்ளனர் என்றார். (ஸ்ரீ)

# காரைநகரிலிருந்து வெளியிடங்களுக்கு பயன்தரு மரங்களை தறித்துக்கொண்டு செல்ல முற்றாகத் தடை

(காரைநகர்)

காரைநகரிலிருந்து வெளியிடங்களிற்கு பயன்தரு மரங்கள் தறித்துக் கொண்டு செல்வது முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்தவாரம் காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனையில் பிரதேச சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குழுக்கூட்டம் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்திலேயே இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

காரைநகரில் கடந்த மாதம் பல்வேறு தேவைகள் எனக்கூறி நூற்றுக்கணக்கான பனைமரங்கள் தறிக்கப்பட்டுள்ளது. அத்துடன் வியாபார நோக்கத்துடன் சிலர் காரைநகருக்கு வெளியே உள்ள ஆலயங்களின் பெயர்களைப் பாவித்து அனுமதி பெற வி ணப்பிக்கின்றனர். காரைநகரில் குறிக்கப்பட்ட பனை மரங்களே நிற்பதனால் பயன்தரு எம்மரம் என்றாலும் காரைநகருக்கு வெளி யே கொண்டு செல்ல அனுமதிக்கப்பட மாட்டாது.

அத்தியாவசிய உரிய காரணம் இருப்பின் நன்கு பரிசீலனை செய்யப்பட்ட பின்னரே உரிய அனுமதி வழங்குவது தொடர்பாக தீர்மானிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

பிரதேச சுற்றுச்சூழல் குழுக்கூட்டத்தினைத் தொடர்ந்து காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனையின் சுற்றுச்சூழல் முகாமைத்துவ குழுவினால் பிரதேச வளங்களைப் பாதுகாப்போம் என்ற தலைப்பில் துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

- தற்போதைய சூழலில் காரைநகர் பிரதேச இயற்கை வளங்களைப் பாதுகாப்பது இன்றியமையாதது ஆகும்.
- ஒரு காலத்தில் கூடிய சனத்தொகையுடன் விளங்கிய இப் பிரதேசம் இன்று மட்டுப்படுத்தப்பட்ட சனத்தொகையுடன் எதிர்கால அபிவிருத்தியை எதிர்பார்த்து காத்திருக்கிறது.
- வளங்களை சீராக மேற்பார்வை செய்யாமையினாலும் பயன்படுத்தாமையாலும் இப் பிரதேசத்திற்கு ஏற்பட்ட பாதிப்புகள் அநேகம்.
- குடிநீர்ப் பற்றாக்குறையும் குடிநீருக்கு பிறரை நம்பி இருக்க வேண்டிய நிலையும் இதற்கு நல்ல உதாரணமாகும்.
- இதேபோல இப் பிரதேசத்தின் தாவர வளம்(பனைமரம், வெட்டுமரங்கள்), மண் வளம் என்பன வரையறுக்கப்பட்ட நிலையிலேயே உள்ளன. இவை எவராலும் மீளப் புதுப்பிக்கப்பட முடியாதவை. எனவே பொறுப்புணர்வற்று மரங்களை வெட்டுதல், சட்ட விரோதமாக காணிகளில் மண் அகழ்தல் போன்றவற்றின் மூலம் எதிர்காலத்தில் நாங்கள் வாழும் இப் பிரதேசம் மயான பூமியாக, நாம் எவருமே வாழ முடியாத பாலைவனமாக மாறுவதை எக் காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ள முடியாது.
- வருங்காலத்திலும் இந்தப் பிரதேசத்தில் சீரும் சிறப்புடனும் வாழ வேண்டும் என்று எதிர்பார்க்கும் எவரும் இப்பிரதேச வளங்கள் திட்டமிடப்படாதவாறு அழிக்கப்படுவதைக் கண்டும் காணாதவர்களாக இருக்கமுடியாது. எங்கள் வளங்கள் ஒரு சிலரால் அழிக்கப்படின் நாம் அனைவருமே வாழமுடியாத சூழல் ஏற்பட்டுவிடும். எமது வளங்களை துஷ்பிரயோகம் செய்பவர்களை, அழிப்பவர்களை இனியும் அனுமதிக்காதிருப்போம்.

எனவே ஒன்றிணைந்து இப்பிரதேச வளங்களைப் பாதுகாப்போம். விழிப்புணர்வுடன் எங்கள் எதிர்கால வாழ்வைத் திட்டமிடுவோம். (ஸ்ரீ-246)

# 2011 ஆம் ஆண்டுக்கான பாடசாலை தவணைகள் கல்வியமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

2011 இல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய பாடசாலை தவணை அட்டவணை கல்வி அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய சிங்கள, தமிழ் பாடசாலைகளுக்காக முதலாம் தவணைக்காலம் ஜனவரி 3ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பித்து ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரையும் (இரு தினங்களும் உட்பட) இரண்டாம் தவணை ஏப்ரல் மாதம் 25ஆம்திகதி திங்கட்கிழமை தொடக்கம் ஓகஸ்ட் 4ஆம் திகதி வியாழக்கிழமை வரையும் (இரு தினங்களும் உட்பட) மூன்றாம் தவணை செப்ரெம்பர் 5 ஆம்திகதி திங்கட்கிழமை ஆரம்பித்து டிசம்பர் 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரையும் (இரு தினங்களும் உட்பட) நடைபெறவுள்ளது.

மேலும் முஸ்லிம் பாடசாலைகளுக்கு முதலாம் தவணைக்காலம் ஜனவரி 3 ஆம் திகதி தீங்கட்கிழமை தொடக்கம் ஏப்ரல் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரையும் (இரு தினங்களும் உட்பட) இரண்டாம் தவணைக் காலம் ஏப்ரல் 18 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பித்து ஜுலை 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரையும் (இருதினங் களும் உட்பட) மூன்றாம் தவணைக்காலம் செப்ரெம்பர் 5 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் டிசம்பர் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரையும் (இரு தினங்களும் உட்பட) பாடசாலை நாட்களாகக் கருதப்படும் என கல்வி அமைச்சின் செயலாளர் சுனிஸ் எஸ். சிறிசேன அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# உள்ளூராட்சி தேர்தல் திருத்த பிரேரணை ஒக்-6 இல் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

தொகுதிவாரி முறையிலான உள்ளூராட்சி தேர்தல் மாற்றம் குறித்த பிரேரணை எதிர்வரும் 6 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியும் உத்தேச பிரேரணையில் உள்ள சிறந்த அம்சங்களுக்கு தமது ஆதரவு வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ளது.

எப்படியிருப்பினும் இந்த விடயம் குறித்து மாறான கருத்துக்களையே வெளியிட்டு வருகிறது.

இது தொடர்பாக ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி தெரிவிக்கையில்,

இந்த விடயம் குறித்து எம்மால் இந்தத் தருணத்தில் குறிப்பான பதிலை அளிக்க முடியாது என குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் தேர்தல் முறைமை குறித்த விபரங்கள் தமக்கு அறிவிக்கப்படவில்லை எனவும் மாற்றங்கள் குறித்து பொது மக்கள் புரிந்துணர்வை பெற்றிருக்க வேண்டும் என்பதன் அவசியம் குறித்தும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

# உலக சுற்றுலா தினத்தை முன்னிட்ட நிகழ்வுகள்

(கொழும்பு)

உலக சுற்றுலா தினம் சர்வதேச ரீதியாக இன்று கொண்டாடப்படவுள்ள நிலையில் இலங்கையில் பல நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி பணி யகம் தெரிவித்துள்ளது.

இதன் அடிப்படையில் எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு 25 இலட்சம் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு வரவழைப்பதற்கான விசேட திட்டங்களுடன் தமது அமைச்சு செயல்படுவதாக பொருளாதார அபிவிருத்தித் துறையின் பிரதி அமைச்சர் லக்ஷமன் யாப்பா அபயவர்த்தன தெரிவித்துள்ளார்.

சுற்றுலாத்துறையினை மேம்படுத்தும் நோக்கில் பல தேசிய மட்டத்திலான நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர் உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான தரத்தை உயர்த்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள் ளதாக குறிப்பிட்டார். அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளைக் கவரும் நோக்கில் சுற்றுச் சூழல் பேணுவதற்கும் முனைப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மாத்தறையின் நில்வளகங்கைக்கு அருகாமையில் உள்ள கிரலகலே எனும் இடம் இலங்கையின் புதிய சுற்றுலாத்துறை இடமாக இன்று உத்தி யோகபூர்வமாக அறிவிக்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# மக்கள் வங்கி பருத்தித்துறைக்கிளை -285

1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்.

· 1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் பின்வரும் தீர்மானம் மக் கள் வங்கிப்பணிப்பாளர் சபையினால் 27.06.2008 ஆம் திகதி நடைபெற்ற அவர்களது கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாண பிரசித்த நொத்தாரிசு திருமதி லிங்கா துரைராஜா அவர்களால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2004.05.30ஆம் திகதி கொண்ட இல 4403 மற்றும் 2005.05.19ஆம் திகதி கொண்ட 5145 ஆகிய ஈட்டு முறிகளின் பிரகாரம் வங்கிக்குச் செலுத்த வேண்டிய வருமதிக் கொடுப்பனவில் திரு.சச்சிதானந்தம் சூரியப்பெருமான் அவர்கள் தவணை தவறியுள்ளமையினாலும் குறிப்பிட்ட ஈட்டு முறியின் கீழ் தற்போது ரூபா பத்துஇலட்சத்து ஐம்பத்தையாயிரத்து ஐந்நூறு ரூபா1,055,500.00 பணத்தொகையை ஈட்டுமுறி இல 4403 இன் பிரகாரமும், ரூபா பதின்மூன்று இலட்சத்து இருபத்தைந்து ஆயிரம் ரூபா.1,325,000.00 பணத்தொகையை ஈட்டு முறி இல.5145இன் பிரகாரமும் தற்போது மக்கள் வங் கிக்கு வருமதியாக சேரவேண்டியுள்ளது.

ஆகையால் மக்கள் வங்கி பணிப்பாளர் சபை அதன் 1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க வங்கிச்சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் கீழ் இவ்வருமதிக் கொடுப்பனவுகளை அறவிடுவதற்காக மேல்குறிப்பிட்ட ஈட்டு முறிகள் 4403 மற்றும் 5145இன் கீழ் வங்கிக்கு ஈடு செலுத்தப்பட்ட ஆதனங்களை யாழ்ப்பாணம் உத்தரவு பெற்ற ஏலதாரர் கார்திகேசு பொன்னையா பாலகிருஷ்ணன் அவர்களால் பகிரங்க ஏலத்தில் விற்கப்பட்டு வங்கிக்கு வருமதியாய் சேரவேண்டிய சொல்லப்பட்ட தொகை ரூபா பத்து இலட்சத்து ஐம்பத்தைந்தாயிரத்து ஐந்நூறு (1,055,500.00)ஐயும் ரூபா பத்து இலட்சத்து ஐம்பதாயிரம் (ரூபா 1,050,000.00)க்கு 10.01.2006ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை 20.25% வருடாந்த வட்டியையும் மற்றும் ரூபா பதின்மூன்று இலட்சத்து இருபத்தைந்தாயிரம் ரூபா (1,325.000.00)வையும் ரூபா பதின்மூன்று இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபா (1,325.000.00) 06.11.2006ஆம் திகதியில் இருந்து விற்பனைத் திகதி வரைக்கும் 20.25% வீதம் வருடாந்த வட்டியும் "29 எல் "பிரகாரம் அறவிடப்படும் ஏனைய வரவுத்தொகைகளையும் அறவிடவேண்டும் என்பதை தீர்மானம் செய்துள்ளது.

**ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தின் விபரம்**

1. வடக்கு மாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம் வடமராட்சிப்பிரிவு,பருத்தித்துறை பரிஷ், வென்றி பாகுதேவன் குறிச்சி, இறை புலோலி கிழக்கு "ஆயில் நின்ற கலட்டி" நிலப்பரப்பு 01. வ. செ.குளி 14 என உத்தரவு பெற்ற நில அளவையாளர் அ.வேல்முருகுவின் திகதி 6.3.2005 இலக்க 1718வரைபடத்தின் படி இப்பொழுது துண்டு 1 என்று வெளிப்படுத்தப்பட்டு மேற் குறிப்பிட்ட நிலப்பரப்பு 01 வ.செ.குளி 14 வீடும் கட்டடங்களும் உரிய ஆனுபந்தங்களுடன் சொல்லப்பட்ட விஸ்தீரணம் நிலப்பரப்பு 01 வ.செ.14 குளிக்கும் எல்லை கிழக்கு இராசையா கைம்பெண் லட்சுமிப் பிள்ளையின் உரிமையாளரின் ஆதனம். வடக்கு விஷவலிங்கம் வேலாயுதத்தினது ஆதனம். மேற்கு பிரதான வீதி,தெற்குப்பிள்ளையார் கோவிலுக்குச் சொந்தமான ஆதனமும் ஒழுங்கையுடன் வடக்கு எல்லையில் இருக்கும் கிணற்றின் மூன்றில் இரண்டு பங்கு 2/3 பருத்தித்துறை காணிப்பதிவாளர் அலுவலகத்தில் இல.ஏ579/167 இன் கீழ் இவ்விபரங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன.

பணிப்பாளர் சபை கட்டளைப்படி

ஒப்பம்
உதவிப்பொதுமுகாமையாளர்
வடக்கு வலயம்.

# மக்கள் வங்கி

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1981ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 டீ எனும் பிரிவின் கீழான தீர்மானம்.

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் 29 டீ என்னும் பிரிவின் கீழ்வரும் தீர்மானம் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2008.08.29 ஆம் திகதி நடைபெற்ற அவர்களது கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.

யாழ். பிரதேச நொத்தாரிசு திருமதி லிங்காதுரைராஜா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 14.02.2004 ஆம் திகதி கொண்ட இலக்கம் 4224 கொண்ட மற்றும் 10.04.2005 ஆம் திகதி கொண்ட இலக்கம் 5041 ஈட்டு முறிகளின் பிரகாரம் மக்கள் வங்கிக்குச் செலுத்த வேண்டிய வருமதிக் கொடுப்பனவில் திரு.இராசலிங்கம் சிறீராம் மற்றும் மகாலக்சுமி சிறீராம் அல்லது மகாலெட்சுமி சிறீராம் ஆகியோர் தவணை தவறியுள்ளமையாலும் குறிப்பிட்ட ஈட்டு முறிகளின் கீழ் ரூபா எட்டு இலட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து நாநூற்றி நாற்பத்து நான்கும் சதம் எழுபத்தைந்து (ரூபா 864,444/75 சதம்) மட்டும் பணத்தொகையை ஈடுமுறியிலக்கம் 4224 இன் பிரகாரமும், ரூபா பத்து இலட்சத்து முப்பத்து மூவாயிரத்து நாநூற்றி எண்பத்து மூன்றும் சதம் பதினேழு (ரூபா1, 033,483/17 சதம்) பணத்தொகையை ஈட்டு முறி இலக்கம் 5041 இன் பிரகாரமும் தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாகச் சேர வேண்டியுள்ளது.

ஆகையால் மக்கள் வங்கி பணிப்பாளர் சபை அதன் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் கீழ் இவ்வருமதிக் கொடுப்பனவுகளை அறவிடுவதற்காக மேல் குறிப்பிடப்பட்டுள்ள ஈட்டு முறி இலக்கம் 4224 மற்றும் 5041 கீழ் வங்கிக்கு ஈடு செலுத்தப்பட்ட ஆதனங்களை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உத்தரவு அதிகாரம் பெற்ற ஏலதாரர் கார்த்திகேசு பொன்னையா பாலகிருஷ்ணன் அவர்களால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு வங்கிக்கு வருமதியாகச் சேரவேண்டிய ரூபா எட்டு இலட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து நாநூற்றி நாற்பத்து நாலும் சதம் எழுபத்தைந்து. (ரூபா 862,4448/75 சதம்)யும் அத்துடன் ரூபா எட்டு இலட்சத்து இருபத்தி ஏழு ஆயிரத்து ஐந்நூறுக்கு (ரூபா 827,500/-) 01.05.2007 திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை 20.25% வருடாந்த வட்டியையும் மற்றும் ரூபா பத்து இலட்சத்து முப்பத்து மூவாயிரத்து நானூற்றி எண்பத்து மூன்று சதம் பதினேழையும் (ரூபா 1,033,483/17 சதம்) அத்துடன் ரூபாய் பத்து இலட்சத்து ஐநூறு மட்டும் (1,000,500/-) க்கும் 2007.04.07 திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை 20.25% வீதம் வருடாந்த வட்டியையும் ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகையிருந்தால் அவை தவிர்த்து மக்கள் வங்கி சட்டம் 29 'L' பிரகாரம் அறவிடப்படும் ஏனைய வரவு தொகைகளையும் அறவிட வேண்டும் என்பதை தீர்மானம் செய்துள்ளது.

**ஈடு வைக்கப்பட்டுள்ள ஆதனத்தின் விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் மேற்குப் பகுதி, சங்கானைப் பிரிவு தொல்புரம் இறை- "வ்ளக்கம்புறெய்" என அழைக்கப்படும் நிலப்பரப்பு 3 வ.செ 17.4 குளி விஸ்தீரணம். உறுதியின் படி கொண்டது. ஆனால் உத்தரவு பெற்ற நில அளவையாளர் எம்.இராமச்சந்திரன் 09.11.2003 ஆம் திகதியிட்டு தயாரித்த வரைபடம் இலக்கம் 3099 இல் துண்டு 1 இல் இருந்து 4 வரை நில. பர.3 வ.செ. 16.33 குளியுடன் கட்டிடமும், பணிர் வகைகளும். இதன் தென்மேற்கு எல்லையில் இருக்கும் கிணற்றில் அரைப்பங்கும் துறவையும் அதற்குரிய வழிவாய்க்காலும் சேர்ந்ததுமாகும். சொல்லப்பட்ட 3 பரப்பு 16.33 குளி விஸ்தீரணம் கொண்டுள்ள ஆதனத்தின் எல்லைகள்

கிழக்கு - சுப்பிரமணியம் ஆறுமுகநாதனின் ஆதனம்,
வடக்கு - றோட்டு,
மேற்கு - தங்கம்மா பெண் இராமேஸ்வரனின் ஆதனமும்,
தெற்கு - முத்துக்குமாரு சுப்பிரமணியத்தின் ஆதனம்.

இவையனைத்தும்

யாழ்ப்பாணம் காணிப்பதிவு காரியாலயத்தில் கே. 736/219இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(ஓ/1288)

# நகரங்களில் வாழ்பவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகம்

## ஆய்வில் தகவல்

நகரப்பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாக காணப்படுவதாக அண்மைய ஆய்வுத் தகவல்கள் சுட்டிக் காட்டுகின்றன.

மரபு ரீதியாக நகரப் பிரதேசங்களிலேயே வாழும் மக்களின் மரபணுக்களில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாக காணப்ப டுவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக நோய் தொற்றுக்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ளக்கூடிய உடற் தகுதி கிராமப்புற மக்களை விடவும் நகர மக்களிடம் அதிகமாக காணப்படுவதாக குறிப்பிடப்படுகிறது.

காசநோய் உள்ளிட்ட பல நோய்கள் அதிகளவு கிராம மக்களிடையே விரைவில் தாக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நகர மக்களே அதிகளவில் நோய்த் தொற் றுக்களினால் பீடிக்கப்படலாம் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்ததாக சுட்டிக்காட்டப்படுகிறது.

எனினும் தற்போது அந்த நிலைமையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

லண்டன் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

மத்திய கிழக்கு முதல் இந்தியா வரையிலான பல நகரங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் மரபணுக்கள் சோதனைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## முன்பள்ளி விளையாட்டுப்போட்டி

தும்பளை சிறுமலர்கள் முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டி நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் பருத்தித்துறை சட்டத்தரணி சபா நவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை கோட்டக் கல்வி அதிகாரி பா. இரகுநாதன் கலந்து கொண்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (ஸ்ரீ)

# இளைஞர்கள் விரும்பும் கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சி மாற்றமடையும்

## ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி இளைஞர்கள் விரும்பும் கட்சியாக மாற்றமடையும். அவர்களுக்கு தலைமைத்துவத்தை வழங்கி வழி நடத்த ஒரு போதும் தயங்காது என அந்தக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் கண்டி மாவட்ட இளைஞர் முன்னணியின் கூட்டமொன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை உடுநுவர கெலி ஓயாவில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஐக்கிய தேசியக்கட்சி இளைஞர் யுவதிகளின் எண்ணங்கள் அபிலாஷைகளைப் புரிந்து கொண்டு மதித்து நடக்கும் கட்சியாகும். இந்த ஜனநாயகப் பண்பை கட்சி தொடர்ந்தும் காத்து வந்துள்ளது. எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி அதிகளவு இளைஞர் யுவதிகளை களத்தில் இறக்கும். எனவே, விரும்பியவர்கள் கட்சிக்கு விண்ணப்பிக்க முடியும்.

நாட்டில் தொழில் வாய்ப்புக்களை அதிகளவில் வழங்கிய கட்சி எமது கட்சியாகும். ஜனசவிய, ஆடைத் தொழிற்சாலை, மகாவில அபிவிருத்தி திட்டம் போன்றன மூலம் இத்தொழில் வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டன. எனவே, எம்மிடம் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தும் திட்டங்கள் உண்டு.

நாட்டின் உற்பத்திகளை நவீனமயப்படுத்தல் மூலம் பல்வேறு தொழில் வாய்ப்புக்களை உருவாக்கவும் ஏற்றுமதிகளை அதிகரிக்கவும் வாய்ப்பு உண்டு .ஆனால் அரசாங்கம் அதனை செய்யவில்லை என்றார்.

கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல உட்பட பலரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-2)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வன்
அற்புதராசா அனோஜன்
(யா/காலையடி அ.மி.த.க.பாடசாலை)




2010 ஆம் ஆண்டு 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 162 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த செல்வன் அனோஜனை பாராட்டி மகிழ்வதோடு அவர் மேன்மேலும் கல்வியில் முன்னேற்றமடைந்து சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்தி பல கலைகளையும் பெற பனி முத்துமாரி அம்பாளை வேண்டுகின்றோம்.

இந்துக்கல்லூரி வீதி,
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

வாழ்த்துவோர்:
அம்மப்பா,அம்மம்மா, பாஸ்கரன் மாமா, மாமி,மச்சான், மச்சான்மார்கள் மற்றும் உற்றார் ,உறவினர்கள்.

(2557)



ஆயிரம் கைத்தொழில் கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட அல்லாரை தும்புத் தொழிற்சாலை ஆரம்ப வைபவத்தில் தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் மங்கலவிளக்கேற்றுவதையும் அருகில் அல்லாரைத் தும்புப் பொருள் உற்பத்தி சங்கத் தலைவி செல்வி.க.துசாயினி மற்றும் விருந்தினர்கள் நிற்பதனையும் தும்பு உற்பத்தியை ஆரம்பித்து வைத்த பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தும்பு உற்பத்தியைப் பார்வையிடுவதையும் அமைச்சர் உரையாற்றுவதையும் சங்கத்தின் முக்கியஸ்தர் பா.மனோகரன் உள்ளிட்ட பிரமுகர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:சாவகச்சேரி நிருபர்)

# மன்னாரில் தாயும் மகனும் காணாமல் போயுள்ளனர்

(கொழும்பு)

மன்னாரில் பெண் ஒருவரும் அவருடைய ஐந்து வயது சிறுவனும் காணாமல் போயிருக்கிறார்கள். மன்னார் தாழ்வுபாடு வீதியில் உள்ள எழுத்தூர் பகுதியில் வசித்து வரும் 32 வயதுடைய நித்திய லோஜனி எனும் பெண்ணும் அவருடைய் ஐந்து வயது மகனுமே காணாமல் போய் இருப்பதாக மன்னார் பொலிஸில் முறையிடப்பட்டிருக்கிறது.

கடந்த 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை பத்தரை மணியளவில் இப்பெண்ணும் சிறுவனும் புறப்பட்டிருக்கின்றனர்.

இவ்வாறு புறப்பட்டவர்கள் தாம் மன்னார் பிரதேச செயலகத்திற்கு செல்வதாகவும் நிவாரணம் பெறுவது தொடர்பில் தகவல்களை அறிந்து கொள்ள வேண்டும் எனக் கூறிச் சென்றதாகவும் தெரிய வருகிறது.

ஆயினும் அவ்வாறு கூறிச்சென்ற அவர்கள் இதுவரையில் வீடு திரும்பவில்லை எனவும் அவர்களது நெருங்கிய உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே போரின் இறுதிக் காலகட்டத்தில் இப்பெண்ணின் கணவரான சுரேந்திரன் (வயது 35) காணாமல் போயிருந்தார். காணாமல் போன சுரேந்திரன் போரின் போது கொல்லப்பட்டுவிட்டதாக கடந்த 2009 ஆம் ஆண்டு மே 6ஆம் திகதி இடப்பட்ட மரண அத்தாட்சிப் பத்திரம் இப்பெண்ணுக்கு வழங்கப்பட்டிருந்ததாகவும் தெரிய வருகின்றது.

(ஸ்ரீ-2)

# நாடக ஆற்றுகை

மக்கள் களரி நாடக ஆற்றுகை நிகழ்வில் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 10 மணிக்கு உடுப்பிட்டி பெண்கள் கல்லூரியில் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான திருடன் வந்தான் நாடகமும் காலை 11.30 மணிக்கு ஏனைய மாணவர்களுக்கான மாயப்பட்டாடை எரிக்கலம்பூ நாடகமும் மேடையேற்றப்படவுள்ளன.

அத்துடன் வட இந்து மகளிர் கல்லூரியில் எதிர்வரும் 30ஆம் திகதி காலை 10 மணிக்கும் காலை 11 .30 மணிக்கும் மேற்குறித்த நாடகங்கள் மேடையேற்றப்படவுள்ளன. (ஸ்ரீ-2)

# உள்ளூராட்சி அதிகாரசபை சட்டதிருத்தம் வர்த்தமானியில் வெளியிடுவதில் தாமதம்

(கொழும்பு)

உள்ளூராட்சி அதிகார சபைச் திருத்தச் சட்ட மூல ஏற்பாடுகளை வர்த்தமானியில் வெளியிடுவதில் தாமதமேற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இந்தச் சட்டத்தின் இறுதி வடிவம் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டும் அது தொடர்பாக கடந்த 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியில் வெளியிடப்படவில்லை.

குறிப்பிட்ட சட்டமூலத்தில் காணப்படும் சில பிழைகள், விளக்கமின்மைகள் காரணமாகவே இதனை வர்த்தமானியில் வெளியிடுவதில் தாமதமேற்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த ஓர் உயரதிகாரி செய்தி ஊடகம் ஒன்றிற்கு தெரிவித்தார்.

பிழைகள் திருத்தப்பட்டு,விளக்கம் இன்மையாகக் காணப்படும் விடயங்கள் தெளிவுபடுத்தப்படும் பட்சத்திலேயே அதனை வர்த்தமானி அறிவித்தலாக வெளியிட முடியுமென வும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இருப்பினும் உள்ளூராட்சி அதிகார சபை சட்ட மூலம் மீண்டுமொரு தடவை திருத்தத் திற்குள்ளாகியமை காரணமாக அதனை நேரடியாகவே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியாது.

மீண்டும் மாகாண சபைகளுக்கு அனுப்பி அவற்றின் அங்கீகாரம் பெற்ற பின்னரே இதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியுமெனவும் அவர் கூறினார்.

(ஸ்ரீ-2)

# தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டமையை முன்னிட்ட நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யா/ திருக்கும்பம் கன்னியர் மடம் தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டமையை முன்னிட்ட நிகழ்வு எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிபர் அருட்சகோதரி தாஸ் நேவிஸ் லடிஸ்லாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி கலந்து கொள்ளவுள்ளதுடன் கௌரவ விருந்தினராக யாழ்.ஆயர் அதி வண. தோமஸ் சவுந்தரநாயகம் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக குரு முதல்வர் வணபிதா யஸ்ரின் ஞானப்பிரகாசம், வட மாகாண கல்வி விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன், யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார்,வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன்,மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வராட்ணம்,யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ)

# வன்னிமக்களின் சாட்சியங்களையும் கோரிக்கைகளையும் நிராகரிக்கும் உரிமை எவருக்கும் கிடையாது

## இ.தொ.கா.தலைவர் முத்துசிவலிங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவிற்கு சாட்சியமளித்த வன்னிப் பிரதேச தமிழ் மக்கள் தமது அவலத்தின் அனுபவங்களை அப்படியே தெரிவித்துள்ளனர்.

இந்த மக்களின் சாட்சியங்களையும் கோரிக்கைகளையும் நிராகரிக்கும் உரிமை எவருக்கும் இல்லை. அப்படி நிராகரிப்பது மனிதத் தன்மையற்ற செயல் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சருமான முத்துசிவலிங்கம் தெரிவித்தார்.

இது குறித்து கொழும்பு ஊடகமொன்றிற்கு அவர் தெரிவிக்கையில்,

இலங்கையில் ஆணைக்குழுக்கள் அமைக்கப்படுகின்றதென்பது காலம் கடந்த விடயமாகத் தான் இதுவரை நோக்கப்பட்டது.

ஆனால் தற்போது அமைக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவானது அவ்வாறு அமையாது என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

இந்த ஆணைக்குழுவின் முன் சாட்சியமளித்தவர்களின் பட்டியலை நோக்கும் போது படித்த மட்டத்தினரும் அரசியல்வாதிகள், அதிகாரிகள், இராஜதந்திரிகளைக் கொண்டதாக மட்டும் அமையவில்லை.

உண்மையில் பாதிக்கப்பட்ட மக்களே நேரடியாகச் சாட்சியமளித்து தங்களது துயரங்களையும் அவலங்களையும் கண்ணீர் விட்டுக் கூறி கதறியுள்ளனர்.

அவர்களுக்கு நேர்ந்த துயரங்களை அனுபவத்தின் அடிப்படையிலேயே தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் அவர்களது சாட்சியங்களையும் கோரிக்கைகளையும் யாராலும் நிராகரிக்க முடியாது. அப்படி நிராகரிப்பது மனிதத் தன்மையற்றது.

அந்த மக்களால் தெரிவிக்கப்பட்ட விடயங்களை நிராகரிக்கவோ, மறுக்கவோ அவர்களின் வேண்டுகோள்களை உதாசீனம் செய்யவோ யாருக்கும் முடியாது.

ஜனாதிபதியும் மனித நேயத்துடன் இந்த விடயங் களை நோக்கிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பார் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

இதேவேளை பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நிவாரணம் அளிக்கப்பட்டு அவர்களும் சமாதான சூழலில் தங்களது சொந்த இடங்களில் பாதுகாப்பு உத்தரவாதத்துடன் உரிமைகளுடன் வாழக்கூடிய நிலையை உருவாக்குவதற்கான அழுத்தங்களை வழங்குவது எமது பொறுப்பாகும்.

இந்த விடயத்தில் கட்சி அரசியல் நலன் போன்ற வேறுபாடுகளை மறந்து நாம் செயற்படவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# பேருந்து கட்டண மீளாய்வு தொடர்பில் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

பேருந்து கட்டணத்தில் மாற்றம் கொண்டு வருவது குறித்து இந்த வாரம் போக்குவரத்துத்துறை அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக விரிவான கலந்துரையாடல் ஒன்று முன்னெடுக்கப்படும் என அந்த சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் அஞ்சன பிரியன்ஜித் குறிப்பிட்டுள் ளார்.

அண்மையில் வழி அனுமதிப்பத்திரம் இல்லாத பேருந்துகள் தொடர்பான பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்த தாகவும் இந்த விடயம் குறித்தும் பேச்சு வார்த்தையின் போது கவனம் செலுத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாளை செவ்வாய்க்கிழமை அமைச்சு அதி காரிகளுடன் இடம்பெறும் பேச்சு வார்த்தைகளில் சாதகமான பலன் கிட்டத் தவறும் பட்சத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகளை தமது சங்கம் ஆரம்பிக்கும் என எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

எப்படியிருப்பினும் இந்தப் பேச்சு வார்த்தை களுக்கு இலங்கை தனியார் பேருந்து உரிமை யாளர் சங்கத்திற்கும் அழைப்பு விடுக்கப் பட்டுள்ளதா என வினவிய போது அப்படியான அழைப்பு தமக்கு இதுவரை கிடைக்க அதன் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித் துள்ளார். (ஸ்ரீ-2)



யாழ்.நாவாந்துறை புனித வின்சென்ற் டீபோல் சபையின் நூற்றாண்டு விழா நினைவுமலர் நேற்று வெளியிடப்பட்டது. இந்நிகழ்வில் யாழ். ஆயர் வணபிதா தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, யாழ்.மத்தியஸ்த சபைத் தலைவர் இ.அ.அமரரட்ணம் ஆகியோர் உரையாற்றுவதையும் நாவாந்துறை சபைத் தந்தை ரி.எவ்.ராஜசிங்கம் அடிகளாரிடமிருந்து யாழ். ஆயர் முதற் பிரதியை பெற்றுக்கொள்வதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

## வடமராட்சி கிழக்கில் மேலுமொரு தொகுதி மக்கள் நாளை மீள்குடியேற்றம்

(கரவெட்டி)

யுத்தத்தினால் இடம்பெயர்ந்து வடமராட்சிப் பகுதிகளிலுள்ள உறவினர்கள், நண்பர்களின் வீடுகளில் நீண்டகாலமாக தங்கியுள்ள உடுத்துறை மற்றும் ஆழியவளை ஆகிய கிராமசேவையாளர் பிரிவுக்குட்பட்ட மக்களை நாளை செவ்வாய்க்கிழமை அவர்களுடைய சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் நண்பகல் 12 மணிக்கு முன்னதாக இவர்களுக்கான பதிவுகள் மேற்கொள்ள இருப்பதனால், சொந்த இடங்களுக்கு வந்து தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு இராணுவத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2-24)

## மூத்த பிரஜைகள் பேரவையின் கொடிவாரம் ஒக்.1 இல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டம் மூத்த பிரஜைகள் கொடித் தினமான ஒக்டோபர் மாதம் முத லாம் திகதியிலிருந்து ஒரு வார காலத்திற்கு கொடி வாரத்தை கொண்டாடத் தீர்மானித் துள்ளது.

2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்ட இப் பேரவையில் இணைந்து இயங்கிக் கொண்டிருக்கும் சகல பிரதேச மூத்த பிரஜைகள் சங்கங்கள், கொடிகளை விற்பனை செய்வதற்கும் மற்ற வழிகளிலும் ஒத்துழைப்பினை வழங்கவேண்டுமென கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன் பிரதேச சங்கங்கள் மூத்த பிரஜைகளின் பிரச்சினைகளைக் கண்டறிந்து உதவி செய்து வருகின்றமையும் இதில் ஆள் பற்றாக்குறை, நிதி போதாமை போன்றவைகளால் மூத்த பிரஜைகளின் சகல பிரச்சினைகளையும் கண்டு உதவிட தடையாகவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

எனவே, கொடிவாரத்தினை வெற்றிகரமாக நடைபெறச் செய்வதற்கு அனைத்து மக்களினதும், மாணவர்களினதும் உதவியையும், பங்களிப்பினையும், ஒத்துழைப்பினையும மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவை வேண்டி நிற்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## கொச்சைத் தமிழில் பேசி கொள்ளையடித்த வியாபாரிகள்

(கரவெட்டி)

வடமராட்சி கரவெட்டிப் பகுதியில் வீடு வீடாகச் சென்று வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவோரின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகிறது.

இவர்கள் சில வேளைகளில் வீடுகளில் ஆட்கள் இல்லாத சமயம் பார்த்து தமது திருட் டுக் கைவரிசையைக் காட்டி வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாகத் தெரிய வருவதாவது,

நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் வியாபார நோக்கமாக வந்த இரு வியாபாரிகள் தாம் பழைய பாத்திரங்களை வாங்குவதாக வீட்டு உரிமையாளரிடம் கொச்சைத் தமிழில் பேசி வதிரியில் உள்ள வீடு ஒன்றினுள் உள் நுழைந்தனர்.

வீட்டு உரிமையாளர் தன்னிடமுள்ள பழைய பாத்திரங்களைத் தருவதாகக் கூறி, அதனை சேகரிக்க வீட்டின் பின்புறத்திற்குச் சென்றவேளையில் அச்சமயம் பார்த்து அவ்விரு வியாபாபாரிகளும் தம் திருட்டுக் கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

வீட்டு உரிமையாளரின் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசியைத் திருடி தலைமறைவாகியுள்ளனர்.

வீட்டு உரிமையாளர் வந்து பார்த்தபோது தனது கையடக்கத் தொலைபேசி களவாடப்பட்டதும், குறித்த நபர்கள் இருவரும் தலைமறைவாகியதும் தெரியவந்தது.

எனவே, பொதுமக்கள் இவர்கள் குறித்து மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என சுட்டிக்காட்டப்படுகிறது. (ஸ்ரீ-2-24)

## சிறுவர், முதியோர் வாரத்தை முன்னிட்டு விழிப்புணர்வு ஊர்வலம்

(அல்வாய்)

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலகத்தினால் சிறுவர் வாரம், முதியோர் வாரத்தை முன்னிட்டு விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெறவுள்ளது.

இதற்கமைய அடுத்தமாதம் 2ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு இவ் ஊர்வலம் பருத்தித்துறை புதிய சந்தைத் தொகுதியில் இருந்து ஆரம்பித்து, முதலாம் கட்டை ஒழுங்கையிலுள்ள வடமராட்சி வலயக் கல்விப் பணிமனைக்கு சென்றடையவுள்ளது.

இவ் ஊர்வலத்தில் வடமராட்சி வடக்கைச் சேர்ந்த மூன்று பாடசாலைகளின் பான்ட் வாத்தியங்களும் மற்றும் சிறுவர் மற்றும் முதியோர் ஆகியோரின் தேவைகளை வலியுறுத்தும் பதாகைகளை கொண்டு செல்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், இப் பகுதியிலுள்ள விளையாட்டுக் கழகங்களிலுள்ள உறுப்பினர்கள், செயலக உத்தியோகத்தர்கள், கிராமசேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரையம் இவ்வூர்வலத்தில் பங்கேற்குமாறு வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் இரா. வரதீஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளார். (ஸ்ரீ-2-19)




## தமிழர் தம் தன்மானத்தை கட்டிக்காக்க கல்வி,கலாசாரத்தை பாதுகாக்க வேண்டும்

### திருமறைக்கலாமன்ற பணிப்பாளர் மரியசேவியர் அடிகளார் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர் தன் தன்மானத்தை கட்டிக்காக்க வேண்டுமானால் கல்வி, கலாசாரம் என்பவற்றினால் தான் முடியுமென திருமறைக் கலாமன்றத்தின் பணிப்பாளர் டீ.மரியசேவியர் அடிகளார் தெரிவித்துள்ளார்.

திருமறைக்கலாமன்றத்தினால் நடத்தப்படவுள்ள முத்தமிழ் சங்கமம் விழாவின் ஒரு பகுதியாக நடைபெற்றுவரும் தேச வழமை பற்றிய கருத்துரைப் போட்டி நேற்று முன்தினம் திருமறைக்கலாமன்ற கலைத் தூது மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கலைகள் எமது அடையாளம் ஆகும். அவை அழிந்தால் தமிழ் இனத்தின் அடையாளமும் அழிந்து விடும். அழிந்து செல்லும் . நமது பாரம்பரியங்களைக் காக்கும் பொறுப்பு எமக்குண்டு. இக்கலைகள் அருகிச் செல்வதை எம் கண்களால் காண முடிகிறது.

தமிழர் தம் தன்மானத்தைக் கட்டிக் காக்க வேண்டுமானால், கல்வி மற்றும் கலாசாரத்தைப் பாதுகாத்தல் வேண்டும்.ஏனெனில் அவைகளால் மட்டுமே எமது தன்மானத்தைப் பாதுகாக்கமுடியும்.

இளைஞர்களின் கலை மீதான ஆர்வம் தற்காலத்தில் குறைந்து செல்கிறது. ஆனால் ஒரு சிலர் மட்டுமே ஆர்வத்துடன் பங்குபற்றுகின்றனர்.

மேலும் இளைஞர்கள் முடிவெடுப்பதில் தயக்கம் காட்டி வருகின்றனர்.

எதிர்வரும் 15,16 ஆம் திகதிகளில் மொனராகலை, அம்பாறை, அவிசாவளை, கண்டி, ரஜரட்டை, காலி மற்றும் பாணந்துறை ஆகிய பிரதேசங்களில் இயங்கிவரும் திருமறைக் கலா மன்றத்தினரின் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.



இவர்கள் தென்னிலங்கை கலைஞர்களாக இருந்த போதிலும் தமிழில் தமது கூத்துக்கள், நாடகங்கள் மற்றும் பேச்சு ஆகியவற்றை நடத்தவுள்ளனர். இவ்வாறு பிறமாவட்டங்களில் இருந்து நமது மாவட்டத்திற்கு வருகை தந்து தமது திறமைகளை வெளிக்காட்டும் போது எம்மவரின் நிலைமையை நினைத்து வேதனைப் படுகிறோம் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2-6)


## பொதுக்கூட்டம்

(காரைநகர்)

காரைநகர் மணிவாசகர் சபையின் எழுபதாவது ஆண்டுப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

மணிவாசகர் சபைத்தலைவர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளையின் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் புதிய நிர்வாக சபைத் தெரிவு இடம்பெறவுள்ளதால் சைவ அபிமானிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சபையின் செயலாளர் து. நாகேந்திரன் கேட்டுள்ளார். (ஸ்ரீ-246)

# வியாபாரிமூலையில் அமைந்துள்ள ஸ்ரீ அருளம்பல சுவாமிகளின் திருச்சமாதி



ஸ்ரீ அருளம்பல சுவாமிகள் யாழ். வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்தவர். ஆன்மீக நாட்டம் கொண்டு ஸ்ரீ சுவாமிகள் நாகப்பட்டினம் (தமிழ்நாடு) சென்று அன்னை நீலலோசனி தாயின் அனுக்கிரகத்தைப் பெற்று முழுமை அடைந்தார். சுவாமிகள் பாண்டிச்சேரி சென்றடைந்த போது மேன்மை கவி சுப்பிரமணிய பாரதியார் சுவாமிகளை சந்தித்து தனது ஐயப்பாடுகளில் தெளிவு கொண்டு சாந்தம் பெற்று சுவாமிகளை குருவாக கொண்டார் எனக் கூறப்பட்டுள்ளது.

தமிழ் கவி சுப்பிரமணிய பாரதியார், தனது கவிதைகளிலும் அனுபவ வார்த்தைகளிலும் சுவாமிகளின் மேன்மையையும் அருள் வலிமையையும் '' யாழ்ப்பாணத்து சுவாமிகள்'' என நினைவு கூர்ந்துள்ளார். தனது அந்திம காலத்தை முன்பே தெரிந்த சுவாமிகள் 47 நாட்கள் சமுத்திரத்தில் ஜல சமாதியில் இருந்து வெளிவந்து தனது ஊரான வியாபாரிமூலையை அடைந்தார். தற்சமயம் சமாதி கொண்டுள்ள இடத்தில் வந்து அமர்ந்த சுவாமிகள் சிறிது காலத்தில் தன்னை நாடி வந்தவர்களின் குறைகளைப் போக்கி பல அற்புதங்களை செய்துள்ளார். இதை இன்றும் சுற்றுவட்டாரத்தில் உள்ள வயதானவர்கள் பேசிக்கொள்வார்கள்.

ஸ்ரீ அருளம்பல சுவாமிகள் தனது திருவுடலை தனது ஊரிலேயே சமாதியில் வைக்கும்படி பக்தர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதன்படி ஸ்ரீ அருளம்பலசுவாமி திருசமாதி பருத்தித்துறை நகருக்கு அருகாமையில் கடற்கரை சார்ந்த இடமாகிய வியாபாரி மூலையில் அமைந்துள்ளது.

ஸ்ரீ அருளம்பல சுவாமிகள் 1942 இல் தியான நிலையில் ஜீவ சமாதி எய்தினார். அதே இடத்தில் சுவாமிகளின் திருவுடல் வைக்கப்பட்டது. இச் சமாதியின் மீது சிவலிங்க பிரதிஷ்டை செய்து 2004 ஆம் ஆண்டில் புனருத்தாரணம் செய்யப்பட்டு கும்பாபிஷேக குடமுழுக்கு வைதீக முறைப்படி நிறைவு செய்யப்பட்டது.

தனது சமாதியில் வந்து அமர்ந்து பூசிப்பவர்கள், தியானிப்பர்கள் அவரவர்களின் விருப்பப்படி பயன்பெறுவர் என திருவாய் மலர்ந்தருளினார். சுவாமிகள் சமாதியை தரிசிப்பவர்கள், தியானிப்பவர்கள், பூசிப்பவர்கள் இன்றும் பயன் பெற்றுக் கொண்டே இருக்கிறார்கள்.

கடற்கரை ஓரத்தில் வியாபாரிமூலையில் எளிமையாக அமைந்துள்ள இத் திருச் சமாதியை தரிசித்து அருள்பெற வேண்டுகிறார்கள் சுவாமிகளின் திருச்சமாதியை பராமரித்து வரும் அருளானந்த அறக்கட்டளையினர்.

தொண்டு சேவையில் அதிக கவனம் செலுத்தி வரும் அருளானந்தா அறக்கட்டளையினர் முதற் கட்டமாக மாணவர்களின் கல்வியில் ஆர்வம் கொண்டு 2009 ஆம் ஆண்டு கட்டுரைப்போட்டி நடாத்தி அதில் வெற்றி பெற்ற மணற்காடு ஊரை (வடமராட்சி கிழக்கு) சேர்ந்த மாணவனுக்கு ஒரு கணனி அன்பளிப்புச் செய்தனர்.

பிரதி ஒவ்வொருவருக்கும் செய்யும் சேவையை இறைவனிற்கும் ஸ்ரீ அருளம்பல சுவாமிகள் திருப்பாதத்திற்கும் அர்ப்பணித்து முதன் முறையாக ஜோசப் வாஸ் (15 வயது) என்ற புனித பற்றிக் கல்லூரி மாணவனிற்கு அருளானந்தா அறக்கட்டளை செயலாளரால் கணனி அன்பளிப்புச் செய்யப்பட்டது.

இந்த வருடம், தமது கல்வியைத் தொடர்வதில் சிரமங்களை எதிர்நோக்கியுள்ள வடக்கு -கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவ. மாணவியருக்கு புலமைப்பரிசில் வழங்கவும் அருளானந்தா அறக்கட்டளை முன்வந்துள்ளது. அதாவது, மாதா மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை தொடர்ச்சியாக ஒரு சில வருடங்களுக்கு வழங்கவுள்ளனர். இப் புலமைப்பரிசில்களுக்கான தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டு ஸ்ரீ அருளம்பல சுவாமிகளின் வருடாந்த குருபூசை தினமான எதிர்வரும் மார்கழி முதலாம் திகதி அவரது திருச்சமாதியில் வைத்து வழங்க ஏற்பாடு செய் யப்பட்டுள்ளது.

கடற்கரை ஓரத்தில் வியாபாரிமூலையில் எளிமையாக அமைந்துள்ள இத்திருச் சமாதியை தரிசித்து அருள் பெறவேண்டுகிறார்கள் அருளானந்தா அறக்கட்டளையினர். தொடர்புகளுக்கு இணையத்தளம் http://arullananthatrust.com அருளானந்தா அறக்கட்டளை, வியாபாரிமூலை, அல்வாய் வடக்கு, பருத்தித்துறை. தொலைபேசி இல:- 021 2262285

# திருமலை சிறைச்சாலையில் தீ!

(கொழும்பு)

திருகோணமலை சிறைச்சாலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைதிகளிடமிருந்து செல்லிடத் தொலைபேசிகள், பணம் ஆகியவை சிறைக் காவலர்களால் பறிமுதல் செய்யப்பட்டதால்ஆத்திரமடைந்த கைதிகள் தம் வசமிருந்த படுக்கை விரிப்புக்களுக்கு தீ வைத்ததாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இதனால் ஏற்பட்ட புகைமூட்டத்தால்' கைதிகள மூச்செடுக்க முடியாது திணறினர்.

இந்தச் சம்பவம் குறித்து இலங்கை கடற்படை தீயணைப்புப் படைப்பிரிவுக்கு அறிவுறுத்தப்பட்டு புகைமூட்டம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

திடீர் சோதனை நடவடிக்கையின்போதே கைதிகளிடமிருந்து செல்லிடத்தொலைபேசிகள், பணம் ஆகியவை கைப்பற்றப்பட்டதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.இது தொடர்பில் துறைமுகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

# கிராம அலுவலர்களுக்கான ஆட்சேர்ப்பில் புதிய நடைமுறைகளைப் பின்பற்ற திட்டம்

(கொழும்பு)

கிராமசேவை அதிகாரிகளை சேர்த்துக் கொள்ளும் திட்டத்தில் புதிய நடைமுறைகள் சில பின்பற்றவிருப்பதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் இதுவரை காலமும் கிராமசேவை அதிகாரிகளின் நியமனம் தரம் II இலிருந்தே ஆரம்பமாகியது. இனி புதிய நடைமுறையின் பிரகாரம் தரம்III என மாற்றப்படவிருப்பதாகவும் எதிர்காலத்தில் இவை தரம் III,II,I மற்றும் அதியுயர் தரம் என்னும் நான்கு பிரிவுகளையுடையதாக அமைந்திருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்பொழுது கிராமசேவை அதிகாரிகளின் அதியுயர் தரத்தில் எழுபது வெற்றிடங்கள் நிலவுவதாகவும், அமுல்படுத்தப்படவுள்ள புதிய நடைமுறைகளின் படி கூடுதலானவர்களுக்கு புதவியுயர்வு பெறும் சந்தர்ப்பம் கிட்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.நாடு முழுவதும் தற்பொழுது 14 ஆயிரத்து 22 கிராமசேவை அதிகாரிகள் கடமையாற்றுகின்றனர்.

புதிய நடைமுறைக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றதும் மேலும் இரண்டாயிரம் பேரை புதிதாக இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# விடுதலைப்புலிகளின் 6 சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படவுள்ளது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆறு சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட உள்ளதாக சட்டமா அதிபர், உச்சநீதிமன்றில் அறிவித்துள்ளார்.

குறித்த உறுப்பினர்களினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு தொடர்பில் பதிலளித்தபோது இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த சந்தேக நபர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் சார்பில் கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் பல்வேறு நாசவேலைகளில் ஈடுபட்டிருந்ததாக விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ்க் குறித்த ஆறு விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு எதிராகவும் கொழும்பு மற்றும் வவுனியா உயர் நீதிமன்றங்களில் வழக்குத் தொடரப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

# டுபாயில் மரணதண்டனை விதிக்கப்பட்டவருக்கு பொது மன்னிப்பை பெற்றுக்கொடுக்க முயற்சி

(கொழும்பு)

டுபாயில் மரண தண்டனை விதிக்கப்பட்ட இலங்கையருக்கு பொதுமன்னிப்பைப் பெற்றுக்கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வெளிவிவகார அமைச்சு தகவல்கள் தெரிவிக்கின்றன.

காதலியின் கணவனை திட்டமிட்டு படுகொலை செய்த குற்றத்திற்காக இலங்கையைச் சேர்ந்த ருவான் குமார என்பவருக்கு டுபாய் நீதிமன்றம் மரண தண்டனை விதித்திருந்தது.

நட்ட ஈட்டுத் தொகையொன்றை வழங்கினால் ருவான் குமாரவை மன்னிக்க முடியும் என் கொலையுண்டவரின் மனைவி மற்றும் உறவினர்கள் அறிவித்துள்ளதாக பெயர் குறிப்பிட விரும்பாத வெளிவிகார அமைச்சு உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

டுபாய் சட்டத்தின் பிரகாரம் மரண தண்டனை விதிக்கப்பட்டாலும் சம்பந்தப்பட்ட தரப்பினர் அல்லது மன்னர் விரும்பினால் தண்டனையை தளர்த்த முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் அடிப்படையில் ருவான் குமாரவிற்கு பொதுமன்னிப்பு பெற்றுக்கொடுப்பதற்கான முனைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

குறித்த இலங்கையருக்கு துப்பாக்கிப் பிரயோகத்தின் மூலம் மரண தண்டனை விதிக்கப்பட உள்ளதாகவும், தண்டனைத் திகதி இதுவரையில் அறிவிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையருக்கு முதலில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டதாகவும், பின்னர் விடுக்கப்பட்ட மேன்முறையீட்டின் அடிப்படையில் மரண தண்டனை விதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# வெடிபொருள் வெடித்ததில் சிறுவன் படுகாயம்

(விஸ்வமடு)

முல்லைத்தீவு விஸ்வமடு நாச்சிக்குடாப் பகுதியில் வெடிபொருள் ஒன்று வெடித்ததில் சிறுவன் ஒருவன் படுகாயமடைந்துள்ளான்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் நண்பகல் 12.30 மணியளவில் கடந்த 19 ஆம் திகதி மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட நாச்சிக்குடாப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் இப்பகுதியைச் சேர்ந்த விஸ்வமடு மகாவித்தியாலயத்தில் தரம் 9 இல் கல்வி கற்கும் ஆறுமுகம் கோபி (வயது- 14) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இவர் சிகிச்சைக்காக கிளிநொச்சி தர்மபுரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஸ்ரீ

# 20 வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் கிளைகள் இலங்கையில் நிறுவப்படவுள்ளன

20 வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் கிளைகள் இலங்கையில் நிறுவப்படவுள்ளதாக உயர் கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் சுனில் ஜயந்த நவரட்ன தெரிவித்துள்ளார்.

20 நாடுகளைச் சேர்ந்த முன்னணி பல்கலைக்கழகங்கள் கிளைகளை நிறுவுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் கிளைகளை இலங்கையில் நிறுவுவதன் மூலம் பெருமளவிலான அந்நிய செலாவணியை சேமிக்க முடியும் எனவும் அரசாங்கத்தின் இந்தத் திட்டத்திற்கு பெற்றோர் வரவேற்பு தெரிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவில் உயர் கல்வியைத் தொடரும் தமது புதல்வருக்காக வருடாந்தம் 30 ஆயிரம் அமெரிக்க டொலர்களை செலவிட நேரிட் டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

40ஆயிரம் மாணவர்கள் வருடாந்தம் உயர் கல்வியைத் தொடர்வதற்கு தகுதி பெற்றுக்கொள்கின்ற போதிலும் உள்ளூர் பல்கலைக்கழகங்களில் 22 ஆயிரம் மாணவர்களுக்கே சந்தர்ப்பம் கிடைக்கப் பெறுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் வெளிநாட்டில் உயர்கல்வியைத் தொடர்வதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியா, ரஷ்யா, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா, நியூசிலாந்து, இங்கிலாந்து மற்றும் பெல்ஜியம் போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்து பல்கலைக்கழகங்களின் கிளைகளை நிறுவுவது குறித்து ஆய்வு செய்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சர்வாதிகாரிகளின் வழியையே ஜனாதிபதி பின்பற்றுகின்றார்

## ரில்வின் சில்வா குற்றச்சாட்டு

(கொழும்பு)

இடி அமீன், மாகோஸ், பெடிஸ்டா போன்ற சர்வாதிகாரிகளின் வழியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பின்பற்றி வருவதாக ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா குற்றம் சுமத்தியுள்ளார்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு எதிராக வழக்கு விசாரணைகள் முழுக்க முழுக்க அரசியல் காழ்ப்புணர்ச்சியினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்க்கட்சியில் போட்டியிடத் தீர்மானித்ததன் பின்னர் சரத் பொன்சேகாவை அரசாங்கம் ஓர் தேசத்துரோகியாக நோக்குவதாகவும் கடமையில் ஈடுபட்ட காலத்தில் அரசியலில் ஈடுபட்டதாக சரத் பொன்சேகாவிற்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டால் தற்போது இராணுவச் சேவையில் ஈடுபட்டுள்ள பெரும் எண்ணிக்கையிலான அதிகாரிகளுக்கு எதிராக யுத்த நீதிமன்றில் வழக்குத் தொடர நேரிடும் என ரில்வின் சில்வா சிங்கள பத்திரிகையொன்றுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.



சரத் பொன்சேகாவை எந்த வழியிலாவது தண்டிக்கும் நோக்கில் மூன்று யுத்த நீதிமன்றங்களில் கீழ் வழக்குத் தொடரப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான சர்வாதிகார முறையிலான ஆட்சியை கடந்த காலங்களில் பல உலகத் தலைவர்கள் மேற்கொண்டுள்ளதாகவும் இறுதியில் அவர்களை மக்கள் நிராகரித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# ஆரியவதிக்கு மனநோய் இல்லை மருத்துவர்கள் அறிக்கை

சவுதி அரேபியாவில் இருந்து உடலில் ஆணிகள் ஏற்றப்பட்டு சித்திரவதைகளுக்கு உள்ளான நிலையில் நாடு திரும்பிய ஆரியவதி என்ற இலங்கைப் பணிப்பெண் எவ்விதமான மனநோயினாலும் பாதிக்கப்பட்டிருக்கவில்லை என மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்

சில வாரங்களுக்கு முன்னர் சவுதியிலிருந்து நாடு திரும்பிய ஆரியவதி என்ற 49 வயது பெண்மணியின் உடலில் சுமார் இரண்டு அங்குலம் வரை நீளமான 24 ஆணிகளும் ஊசிகளும் இருப்பதாக கண்டறியப்பட்டது.

பின்னர் நீண்ட நேர சத்திரசிகிச்சைக்குப் பின்னர் அவரது உடலில் இருந்து 13 ஆணிகளையும் ஐந்து ஊசிகளையும் மருத்துவர்கள் அகற்றினர். எஞ்சிய ஆணிகளை அகற்றினால் அவரது நரம்புகள் பாதிக்கப்படலாம் என தெரிவித்துள்ள மருத்துவர்கள் அவற்றை அவரது உடலிலேயே விட்டு விட்டனர். தான் பணிபுரிந்த வீட்டு எஜமானும் எஜமானியும் சேர்ந்து தனக்கு தண்டனையாக ஆணிகளை உடம்பில் ஏற்றியதாக ஆரியவதி தெரிவித்தார்.

இதற்கிடையில் ஆரியவதிக்கு நேர்ந்த இந்த கொடூரத்தை கண்டித்தும் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் புரியும் வீட்டுப் பணியாட்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் கோரி கொழும்பில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டதை தொடர்ந்து அரசாங்க மட்டத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படு வதாக அறிவிக்கப்பட்டது.

எனினும் இந்தக் குற்றச்சாட்டை உறுதியாக மறுத்த சவுதி அரசாங்கம் ஆரியவதி பொய் கூறுவதாவும் அவரது உடலில் ஆணிகள் இருந்திருந்தால் விமான நிலையத்தில் உலோகங்களை கண்டறியும் கருவி அதனை உறுதிப்படுத்தியிருக்கும் என்று வாதங்களை முன்வைத்திருந்தது. ஆனால் இது தொடர்பில் பிபிசியிடம் கருத்து வெளியிட்டிருந்த ஆரியவதி, இரவு நேரத்தில் தான் விமான நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டதாகவும் பாதுகாப்பு சோதனை கருவியை கடந்த போது ஒலி எழுப்பியதாகவும் ஆனால் தன்னை எவரும் கேள்வி கேட்கவில்லை எனவும் கூறினார்.

இந்நிலையில் அவரது மனநிலையில் பாதிப்பு இருக்கலாம் எனவும் அதனால் அவர் தனக்கு தானே ஆணிகளை ஏற்றிக்கொண்டிருக்கலாம் எனவும் வாதிடப்பட்டன. ஆனால் தற்போது மனநிலை பரிசோதனைகளை நடத்தியுள்ள மருத்துவர்கள் ஆரியவதிக்கு எவ்விதமான மனநோயும் இல்லையென அறிக்கை வழங்கியுள்ளனர்.

ஆரியவதி விவகாரம் எந்த மட்டத்தில் உள்ளது என்று சவுதியிலுள்ள இலங்கைத் தூதரகத்திடம் தொடர்பு கொண்டு கேட்ட போது இப்போது தான் ரம்ழான் பண்டிகை விடுமுறை முடிந்துள்ளது. இனிமேல் தான் அடுத்தகட்ட நடவடிக்கைகள் பற்றி தெரியவரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# 27.09.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



## நிகழ்வுகள்

- ❖ 1590 - ஏழாம் ஏர்பன் பாப்பரசர் பதவியேற்ற 13 ஆவது நாள் இறந்தார். இவரே மிகக்குறுகிய காலம் பாப்பரசராக இருந்தவர்.
- ❖ 1777 - பென்சில்வேனியாவின் லான்காஸ்டர் நகரம் ஐக்கிய அமெரிக்காவின் ஒரு நாள் தலைநகராக விளங்கியது.
- ❖ 1821 - மெக்சிகோ, ஸ்பெயினிடமிருந்து விடுதலை அடைந்தது.
- ❖ 1825 - உலகின் முதலாவது பயணிகள் தொடருந்து இங்கிலாந்தில் சேவைக்கு விடப்பட்டது.
- ❖ 1854 - "ஆர்க்டிக் கப்பல்" அட்லாண்டிக் கடலில் மூழ்கியதில் 300 பேர் கொல்லப்பட்டனர்.
- ❖ 1893 - சிகாகோவில் இடம்பெற்ற உலகச் சமயங்களின் பாராளுமன்ற மாநாடு முடிவடைந்தது.
- ❖ 1905 -அல்பேர்ட் ஐன்ஸ்டைன் முதற் தடவையாக $E=mc^2$ என்ற சமன்பாட்டை அறிமுகப்படுத்தினார்.
- ❖ 1916 - எதியோப்பியாவில் இடம்பெற்ற அரண்மனைப் புரட்சியை அடுத்து இயாசு மன்னர் பதவியை இழந்தார்.
- ❖ 1928 - ஐக்கிய அமெரிக்கா சீனக் குடியரசை அங்கீகரித்தது.
- ❖ 1937 - கடைசி பாலிப் புலி கொல்லப்பட்டது.
- ❖ 1939 - இரண்டாம் உலகப் போர்: வார்சா ஜெர்மனியிடம் சரணடைந்தது.
- ❖ 1940 - இரண்டாம் உலகப் போர்: ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி ஆகியன முத்தரப்பு உடன்பாட்டில் பேர்லின் நகரில் கையெழுத்திட்டன.
- ❖ 1959 - ஜப்பானின், ஹொன்ஷூ நகரில் இடம்பெற்ற புயலில் 5ஆயிரம் பேர் வரையில் கொல்லப்பட்டனர்.
- ❖ 1977 - ஒண்டாரியோவில் 300 மீற்றர் உயர தொலைக்காட்சிக் கோபுரம் ஒன்றில் சிறு விமானம் ஒன்று மோதியதில் அதில் பயணம் செய்த அனைவரும் கொல்லப்பட்டனர். கோபுரம் இடிந்து வீழ்ந்தது.
- ❖ 1983 - ரிச்சார்ட் ஸ்டோல்மன் க்னூ செயற்றிட்டத்தைப் பகிரங்கமாக அறிவித்தார்.
- ❖ 1988 - ஆங் சான் சூ கீ மக்களாட்சிக்கான தேசிய முன்னணியை பர்மாவில் ஆரம்பித்தார்.
- ❖ 1993 - அப்காசியாவில் சுகுமியில் ஜோர்ஜியப் பொதுமக்கள் ஆயிரக்கணக்கில் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டனர்.
- ❖ 1996 - ஆப்கானிஸ்தானில் முகமது ஓமார் தலைமையிலான தலிபான் தீவிரவாதிகள் காபூல் நகரைக் கைப்பற்றி ஜனாதிபதி புரானுடீன் ரபானியை ஆட்சியிலிருந்து விரட்டினர். முன்னாள் ஜனாதிபதி முகமது நஜிபுல்லா காபூல் நகர மின்சாரக் கம்பத்தில் மக்கள் முன்னிலையில் தூக்கிலிடப்பட்டுக் கொல்லப்பட்டார்.
- ❖ 1997 - செவ்வாய் தளவுளவியுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டன.
- ❖ 1998 - கிளிநொச்சி நகரம் விடுதலைப் புலிகளினால் ஓயாத அலைகள் இரண்டு நடவடிக்கை மூலம் வெற்றி கொள்ளப்பட்டது.
- ❖ 2002 - கிழக்குத் தீமோர் ஐக்கிய நாடுகள் சபையில் இணைந்தது.

## பிறப்புகள்

- ❖ 1907 - பகத் சிங், இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (இ. 1931)
- ❖ 1933 - நாகேஷ், நகைச்சுவை நடிகர் (இ. 2009)
- ❖ 1953 - மாதா அம்ருதானந்தமயி, இந்திய ஆன்மீகவாதி
- ❖ 1979 - லில் வெய்ன், அமெரிக்க ராப் இசைக் கலைஞர்

## இறப்புகள்

- ❖ 1907 - ஜேம்ஸ் எச்.மார்ட்டின், யாழ்ப்பாணம் கத்தோலிக்க கார்டியன் பத்திரிகை ஆசிரியர்.
- ❖ 1972 - எஸ்.ஆர்.ரங்கநாதன், இந்தியக் கணிதவிலாளர் (பி.1892)
- ❖ 1996 - முகமது நஜிபுல்லா, ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி (பி. 1947)

**1998 - கூகுள் தேடுபொறி ஆரம்பிக்கப்பட்டது.**



# ஈழத்தவர் வரலாறு

48


## 8.நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம்

### (கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)

**புவனேகவாகுகள்**

யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றினை நுணுகி ஆராயில் மூன்று புவனேகவாகுக்ள் ஏதோ ஒவ்வொரு வகையில் வரலாற்றின் போக்கில் சம்பந்தப்பட்டிருப்பதனை அறிய முடியும்.

'இலகிய சகாத்த மெண்ணூற்றெழுபதா மாண்டு' என முற் குறித்த செய்யுள்களில் வரும், சகவருடம் 870 ஆம் ஆண்டு என்றால் அது கி.பி.948 ஆம் ஆண்டாகும். எனவே, 948 ஆம் ஆண்டுகளில், அல்லது பத்தாம் நூற்றாண்டில் வடவிலங்கை அரசில் புவனேகவாகு என்ற அரசர் அல்லது அரசப் பிரதிநிதிகள் இருந்துள்ளனரா? கி.பி.944 இல் பராந்தகச் சோழன் இலங்கை மீது படையெடுத்து சிங்கள மன்னனானப்



பழைய நல்லூர்க் கந்தசுவாமி கோயில் அமைந்திருந்த இடத்தில் அமைக்கப்பட்ட கிறிஸ்தவ தேவாலயம் (முத்திரைச் சந்தி)

புறங்கண்டு, சிங்கைநகர் அரசனைக் கொன்று, வடவிலங்கையை வென்று ஒரு இராசப்பிரதிநிதியை நியமித்து விட்டுசோழ என்பவனின் தலைமையில் அனுப்பியபடை ஒன்று கலா என்ற துறையில் (கலா என்பது ஊர்காவற்றுறை: களபூமி) இறங்கி இருநாட்

நாடு மீண்டான். அந்த இராசப் பிரதிநிதி புவனேகவாகுவாக இருக்க லாம். இக்கால கட்டத்தில் வடவிலங்கையில் புவனே கவாகு என்ற ஒருவன் அரசனாக அல்லது அரசப் பிரதிநிதியாக இருந்துள்ளான் என்பதற்குச் சில ஆதாரங்களுள்ளன.

பத்தாம் நூற்றாண்டிலே பார்சியாவின் அரசனான டோபாக் என்பவன், கர்ஷாஸப்

பயணதூரமுள்ள ஓரிடத்தில் வாகுவென்னும் அரசனை வெற்றி கொண்டது என்று அசேதி என்ற பர்சியன் கர்ஷிஸ்ப் நமா என்னும் கிரந்தத்தில் எழுதியுள்ளான். 'பத்தாம் நூற்றாண்டில் வாகு என்னும் பெயருடன் இலங்கை அரசில் யாழ்ப்பாண மொழிந்த பிறவிடத்தில் எவருமிருந்திலர். வாகு என்று பார்சிய நூல் குறிப்பிடும் மன்னன் அல்லது சிற்றரசன் அக்

கால வேளையில் சோழரின் அரசப் பிரதிநிதியாக வடவிலங்கையில் விளங்கிய புவனேகவாகுவாக இருத்தல் வேண்டும்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலின் பூசகராக் விளங்கிய சின்னமனத்துளார் என்பவர் புவனேகவாகு என்பவருக்கு ஒருநாள் விருந்து வைத்ததாகவும், அவ்விருந்தில் பரிமாறப்பட்ட பதார்த்தங்கள் ஒவ்வொன்றிற்கும் புவனேகவாகு ஒவ்வொரு வெண்பா பாடியதாகவும் வைபவமாலை குறிப்பிடுகின்றது. இந்தச் சின்னமனத்துளார் சிதம்பர தீட்சகரின் மகன், பெரியமனத்துளராரின் பேரன். நாகதீவின் (யாழ்ப்பாண அரசின்) முதல் மன்னனான உக்கிரசிங்கன் காலத்தில் (கி.பி.785) தான், பொரியமனத்துளார் இந்தியாவிலிருந்து கோயில் திருப்பணிக்காக இங்கு வந்துள்ளார்.

எனவே, மூன்று தலைமுறைகளை மனதிற்கொண்டு கணிக்கும்போது, அசேதி சந்தித்தவாகு, சின்னமனத்துளார் விருந்தளித்த புவனேகவாகுவாக இருத்தல் சாத்தியமாகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பௌத்தச் செல்வாக்கும், சிங்கள மக்களது ஆதிக்கமும் மேலோங்கி வந்ததால் உக்கிரசிங்கன் தனது தலைநகரான கந்தரோடையை (கதிரமலை)க் கைவிட்டு, புதியதொரு தலைநகரான சிங்கை நகரைத் தனது பெயரில் அமைத்து இடம் பெயர்ந்தான் என ஏற்கனவே கண்டோம். அந்தச் சிங்கைநகர் யாழ்ப்பாணக் குடாநாட்டிலமையாது பெருநிலப்பரப்பில் அமைந்தது எனவும் அறிந்தோம்.

கி.பி.944 இல் பராந்தகச் சோழன் (2ஆம் பராந்தகன்) சிங்கைநகர் மன்னனைக் கொன்று தனது பிரதிநிதியை உத்தரதேசத்தை நிர்வகிக்க நியமித்துள்ளான். எனவே, புவனேகவாகு என்ற இந்த முதலாவது அரசப் பிரதிநிதி கி.பி.948 இல் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை முதன் முதல் கட்டினானா?

அவ்வாறு கட்டியிருந்தால் அது நிச்சயமாக யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள நல்லூராக இருக்க வாய்ப்பில்லை. சிங்கைநகர் அமைந்திருந்த பெருநிலப்பரப்பிலுள்ள நல்லூராக இருந்திருக்க வேண்டுமெனத் துணியலாம். உண்மையில் இன்று கிடைக்கின்ற ஆதாரங்களிலிருந்து பூநகரியில் இன்று இருக்கின்ற நல்லூர் என்ற பிரதேசமே தமிழர் அரசின் புராதன நல்லூர் ஆகும் எனக் கொள்வதில் தவறில்லை. கி.பி.948 இல் முதலாவது நல்லூர்க் கந்தசுவாமி கோயில் அமைக்கப்பட்டது என முடிவு செய்தால், அக் கோயில் பூநகரி நல்லூரில் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

கலாநிதி க.குணராசா
செங்கை ஆழியான்

யாழ்ப்பாண வரலாற்றிற் சம்பந்தப்படும் இரண்டாவது புவனேகவாகு கி.பி.1248 ஆம் ஆண்டில் இடம்பெறுகிறான்.

கைலாயமாலை குறிப்பிடும் செய்யுளிலுள்ள 'இலக்கிய சகாத்த மெண்ணூற்றெழுபதா மாண்டு' என்ற வரி குறிப்பிடும் சகவருடம் 870 ஆம் ஆண்டை கி.பி.1248 ஆம் ஆண்டெனக் கணிக்கின்றனர். (தொடரும்)

## புலிகளால் வழங்கியதாக கூறப்படும் காணிகளை மீள வழங்கவோ நஷ்ட ஈடு வழங்கவோ முடியாது

### நல்லிணக்க ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு காணி வழங்குவதற்கான எந்த அதிகாரமும் கிடையாது. அவர்கள் வழங்கியதாகக் கூறப்படுகின்ற காணிகளை மீளக் கையளிக்க முடியாது. அதற்கான நஷ்ட ஈடுகளையும் வழங்க முடியாது என்று கற்றுக்கொண்ட பாடங்களுக்கும் நல்லிணக்கத்திற்கான ஆணைக் குழுவின் தலைவர் கிளிநொச்சியில் தெரிவித்தார்.

வன்னி நிலப்பரப்பில் விடுதலைப் புலிகள் நிலைகொண்டிருந்த போது தமது மாவீரர் குடும்பங்களுக்கு காணிகளை பகிர்ந்தளித்தனர். அவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகளுக்கான உறுதிகளையும் அவர்கள் வழங்கியிருந்தனர்.

இவ்வாறு வழங்கப்பட்ட காணிகளில் பெரும்பாலானவை வெளிநாடுகளில் குடியேறிவர்களது காணிகளாக இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

தற்போது போர் முடிவடைந்த நிலையில் தமது முன்னைய காணிகளுக்கு திரும்ப முனைந்தவர்களுக்கு அந்தக் காணிகளை வழங்க மறுத்துவருவதாகவும், அவர்களுக்கு காட்டுப் பகுதிகளில் காணி வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்தக் காணிகள் தண்ணீர் வசதியோ வேறு எந்த வசதிகளோ இல்லாத நிலங்கள் எனவும் கற்றுக்கொண்ட பாடங்களுக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கையில் பொதுமக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன் தாம் குடியேறி இருந்த முன்னைய காணிகளில் பயிர் செய்ததாகவும், வீடுகளை அமைத்திருந்ததாகவும் அவை அனைத்தும் தற்போது நாசமாக்கப்பட்டதாக தமது காணிகளை மீள வழங்க வேண்டும் என்று கோரியதுடன் நஷ்ட ஈட்டையும் வழங்க வேண்டுமென இவர்கள் நல்லிணக்க ஆணைக்குழு முன் கோரிக்கையை முன் வைத்தனர்.

இந்தக் கோரிக்கைக்கு பதில் அளிக்கையிலேயே கற்றுக்கொண்ட பாடங்களுக்கும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழு தலைவர், புலிகளுக்கு காணி வழங்குவதற்கான அதிகாரம் இல்லை எனக் குறிப்பிட்டதுடன் காணிகளை மீள வழங்கவோ நஷ்ட ஈட்டை வழங்கவோ முடியாதென தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## வாகன விபத்துக்களை மட்டுப்படுத்த குழு


(கொழும்பு)

வாகன விபத்துக்களை மட்டுப்படுத்துவது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு நாடாளுமன்ற குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது.

ஆளும் தரப்பைச் சேர்ந்த ஐவரைக் கொண்ட குழுவொன்று இதற்கான ஆய்வுகளை மேற்கொண்டு, தமது பரிந்துரைகளை சமர்ப்பிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நாடாளுமன்ற அமர்வின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் 17 க்கும் குறைவான நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடமையாற்றுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)



பொ.ஐங்கரநேசனின் சுற்றுச்சூழல் நூலான "ஏழாவது ஊழி" நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் யாழ்.இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அ.ஜெயராமன் குழுவினரின் இசைச் சங்கமம் இடம்பெறுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிறேமச்சந்திரன் மங்கல விளக்கேற்றுவதையும் நூல் வெளியீட்டுரையை வைத்திய கலாநிதி சி.யமுனாநந்தா நிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

# நிபந்தனையுடனான பிணையிலாவது எங்களை விடுதலை செய்யுங்கள்

## நல்லிணக்க ஆணைக்குழுவிற்கு தமிழ் அரசியல் கைதிகள் கடிதம்

சிறைச்சாலைகளில் பிணையின்றியும் துரித விசாரணைகள் இன்றியும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளாகிய எங்களை நிபந்தனையுடனான பிணையில்லாவது விடுதலைசெய்து எங்கள் உறவுகளின் கண்ணீரை துடைப்பதோடு எமது சுபீட்சமான எதிர்காலத்திற்கு உதவுங்கள்.

இவ்வாறு அனுராதபுரம் சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சிறைச்சாலைகளின் பிணை இன்றியும் துரித விசாரணைகள் இன்றியும் இருக்கும் அரசியல் கைதிகளாகிய நாங்கள் தங்களிடம் மனமுவந்து கோருவது,

எமது நாட்டின் சட்டத்துறை, நீதித்துறைக்கு அமைவாகவும் இன்றைய சுமூக சமாதான சூழ்நிலையினைக் கருத்திற்கொண்டும் கடந்த காலங்களில் இது போன்ற முரண்பாடுகளில் கைது செய்யப்பட்ட அரசியல் கைதிகளிற்கு பொது மன்னிப்பு வழங்கியதை நினைவிற்கொண்டும் யுத்தம் முடிவடைந்து ஒரு வருடத்தை தாண்டிய நிலையில் நாங்கள் இன்றும் சிறையில் தவிக்கின்றோம். இந் நிலைமையில் எமக்கு நிபந்தனை அடிப் படையிலாவது பிணையினைப்பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு இந்த வேண்டுதலை நல்லிணக்க ஆணைக் குழுவிடம் சமர்ப்பிக்கின்றோம்.

இந்த நாட்டில் ஏற்பட்ட இன முரண்பாட்டின் விளைவுகளால் அவசரகால மற்றும் பயங்கரவாத தடைச்சட்டங்களின் கீழ் சந்தர்ப்ப சூழ்நிலையால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பல வருடங்களாக எமது குடும்பங்களை பிரிந்தும் இழந்தும் சிறையில் வாடிக் கொண்டிருக்கும் நிலையில், நாங்கள் படும் வேதனைகள் ஒரு புறம். அத்துடன் எங்களைப் பிரிந்து எமது குடும்பங்கள், உறவினர்கள் படும் சொல்லொணா கண்ணீரும் இரத்தமும் கலந்த சோகங்கள் மறு புறம். அத்தோடு இன்று எமது குடும்பங்கள் போர்ச் சூழலினால் இருப்பிடங்களையும் குடும்ப உறுப்பினர்களையும் இழந்து, அவயங்களை இழந்து, போர் வடுக்களைச் சுமந்து கொண்டு எங்களின் விடுதலை ஏக்கத்துடன் எவ்வளவோ சமூக, கலாசாரப் பிரச்சினைகளிற்கு முகங்கொடுத்து மரண வேதனையில் வாழ்கின்றனர்.

அந்த வகையில் குடும்பத்தலைவர்களைப் பிரிந்து எத்தனையோ பெண்கள், உழைக்கும் கரங்களை இழந்த எத்தனையோ குடும்பங்கள், பொருளாதாரப் பின்னடைவு, குடும்பப் ப்ாதுகாப்பு இன்றியும் அல்லற்படுகின்றனர்.

கடந்த பல வருடங்களாக சிறையில் அடைக் கப்பட்ட நாங்கள் பல தடவைகள் எங்கள் நிலைமைகளைச் சுட்டிக்காட்டி கோரிக்கைகளை முன் வைத்து துறைசார் அதிகாரிகளுக்கு தெரியப் படுத்தி இருந்தோம். இதன் போது பல உறுதி மொழிகள் வழங்கப்பட்டது. இருந்தும் எங்கள் விடுதலை எட்டாக் கனியாகவே இருந்து வருகின்றது.

சந்தேகத்திற்கிடமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட நிலையில் எங்களுக்கு பொது மன்னிப்பு வழங்காவிட்டாலும் குறைந்தது நிபந்தனை அடிப்படையிலாவது வழக்கு நடைபெறும் அந்தந்த நீதிமன்றங்களிற்கு ஊடாக பிணையினை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு எங்களது குடும்ப உறவுகளுடன் எங்களை இணைத்து இந்த நாட்டின் வளர்ச்சியில் எங்களையும் கௌரவமான பிரஜைகளாக இணைப்பீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

இன்று மீள் குடியேற்றம், புனர்வாழ்வு, அபிவிருத்தி போன்ற எத்தனையோ வேலைத் திட்டங்கள் நாட்டில் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் நாட்டின் இறைமை, பாதுகாப்பு 100% உறுதிப்படுத்தப்பட்டு முழு நாடும் ஒரு குடையின் கீழ் இருக்கின்றதற்கு எடுத்துக்காட்டாக மேன்மை தங்கிய ஜனாதிபதி அமைச்சரவை மாநாட்டினை கிளிநொச்சியில் நடத்தியுள்ளார்.

இவ்வாறிருக்கையில், எங்கள் உறவுகளின் மனங்களில் மன இறுக்கம், பயம், சோகம் கலந்த துயரம் அத்துடன் சமூக, பொருளாதார பிரச்சினைகள் படர்ந்து விரிந்துள்ளன. காரணம் ,நாங்கள் அவர்களிடமிருந்து பிரிக்கப்பட்டு சிறைகளில் அடைக் கப்பட்டிருப்பது தான்.

எனவே கடந்த காலங்களில் அரசியற் கைதிகளிற்கு பொது மன்னிப்பு வழங்கியதை கருத்தில் எடுத்து எங்களை குறைந்தது நிபந்தனையுடனான பிணையிலாவது விடுதலை செய்து எங்கள் உறவுகளின் கண்ணீரை துடைப்பதோடு எமது சுபீட்சமான எதிர்காலத்தையும் நிர்ணயிக்கும் படி நல்லிணக்க ஆணைக்குழுவின் செயலாளரிடம் மிகுந்த பணிவுடனும் மன்றாட்டத்துடனும் வேண்டி நிற்கின்றோம் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. (ஶ்ரீ)

## பெருமளவிலான இடம்பெயர் முகாம்கள் மூடப்பட்டுள்ளன

### மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

பெருமளவிலான இடம்பெயர் முகாம்கள் மூடப்பட்டுள்ளதாக வடமாகாண மீள் குடியேற்ற அதிகாரி மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன தெரிவித்துள்ளார்.

வடக்கில் அமைக்கப்பட்டிருந்த 47 இடம்பெயர் முகாம்களில் 42 முகாம்கள் ஏற்கனவே மூடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் நடைபெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின் போது 2 இலட்சத்து 80 ஆயிரம் பொதுமக்கள் இடம்பெயர் முகாம்களில் தங்க வைக்கப் பட்டிருந்தனர்.

யுத்தம் காரணமாக இடம்பெயர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த மக்களில் 2 இலட்சத்து 65 பேர் ஆயிரம் இதுவரையில் மீள் குடியேற்றப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மீள் குடியேற்றப்பட்ட மக்களுக்கு 25 ஆயிரம் ரூபா பணமும் ஆறு மாத காலத்திற்கான உலர் உணவுப் பொருட்களும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளதாகவும் இந்த ஆண்டின் இறுதிக்குள் சகல இடம்பெயர் மக்களையும் மீள் குடியேற்ற முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

27 ஆயிரம் பொதுமக்கள் மீள் குடியேற்றப்பட உள்ளதாகவும் இதில் 10ஆயிரம் பேர் மட்டுமே இடம்பெயர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (ஶ்ரீ-2)

## ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை தொடர்பில் ஐரோ. ஒன்றிய கொள்கையை அமெரிக்காவும் பின்பற்றுமா?

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி.வரிச்சலுகை இரத்துச் செய்யப்பட்டுள்ள நிலையில் அமெரிக்காவினால் வழங்கப்பட்டு வரும் இவ் வரிச்சலுகை தொடர்பில் இலங்கை எதிர்பார்ப்புடன் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு இறக்குமதி மற்றும் உற்பத்தி பொருட்கள் தொடர்பில் அமெரிக்கா இலங்கைக்கு ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையை வழங்கி வருகிறது.

இந்த நிலையில் இலங்கையில் தொழிலாளர்களின் உரிமைகள் மீறப்படுவதாக அமெரிக்க தொழிற்சங்கம் ஒன்றுக்கு இலங்கையின் தொழிற்சங்க சம்மேளனம் ஒன்று முறைப்பாடு செய்திருந்தது. இது குறித்து அமெரிக்க வெளிவிவகார அமைச்சு இவ் வாரம் விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளது.

இந்த விசாரணைகளின் போது இலங்கை அரசின் சார்பிலும் தொழிற்சங்கங்கள் சார்பிலும் சாட்சியங்கள் பெறப்படவுள்ளன. இந்த நிலையில் உண்மைகளை கண்டறி வதற்காக அமெரிக்க வர்த்தக சம்மேளன பிரதிநிதிகளின் குழு ஒன்று இலங்கை வந்து தொழிலாளர் உரிமைகள் குறித்து ஆராய்ந்தது.

இதனையடுத்து அமெரிக்காவில் நாளை செவ்வாய்க்கிழமை விசாரணை ஒன்று நடைபெறவுள்ளது. இவ் விசாரணையின் போது இலங்கை அரசாங்க அதிகாரிகள் ஆறு பேர் பங்கேற்கவுள்ளனர். இந்தக் குழு இலங்கையில் இருந்து நேற்று முன்தினம் அமெரிக்கா சென்றுள்ளது.

இந்த நிலையில் இலங்கையில் தொழிலாளர் உரிமைகள் மறுக்கப்படுவது உறுதிப்படுத்தப்படுமானால் அமெரிக்காவும் தமது ஜி.எஸ்.பி.வரிச்சலுகையை நிறுத்திக் கொள்ளலாம் அல்லது நிபந்தனைகளை விதிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஶ்ரீ-2)

## மங்கள சமரவீர நான்காம் மாடியில் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளார்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவிடம் நான்காம் மாடியில் விசாரணைக்கு உட்படுத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நாளை காலை 10.30 மணிக்கு விசாரணைகள் நடத்தப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

மிரிஹான பகுதி அச்சகமொன்றில் ஜனாதிபதிக்கு எதிராக சுவரொட்டிகள் அச்சிட்டமை குறித்து மங்கள சமரவீரவிடம் விசாரணை நடத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சிலர் மிரிஹான பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாகவும், தம்மை மட்டுமே நான்காம் மாடிக்கு அழைத்துள்ளதாகவீம் மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார்.

18ஆவது திருத்தச் சட்ட மூலத்திற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியினால் அச்சிடப்பட்ட இந்த சுவரொட்டிகள் தொடர்பில் பெரும் சர்ச்சை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பாராளுமன்ற உறுப்பினர்களிடம் விசாரணை நடத்தப்பட வேண்டுமாயின் புலனாய்வுப் பிரிவினர் அவர்களிடம் சென்று விசாரணை நடத்துவதே வழமை என்ற போதிலும் தம்மை நான்காம் மாடிக்கு அழைத்து விசாரணை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சட்டத்தரணி ஒருவருடன் தாம் விசாரணைகளுக்கு சமுகமளிக்கத் திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் விசாரணைகளின் போது தமது சட்டத்தரணிக்கு அனுமதி அளிக்கப்படுமா என்பது தொடர்பில் சந்தேகம் நிலவுவதாக அவர் தெரிவித்துள்ளார். (ஶ்ரீ-2)

## வாகரைப் புதையல் கொள்ளைச் சம்பவத்துடன் ஆளும் கட்சி அரசியல்வாதிகளுக்கு தொடர்பு?

(கொழும்பு)

வாகரையில் அண்மையில் இடம்பெற்ற புதையல் கொள்ளைச் சம்பவத்துடன் நான்கு ஆளும் கட்சி அரசியல் தலைவர்களுக்கு தொடர்பு இருப்பதாகத் தெரிவிக்கப்படு கிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒரு கிழக்கு மாகாண அமைச்சரும் இந்த புதையல் கொள்ளைச் சம்வத்துடன் தொடர்புபட்டிருப்பதாக பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் வாகரை பொலிஸ் நிலையத்தின் துணைக் பொலிஸ் அத்தியட்சகர் இந்திக்க ஹப்புகொட உள்ளிட்ட 8 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

வாகரை சூரியதேவ ரஜமஹா விஹாரையில் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் புதையல் திருட்டில் ஈடுபட்டதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையதாகத் தெரிவித்து சரணடைந்த மூவரும் அரசியல்வாதிகளைக் காப்பாற்றும் நோக்கில் சரணடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஶ்ரீ)

# காஷ்மீர் மாநிலத்தில் அமைதியை ஏற்படுத்த எட்டு அம்சத் திட்டங்கள்

## இந்திய மத்திய அரசு அறிவிப்பு



காஷ்மீரில் அமைதி ஏற்படும் வகையில் மத்திய அரசாங்கம் 8 அம்சத் திட்டத்தை வெளியிட்டுள்ளது. காஷ்மீரில் பாதுகாப்புப் படையினருக்கு எதிராக கடந்த ஜூன் மாதம் 10 ஆம் திகதி கலவரம் ஏற்பட்டிருந்தது. 3 மாதங்களுக்கு மேலாக நீடித்த இந்தக் க்லவரத்தில் 105 பேர் பலியாகியிருந்தனர்.

இந்தப் பிரச்சினைக்குத்தீர்வு காணும் முகமாக மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தலைமையில் அனைத்துக் கட்சிக் குழுவை மத்திய அரசாங்கம் நியமித்திருந்த நிலையில் அக்குழு காஷ்மீர் சென்று நிலைமைகளை ஆராய்ந்தது.

இந் நிலையில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் பாதுகாப்புத் தொடர்பாக புதுடில்லியில் நடைபெற்ற கூட்டத்தில் காஷ்மீர் நிலவரம் குறித்த அனைத்துக் கட்சிக் குழுவின் அறிக்கையை ப.சிதம்பரம் சமர்ப்பித்தார்.

இதன்போது அந்த அறிக்கை குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதுடன் காஷ்மீரில் நிலவி வரும் பதற்றத்தைத் தணிப்பதற்காக 8 அம்சத் தீர்வு திட்டமொன்று ஒப்புதல் வழங்கப்பட்டது.

காஷ்மீர் வன்முறைச்சம்பவங்களின் போது கைது செய்யப்பட்டவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட்டு அவர்கள் மீதான அனைத்துக் குற்றச்சாட்டுகளும் வாபஸ் பெறப்படவேண்டும். பொது பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை ஆய்வு செய்ய வேண்டும் என்பதுடன் தேவைப்படின் உரிய நபர்கள் மீதான காவல் உத்தரவு வாபஸ் பெறப்படவேண்டும்.

காஷ்மீர் பிரச்சினை குறித்து அனைத்து அரசியல் கட்சிக் குழுக்கள், மாணவர்கள், சமூக அமைப்புக்கள் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக குழுவொன்று அமைக்கப்படும். இக்குழுவில் 3 அல்லது 4 பேர் இடம்பெறுவர்.

பதற்றமான பகுதிகள் என அறிவிக்கப்பட்ட பகுதிகளை காஷ்மீர் அரசாங்கம் மீளாய்வு செய்ய வேண்டும். உடனடியாக இராணுவம், துணை இராணுவம், மாநில பொலிஸ் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்கிய உயர் மட்டக்குழுக்கூட்டத்தைக் கூட்டி காஷ்மீர் பள்ளத்தாக்கில் பாதுகாப்பு படையினரை மீண்டும் நிறுத்துவது குறித்து காஷ்மீர் அரசு ஆய்வு செய்ய வேண்டும்.

பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் பலியானோர்களின் குடும்பங்களுக்கு தலா 5 இலட்சம் ரூபா நிதியுதவி வழங்கப்பட வேண்டும்.

மூடப்பட்ட கல்வி நிறுவனங்களை காஷ்மீர் அரசாங்கம் உடனடியாக திறக்க வேண்டும். நடப்புக் கல்வி ஆண்டு வீணாகி விடக் கூடாது என்பதால் ,தேவைப்பட்டால் சிறப்பு வகுப்புக்கள் நடத்த வேண்டும். உரிய நேரத்தில் பரீட்சைகள் நடத்தப்படவேண்டும்.

பாடசாலைக் கட்டமைப்புக்களுக்காக காஷ்மீருக்கு கூடுதலாக 100 கோடி ரூபாய் வழங்கப்படும். காஷ்மீரின் பிற பிராந்தியங்களான ஜம்மு, லடாக் ஆகியவற்றின் வளர்ச்சித் தேவைகள் குறித்து ஆராய்வதற்கு 2 சிறப்புக்குழுக்கள் அமைக்கப்படும் என்பன இந்த 8 அம்சத் திட்டமாகும். (ஸ்ரீ-2)

## இராமேஸ்வரம் கடல் பகுதியில் 24 மணி நேரமும் கண்காணிப்பு

(இராமேஸ்வரம்)

தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலைத் தடுக்க இராமேஸ்வரம் கடற்பகுதியில் 24 மணி நேரமும் கடலோரக் காவற் படையின் கப்பல் மற்றும் விமானம் ரோந்து சுற்றி வருகிறது என்று தமிழக கடலோர காவற்படை கமாண்டர் சைனி தெரிவித்துள்ளார்.

இராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். தமிழக மீனவர்கள் பிடித்து வைத்திருக்கும் இறால், மீன்களையும் மற்றும் ஜி.பி.எஸ் கருவிகளையும் பறித்துச் செல்வது போன்ற சம்பவங்கள் அதிகமாக நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் இந்தியக் கடலோரக் காவற்படை நிலையக் கமாண்டர் டி.எஸ். சைனியிடம் இது பற்றி நிருபர்கள் கேட்ட போது அவர் கூறியதாவது,

கடலில் மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்கள் கண்டிப்பாக இந்தியக் கடல் எல்லையைத் தாண்டி மீன்பிடிக்கச் செல்லக் கூடாது. கடலுக்குச் செல்லும் மீனவர்கள் மீன் பிடிப்பதற்கான டோக்கன், அடையாள அட்டை வைத்திருக்க வேண்டும்.

இராமேஸ்வரம் சர்வதேச கடல் எல்லை பகுதிகளில் இந்திய கடலோர காவற்படையின் சி.146 கப்பல், கடற்படையின் கப்பல், கடலோர காவற்படைக்குச் சொந்தமான டார்னியர் விமானம் ஆகியவை 24 மணி நேரமும் தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றன.

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்கிய சம்பவங்களைத் தொடர்ந்தும், அந்நிய படகுகளோ ,கப்பல்களோ நமது பகுதிக்குள் நுழைந்தால் தடுக்கும் வகையில் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன.

இதைத் தவிர ஹோவர்கிராப்ட் கப்பல் ஒன்றும் மண்டபம் முதல் இராமேஸ்வரம் வரையிலும் வாரத்தில் 7 நாட்களும் இரவு பகலாக ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருகிறது. இராமேஸ்வரம் கடற்பகுதியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டு தீவிரமாக கண்காணித்து வருகிறோம் என்று டி.எஸ்.சைனி கூறினார். (ஸ்ரீ-2)




## ஐ.நா.பாதுகாப்பு சபையில் நிரந்தர இடம்பிடிக்க சீனா ஒத்துழைக்கும்

### இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமாராவ் நம்பிக்கை



(நியூயோர்க்)

ஐ.நா. பாதுகாப்பு சபையில் இந்தியா நிரந்தரமாக இடம்பெற சீனாவின் ஆதரவு கிடைக்குமென்று இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமாராவ் நம்பிக்கை தெரிவித்தார்.

ஐ.நா.சபைக் கூட்டம் நடைபெற்று வருவதையொட்டி நிருபமாராவ் நியூயோர்க் சென்றுள்ளார். இந்நிலையில் சீன அரசின் மத்திய தொலைக்காட்சி அலைவரிசைக்கு நேற்று முன்தினம் அவர் பேட்டியளித்த போது,

ஐ.நா. பாதுகாப்பு சபையில் நிரந்தர இடம்பிடிக்க தகுதியுள்ள நாடுகள் குறித்து இப்போது பரவரலாகப் பேசப்பட்டு வருகிறது. இந்தியா இதில் முக்கிய இடம் பெற்றுள்ளது. பாதுகாப்புச் சபையில் நிரந்தரமாக இடம் பிடிக்க இந்தியாவுக்கு அனைத்து தகுதிகளும் உள்ளது என்பதில் எங்களுக்கு நம்பிக்கை உள்ளது.

இந்த விடயத்தில் இந்தியாவின் கருத்துக்களை சீனா நிச்சயமாகப் புரிந்துகொண்டு நடக்கும். சீனாவின் ஒத்துழைப்பை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

இந்திய குடியரசுத் தலைவர் பிரதீபா பாட்டீல் மற்றும் வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா ஆகியோர் சீனா சென்றபோது சீனத் தலைவர்களை சந்தித்து இது தொடர்பாக பேசியுள்ளனர்.

நிரந்தர உறுப்பினராகும் போட்டியில் ஜப்பான் உட்பட பல்வேறு நாடுகள் உள்ளன. இருந்த போதிலும் சீனா இந்தியாவுக்கு ஒத்துழைப்பு அளிக்கும் என்று நம்புகிறோம்.

இந்தியாவும், சீனாவும் வேகமாக வளர்ந்து வரும் நாடுகள். ஏற்கனவே பல விடயங்களில் இரு நாடுகளுக்கும் இடையே சிறப்பான ஒத்துழைப்பு இருந்து வருகிறது. உதாரணமாக, பருவநிலை மாறுபாடு தொடர்பான பிரச்சினையில் இருநாடுகளும் ஒரே கருத்துடன் இணைந்து செயல்பட்டன. எனவே இந்த ஒத்துழைப்பு வரும் காலத்திலும் தொடரும் என்று நிருபமாராவ் கூறினார்.

ஐ.நா.பாதுகாப்பு சபையில் இப்போது சீனா, பிரான்ஸ், ரஷ்யா, பிரிட்டன் மற்றும் அமெரிக்கா ஆகிய 5 நாடுகள் நிரந்தர உறுப்பினராக உள்ளன.

மேலும் 10 நாடுகள் சுழற்சி முறையில் தற்காலிகமாக உறுப்பினராக சேர்த்துக் கொள்ளப்பட்டு வருகின்றன.


பாதுகாப்பு சபையில் உறுப்பிரனராவதன் மூலம் ஐ.நா.சபையில் கொண்டு வரும் தீர்மானத்தை தடைசெய்யும் "வீட்டோ" எனப்படும் வெட்டுத் தீர்மானத்தை கொண்டு வரும் முக்கிய அதிகாரம் கிடைக்கும் என அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)



தஞ்சை பெரிய கோயிலின் ஆயிரமாவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நாட்டியக் கலைஞர் பத்மா சுப்பிரமணியம் தலைமையில் ஆயிரம் பேர் பங்கேற்ற பரத நாட்டியம் அரங்கேறியது.

## தமிழக சட்டமன்றத் தேர்தல்

# கூட்டணி பேரங்கள் திணறும் கட்சிகள்!



தெளிந்த நீரோடை போல் தெரிகிறது தமிழக தேர்தல் களம். ஆனால், அதை உன்னிப்பாக கவனித்தால் உள்ளே அத்தனை கலங்கல்கள்!

பிரசவ வார்டின் உள்ளே மனைவி துடிக்க... வெளியே நிலைகொள்ளாமல் தவிக்கும் தமிழ் சினிமாவின் புருஷர்களாகவே தமிழகத் தலைவர்கள் இருக்கிறார்கள். "அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை. நிரந்தர எதிரியும் இல்லை" என்ற வாசகம், இனிவரும் நாட்களில் மிக அதிகமாக உச்சரிக்கப்படும்... உணரப்படும். அதற்கு முன்னதாக திரைமறைவில் நடக்கும் திகுதிகு பேரங்களை நேரடிக் காட்சிகள் மூலமாக நிருபித்தாலுமே... வாக்காளர்கள் நம்புவது சிரமம்தான்!


முறைப்படி, எதிர்வரும் மே மாதம் தான் தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஆனால்,பெப்ரவரி மாதமே நடத்திவிட்டால் என்ன என்ற யோசனை முதல்வர் கருணாநிதியின் மனதில் ஓடுவதாக ஓர் அரசியல் கிசுகிசு. மேமாதக் கோடையானது, மின்வெட்டையும் தண்ணீர்த் தட்டுப்பாட்டையும் நினைவூட்டும் காலம் என்பதால், அது நெருங்குவதற்கு முன்னதாகவே தேர்தல் நடத்தி விடுவது நல்லது என்று நினைக்கிறாராம் கருணாநிதி.

பெப்ரவரி - மே என எப்போது நடந்தாலும், "காங்கிரஸ் கட்சியானது தி. மு.க. கூட்டணியில்தான் இருந்தாக வேண்டும்!" என்று கருணாநிதி மனதார விரும்புகிறார். இது குறித்து குடும்பத்தினர், கட்சியின் முன்னணியினர் யாருக்கும் மாற்றுக் கருத்து இல்லை. காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியும் இதில் உடன்பாடு கொண்டவராகவே இன்று வரை இருக்கிறார். ஆனால், ராகுல் உள்ளிட்ட நம்பர் 10, ஜன்பத் சாலைத் தலைகள் வேறு மாதிரியாக யோசிக்கின்றன.

"40 ஆண்டுகளாக தமிழ்நாட்டின் எதிர்க்கட்சியாகவே இருக்கும் காங்கிரஸ் கட்சியை ஆளும் கட்சியாக ஆக்குவதற்கு இதைவிட நல்ல நேரம் கிடையாது. காங்கிரஸ் இருந்தால்தான் ஜெயிக்க முடியும் என்று நினைக்கும் தி.மு.க, காங்கிரஸின் கூட்டணிக்காக அலையும் அ.தி.மு.க. என இரண்டு பிரதானக் கட்சிகளும் பலவீனமாக இருக்கும் இந்த நேரத்தில், அவர்களுக்குக் கை கொடுத்துத் தூக்கிவிடாமல், நம்முடைய தலைமையில் கூட்டணி அமைத்தால், தமிழகத்தில் ஆட்சியைப் பிடிக்கலாம்!" என்பது அவர்களின் எண்ணம்.

காங்கிரஸ் தலைமையிலான அணியில் பிரதான இடம் விஜயகாந்த்துக்கு. "இன்னும் பலம் வேண்டும" என்று நினைத்தால், பா.ம.கவையும் இணைக்கலாம் என்று நினைக்கிறார்கள். அவரோடு விடுதலைச் சிறுத்தைகளும் இருந்தால் தான் வட தமிழ்நாட்டை வளைக்க முடியும் என்பது ராகுலைச் சுற்றி இருக்கும் சிலர் வகுத்து வைத்தி ருக்கும் கூட்டணிக் கணக்கு.

காங்கிரஸுடன் கூட்டணி அமைப்பதில், விஜயகாந்துக்கு எந்தச் சிக்கலும் இல்லை. தொகுதிப் பங்கீடு விடயத்தில் வேண்டுமானால் மனக் கசப்பு வரலாம். 'இரண்டு கட்சிகளும் 50-க்கு 50 எனப் பிரித்துக்கொண்டு எந்தக் கட்சி அதிகத் தொகுதிகளில் ஜெயிக்கிறதோ, அந்தக் கட்சி சார்பில் முதலமைச்சர் வரலாம்!" என்றுகூடப் பேச்சு வார்த்தைப் பெரியவர்கள் சமாதானம் சொல்லி இருக்கிறார்கள். "தி.மு.க., அ.தி. மு.க. அல்லாத காங்கிரஸ் தலைமையில் கூட்டணி அமைய வேண்டும்" என்று டாக்டர் ராமதாஸ் சொல்லி வருகிறார். மேலும், விஜயகாந்த்தை ஒரு மனிதராகக் கூட இதுவரை மதிக்கா மல் இருந்த அவர், இப்போது அது குறித்துப் பேச மறுக்கிறார். விஜயகாந்த் பற்றி கேள்வி கேட்டபோது, "நிரந்தர எதிரி நண்பன்!" பழமொழிதான் ராமதாஸின் பதில். விஜயகாந்த் ஒரு படி மேலே போய், "ராமதாஸ் கொடியில் இருக்கும் மஞ்சள் நிறத்தை கருணாநிதி எப்படிக் களவாடலாம்?" என்று திண்டிவனத்தில் வக்காலத்து வாங்கித் திகிலூட்டினார். எனவே, தி.மு.க-வைப் பிடிக்காத காங்கிரஸார் மத்தியில், காங்கிரஸ் - விஜயகாந்த் - ராமதாஸ் அணி குறித்த பேச்சுதான் அதிகமாக ஓடுகிறது.



ஆனாலும், காங்கிரஸ் மீது, விஜயகாந்த் இன்னமும் அவநம்பிக்கையு டன் இருக்கிறார். "தி.மு.க-விடம் தங்களுக்கு 80-க்கும் அதிகமான தொகுதிகளைப் பெற நினைக்கிறது காங்கிரஸ். அது கிடைக்காவிட்டால், விஜயகாந்த்துடன் போய்விடுவோம்" என்று கருணாநிதியை மிரட்டுவதற்கான கருவியாகவே காங்கிரஸ் தன்னைப் பயன்படுத்துகிறதோ என்பது அவர் சந்தேகம். "கூட்டணி அமைப்பதாக இருந் தால், கடைசி வரை தி.மு.க-வுடன் இருந்துவிட்டு, தேர்தல் திகதி அறி வித்தவுடன் தன்னுடன் சேருவதைவிட, முன்னதாகவே வந்தாக வேண்டும" என்று அவர் விரும்புகிறார். ஆர்வமாக வந்து பேசுவதும், பின்னர் பதில் தராமல் பம்மிவிடுவதும் காங்கிரஸின் வழக்கமாக இருப்பது அவருக்கு வருத்தம் தரும் சங்கதி.

இந்த ஆட்டங்களை அமைதியாக வேடிக்கை பார்க்கிறார் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா. ஆரம்பத்தில், காங்கிரஸ் கட்சியைத் தி.மு.க-விடம் இருந்து பிரித்து, தன்னுடைய அணியில் சேர்க்கவே விரும்பினார். டில்லிக்கு இவரது தூதர்களும் போனார்கள். ஜெயலலிதாவுக்கு அறிமுகமான சில காங்கிரஸ் பிரமுகர்களும் விரும்பினார்கள். ஆனால், அசையவில்லை டில்லி. "கருணாநிதியுடன்



இருப்போம். விலகினால் தனி அணி தான். .அ.தி.மு.க-வுடன் வேண்டாம்" என்பது ராகுல் வட்டாரத் திட்டம். "காங்கிரஸ் - விஜயகாந்த" கூட்டு சேருவதை ஜெயலலிதா விரும்பவில்லை. "தி.மு.க-வுக்கு எதிரான வாக்குகள் இரண்டாகப் பிரிந்து, அது கருணாநிதிக்குச் சாதகமாகவே அமையும்" என்று நினைக்கிறார். எனவே, அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் சிலர் அச்சத்தைவிட்டு "விஜயகாந்த்தை இணைத்துக்கொள்ள்லாம்" என்று ஜெயலலிதாவிடம் சொல்ல, "கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலேயே அவரை எதிர்பார்த்தேன். கடைசி நேரத்தில் மனம் மாறிவிட்டார். எனவே, விஜயகாந்த்தை முழுமையாக நம்பமுடியாது" என்று அவர் பதில் அளித்தாராம்.

ஆனால், அ.தி.மு.க-வுக்குப் பச்சைக் கொடி காட்டும் சிக்னல்கள் விஜயகாந்த் வார்த்தைகளில் தெரிகின்றன. "தி.மு.க-வும் அ.தி.மு.க-வும் ஊழல் கட்சிகள்" என்று சில மாதங்களுக்கு முன் பேசி வந்தவர், இன்று அப்படிச் சொல்வதில்லை. "தி.மு.க. ஆட்சி மீண்டும் வரக் கூடாது" என்றே சொல்லி வருகிறார். "யாருடனும் கூட்டணி இல்லை" என்றவர், "30 அல்லது 40 ஸீட்டுக்காகக் கூட்டணி சேர மாட்டேன்" என்கிறார். அது "60 அல்லது 80 கொடுத்தால் சேருவாரா?" என்ற சந்தேகத்தைக் கிளப்பியது. "40 ஸீட் தான் தருவேன்!" என்று அ.தி. மு.க. வட்டாரமும் கண்டிப்பாகக் கூறி விட்டது. விஜயகாந்த் தரப்பில் தங்களுக்குத் தேவையான தொகுதிகளின் பட்டியலைக் கொடுத்தார்களாம். "அவை அனைத்துமே அ.தி.மு.க-வுக்குச் செல்வாக்கான தொகுதிகள். எப்படித்தர முடியும்?" என்று தோட்டத்துக்கு நெருக்கமானவர்கள் சொல்லி வருகிறார்கள். "அ.தி.மு.க-வுடன் வைகோ, சி.பி.எம், சி.பி.ஐ. ஆகியவற்றுடன் விஜயகாந்த்தும் இணைந்தால், அது வெற்றிக் கூட்டணியாக அமைந்து, 200 தொகுதிகளைக் கைப்பற்றுவோம்!" என்கிறார் அ.தி.மு.க-வின் முன்னாள் அமைச்சர் ஒருவர்.

**ஆனந்த விகடன்**

"விஜயகாந்த் - அ.தி.மு.க. கூட்டணி அமைந்தால், அது வெற்றி பெறும். அப்போது அதில் ஐக்கியமானால் தவறு இல்லை!" என்று பா.ம.க-வின் ஆலோசனைக் கூட்டத்தில் பேசப்பட்டு உள்ளது. விஜயகாந்த் முடிவு அறிவிக்கும் வரை காத்திருப்பது என்று டாக்டர் ராமதாஸ் முடிவு எடுத்துள்ளார். பா.ம. க-வை அவசரப்பட்டுக் கழற்றிவிட்டோமே என்று கருணாநிதியும் வருத்தப்படுகிறார். ஆனால், தான் எதிர்பார்க்கும் எண்ணிக்கையிலான தொகுதிகள் கிடைக்குமா என்றபதற்றம் பா.ம.க தலைமைக்கு ஏற்பட்டு உள்ளதையும் மறுக்க முடியாது.

இன்னொரு பக்கம் பார்த்தால், விஜயகாந்த் வளர்வதை ஜெயலலிதா விரும்பவில்லை. "நாம் சேர்க்காமல் விஜயகாந்த் தனித்து நின்றால், அந்தக் கட்சியில் ஒன்றிரண்டு பேர் ஜெயிக்கலாமே தவிர, சிறு சலனமும் ஏற்படாது!" என்று ஜெயலலிதா நினைப்பதாகவும் சொல்கிறார்கள். "கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க-வைவிட தி.மு.க. சுமார் 16 இலட்சம் வாக்குகள் மட்டுமே கூடுதலாகப் பெற்றது. அது நாடாளுமன்றத் தேர்தல் என்பதால், காங்கிரஸ் ஜெயிக்க வேண்டும் என்றுதான் பலரும் வாக்களிப்பார்கள். எதிரே சரியான எதிர்க்கட்சியும் இல்லை. மேலும், தி.மு.க. அரசை எதிர்க்கும் மக்கள் மனோபாவம் இன்று கூடி இருக்கிறது. எனவே, விஜயகாந்த் இல்லாமல் ஓர் அணி அமைத்தால்கூட வெற்றி பெறலாம். இதில் பா.ம.க-வை மட்டும் சேர்க்க வேண்டும்!" என்று ஜெயலலிதாவுக்கு ஒரு கணக்கு போட்டுத்தரப்பட்டுள்ளது. ராமதாஸ் வரும்போது, சிறுத்தைகளையும் அழைத்து வர வேண்டும் என்பது அவருக்கான நிபந்தனை.

தி.மு.க. தலைவர் கருணாநிதியைப் பொறுத்தவரையில், "விஜயகாந்தைத் தனது அணிக்கு காங்கிரஸ் அழைத்து வரும்" என்ற அதிகபட்ச ஆசை கடந்த நாடாளுமன்றத் தேர்தலுடன் காலாவதி ஆகிவிட்டது. ஆகவே, அவரிடம் அப்படிப்பட்ட நினைப்பு இல்லை. ஆனால், அ.தி.மு.க-வுடன் விஜயகாந்த் சேருவதை அவர் விரும்பவில்லை. வழக்கம்போல் அவர் "தனித்து நின்றால், தனக்கு வசதி" என்று நினைக்கிறார். விஜயகாந்த் மீது ஜெயலலிதாவை வெறுப்படைய வைக்கும் செய்திகளை உளவுத்துறை மூலமாகப் பரப்பும் காரியத்தை கனகச்சிதமாகப் பார்த்து வருவதற்கு அடிப்படைக் காரணம் அது தான். "விஜயகாந்த்



துடன் காங்கிரஸ் இணைந்து அணி அமைத்தாலும் பெரிதாகத் தேறாது!" என்பது கருணாநிதியின் முடிவாக இருக்கிறது.

இப்படியாக, காங்கிரஸும் விஜயகாந்த்தும் எடுக்கும் முடிவுகளைப் பொறுத்தே, மொத்தக் கூட்டணிப் பேச்சு வார்த்தைகளும் போகின்றன. இந்த இருவரும் இப்போதைக்குத் தங்களது முடிவுகளை அறிவிப்பவர்களாகவும் தெரியவில்லை. ஆக, தி.மு.க-வும் அ.தி. மு.க-வும் கூட்டணி அமைக்காது என்பதைத் தவிர, எதுவும் நடக்கலாம்!

*ப.திருமாவேலன்*

# ஆப்கானிஸ்தான் இராணுவத்தில் முதன்முதலாக பெண்கள் இணைப்பு

ஆப்கானிஸ்தானில் பல தசாப்தங்களின் பின்னர் இராணுவத்தில் முதன் முதலாக 29 பெண்கள் நேற்று முன்தினம் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இவர்கள் இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சிகளை நேற்று முன்தினம் பூர்த்தி செய்தனர்.

எதிர்வரும் 2014 ஆம் ஆண்டில் வெளிநாட்டு இராணுவத்திடம் இருந்து ஆப்கானிஸ்தானின் பாதுகாப்புப் பொறுப்பை ஏற்பார்கள் என எதிர்பார்க்கப்படும். தேசியப் பாதுகாப்புப் படையினருக்கு உதவுவார்கள் என நம்பப்படுகிறது.

வெளிநாட்டு இராணுவத்தினர் வெளியேறிய பின் ஆப்கானிஸ்தான் இராணுவத்தினர் பாதுகாப்புப் பொறுப்பை ஏற்பதற்காக ஜனாதிபதி ஹமீட் கார்சாய் நேட்டோ மற்றும் அமெரிக்கா ஆப்கானிஸ்தானின் படை, பொலிஸ் மற்றும் பாதுகாப்பு பகுதியினருக்கான பயிற்சிகளை விரிவாக்கும்படி அழுத்தம் கொடுத்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கா அடுத்த வருடம் ஜுலை மாதம் முதல் வெளியேற ஆரம்பிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. எனது ஆப்கானிஸ்தான் சகோதரர்கள் தற்போது இராணுவத்தில் சேவையாற்றி வருவதுபோல் நான் எனது நாட்டை பாதுகாப்பதில் முழுமையாக என்னை அர்ப்பணித்துள்ளேன். அதனால்தான் நான் இராணுவத்தில் இணைந்து கொள்ளத் தீர்மானித்தேன் என்று பெண் அதிகாரி சரீப் கபுல் படை பயிற்சி நிலையத்தில் இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் தெரிவித்தார்.

இப்பயிற்சிகளை மேற்பார்வை செய்த பிரிட்டிஷ் அதிகாரி ஜெனரல் டேவிட் பீட்டர்சன் கருத்துத் தெரிவிக்கையில், இங்கு வந்திருக்கும் பெண்கள் மிகவும் சிறந்த ஆவல் கொண்டவர் படைவீராங்கனைகள். அவர்கள் இன்று சிறந்த தொழில் சார் ரீதியான செயற்பாடுகளை வெளிப்படுத்தினர் என தெரிவித்தார். (ஶ்ரீ-2)




# அமெரிக்க அதிபர் உலக வில்லன்

## ஈரான் வர்ணிப்பு

(தெக்கான்)

அணுசக்தி கொள்கை தொடர்பாக அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே கருத்து வேறுபாடு இருந்து வருகிறது. இந்த நிலையில் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா ஒரு தனியார் தொலைக்காட்சிக்கு பேட்டி அளித்தார். அப்போது அணுசக்தி உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து ஈரானுடன் பேச்சு வார்த்தை நடத்த அமெரிக்கா தயாராக உள்ளது என்று தெரிவித்தார்.

இந்த நிலையில் ஷிராஷ் நகருக்கு வந்த ஈரான் பாராளுமன்ற சபாநாயகர் அலி லரிஜான் ஒரு செய்தி நிறுவனத்துக்கு பேட்டி அளித்தார். அப்போது அமெரிக்க அதிபர் ஒபாமா ஒரு உலக வில்லன். அவர் எப்படி ஈரானுக்கு உதவி செய்ய முடியும். அமெரிக்கர்கள் உலகம் முழுவதும் பழி பாவங்களில் ஈடுபட்டுள்ளனர். எனவே ஒபா மாவின் உதவி எங்களுக்கு தேவையில்லை. அவரது வார்த்தையில் உண்மை இருப்பதாக தெரியவில்லை என்று தெரிவித்துள்ளார். (ஶ்ரீ-2)

# யோகா செய்யும் பனிக்கரடி

(லண்டன்)



பின்லாந்து நாட்டில் உள்ள மிருகக் காட்சி சாலையில் பனிக்கரடி ஒன்று தினமும் 15 நிமிடங்கள் யோகா செய்கிறது. இதை பார்வையாளர்கள் ஆச்சரியத்தோடு பார்த்துச் செல்கின்றனர்.

பின்லாந்து நாட்டில் உள்ள அட்டாரி மிருகக் காட்சிசாலையில் 'சான்ட்ரா' என்ற ஆண் பனிக்கரடி ஒன்று உள்ளது.

அந்த கரடி தினசரி காலை எழுந்ததும் 15 நிமிடங்கள் யோகா செய்கிறது. அது கால்களை நீட்டியும் கைகளை தரை யில் ஊன்றியும் கண்களை ஒரே இடத்தில் நிலை நிறுத்தி யோகா செய்கிறது.

பின்னர் கால்களை உயர்த்தி கைகளால் காலை தொடுகிறது. பின்னர் கால்களை உயரே தூக்குகிறது. பார்வை யாளர்களை வியக்க வைக்கும் வகையில் பல்வேறு கோணங்களில் கரடி செய்யும் இந்த யோகா பயிற்சி 15 நிமிடங்கள் வரை நீடிக்கி றது.

இந்த அரிய காட்சிகளை பார்ப்பதற்கு அந்த மிருகக் காட்சிசாலையில் தினமும் பெரும் கூட்டம் கூடுகிறது.

ஆன்மீகம் சார்ந்த உடற்பயிற்சியான யோகாவை கரடி எப்படி கற்றுக்கொண்டது என்றும் அதைப் பற்றி அதற்கு என்ன தெரியும் என்றும் பார்வை யாளர்கள் வியப் போடு கேள்வி எழுப்பு கின்றனர். (ஶ்ரீ-2)



நியூயோர்க்கில் அமெரிக்க-கொலம்பியா இருதரப்பு கூட்டத்தில் கொலம்பிய ஜனாதிபதி சாண்டோர்ஸ் (இடது) உடன் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா பேச்சுவார்த்தை நடத்தினார்.

# ஹெயிட்டியில் ஏற்பட்ட சூறாவளிக்கு 5 பேர் பலி

(போர்ட்-எயு-பிரின்ஸ்)

ஹெயிட்டியின் தலைநகரில் ஏற்பட்ட கடுமையான சூறாவளியில் சிக்கி 5 பேர் பலியாகியுள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் கூறியுள்ளனர். சூறாவளியில் வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டதாகவும் மரங்கள் வேரோடு சாய்ந்த தாகவும் மின்சார தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள தாகவும் கூறினார்கள்.


ஜனவரி மாதம் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் வீடுகளை இழந்து முகாம்களில் தங்கியுள்ளவர்களில் 5 பேர் இறந்துள்ளதாகவும் பல முகாம்கள் சேதமடைந்துள்ளன. என்று அதிகாரிகள் தெரிவித்தனர். முகாம்களில் தங்கியுள்ளவர்களில் பலர் இடம்மாறுவதற்கு தயாராக உள்ளதாகவும் கூறினார்கள். (ஶ்ரீ-2)

# நைஜீரியாவில் வெள்ளத்தால் 2 மில்லியன் மக்கள் தவிப்பு

(அபுஜா)

நைஜீரியாவில் ஏற்பட்ட கடுமையான வெள்ளம் காரணமாக 2 மில்லியன் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். 5 ஆயிரம் கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அங்கு கனோ என்ற மாநிலத்தில் செலாவா மற்றும் டிகா அணையில் இருந்து அபாயகரமான அளவுக்கு தண்ணீர் வெளியேறுகிறது.

இந்த அணைகள் கடந்த மாதமே திறக்கப்பட்டன. வெள்ளம் காரணமாக 97 ஹெக்டேயர் விவசாய பண்ணைகள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன. (ஶ்ரீ-2)



பாகிஸ்தான் விஞ்ஞானி ஆபயாசித்திருவை அல்-கொய்தா தீவிரவாதியாக சித்திரித்து அமெரிக்க இராணுவத்தினர் ஆப்கானிஸ்தானில் கொலை செய்ய முயற்சித்ததை கண்டித்து பாகிஸ்தான் லாகூரில் நடந்த கண்டனக் கூட்டத்தில் முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான்கான் உரையாற்றினார்.

# பிரித்தானிய தொழிற்கட்சியின் புதிய தலைவராக எட்மிலிபான்ட் தெரிவு




பிரித்தானிய தொழிற்கட்சியின் புதிய தலைவராக எட்மிலிபான்ட் நேற்று முன்தினம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதற்காக நடைபெற்ற வாக்கெடுப்பில் தனது மூத்த சகோதரரும் முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான டேவிட் மிலிபான்ட்டை, எட்மிலிபான்ட் சொற்ப வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

கடந்த மேமாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தொழிற்கட்சி தோல்வியுற்றதையடுத்து அக்கட்சியின் தலைவர் பதவியிலிருந்து முன்னாள் பிரதமர் கோர்டன் பிரவுண் இராஜினாமாச் செய்தார். அதையடுத்து புதிய தலைவர் பதவிக்கு எட்மிலிபான்ட, எட்போல்ஸ், டியேன் அபோட், டேவிட் மிலிபான்ட் மற்றும் அன்டி பர்ஹாம் ஆகிய 5 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

45 வயதான டேவிட் மிலிபான்ட் இப்போட்டியில் முன்னிலையில் இருந்தார். எனினும் நடைபெற்ற கட்சித் தேர்தலில் டேவிட் மிலிபான்ட்டை இரண்டாம் இடத்திற்குத் தள்ளிவிட்டு அவரின் இளைய சகோதரும் முன்னாள் காலநிலை மாற்ற விவகார அமைச்சருமான எட்மிலிபான்ட் முதலிடம் பிடித்தார். இத்தேர்தலில் எட்மிலிபான்டிற்கு 50.65 சதவீத வாக்குகளும் டேவிட் மிலிபான்டிற்கு 49.35 சதவீத வாக்குகளும் கிடைத்தன. டேவிட் மிலிபான்டிற்கு அதிக எண்ணிக்கையான நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இருந்த போதிலும் எட்மிலிபான்டிற்கு தொழிற்சங்கங்கள் கீழ்மட்ட தொண்டர்கள் ஆகியோரின் ஆதரவு கிடைத்ததன் காரணமாக வெற்றி பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. (ஶ்ரீ-2)

# பாகிஸ்தான் விஞ்ஞானிக்கு 86 வருட சிறைத்தண்டனை



பாகிஸ்தான் விஞ்ஞானி ஆபியா சித்தீக்கிற்கு 86 வருட சிறைத்தண்டனை வழங்கி அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பளித்ததையடுத்து பாகிஸ்தானில் பல பகுதிகளில் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஸா கிலானி இது தொடர்பாக அமெரிக்காவின் கவனத்திற்கு கொண்டுவரவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராணுவத்தினரை கொலை செய்ய முயற்சித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள மேற்படி பாகிஸ்தானியப் பெண் விஞ்ஞானிக்கு 86 வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

அவர் கைதுசெய்யப்படும் போது மோசமான குண்டுகளை தயாரிப்பதற்கான குறிப்புக்களையும் நியூயோர்க்கின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் பட்டியலையும் தன்னுடன் வைத்திருந்தார் எனவும் கூறப்படுகிறது. தன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை அவர் ஏற்றுக் கொண்டதையடுத்தே தண்டனை விதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஶ்ரீ-2)

செய்த வினையும் செய்கின்ற தீவினையும் ஓர் எதிரொலியை காட்டாமல் மறையமாட்டா.

–கண்ணதாசன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## மூன்றாம் உலகப் போரின் கருக்கட்டல் ஆரம்பமாகின்றது

உலகில் நடைபெறும் அழிவுகளைத் தடுப்பதில் ஐக்கிய நாடுகள் சபை செயற்றிறன் அற்று உள்ளது என்ற கருத்தை "பமிலி செக்குரிட்டி மற்றேர்ஸ்" என்ற இணையத்தளத்தில் விரிவுரையாளர் டைனா பார்ஹுட் கொல்ஸ்மன் வெளிப்படுத்தியுள்ளார்.

ஐ.நா. சபை செயற்றிறன் அற்றுள்ளது என்ற தனது கருத்திற்கு ஆதாரமாக, இலங்கையில் நடந்த யுத்தத்தை அவர் முன்வைக்கின்றார்.

இலங்கை அரசு வன்னியில் யுத்தம் நடத்திய போது தமிழ் மக்கள் நசுக்கப்பட்டுள்ளனர். யுத்தம் இடம்பெற்றபோது அந்த மக்களுக்கு உணவு வழங்கப்படவில்லை. இது அப்பட்டமான மனித உரிமை மீறலாகும்.

இதற்கு மேலாக இலங்கையில் நீண்ட காலமாக இன அழிப்பு நடவடிக்கை தொடர்ந்து வருகிறது. இருந்தும் அதனைத் தடுத்து நிறுத்துவதில் ஐக்கியநாடுகள் சபை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை. இது ஐ.நா. சபையின் செயற்றிறன் இன்மையையே வெளிக்காட்டி நிற்கின்றது என தனது கருத்தை வலிமைப்படுத்தியுள்ளார்.

இலங்கையில் நடந்த இன ஒடுக்குமுறையை தடுத்து நிறுத்த முடியாத ஐ.நா. சபையால் இனி எதனையும் செய்ய முடியாது என்பதே அவரின் கருத்தாகவுள்ளது. இதில் நூறுவீத நியாயத் தன்மை இருப்பதை எவரும் மறுத்து விடமுடியாது.

வன்னி யுத்தம் இடம்பெற்றபோது ஐ.நா.சபை நினைத்திருந்தால் மிகப்பெரும் மனிதப் பேரவலத்தை தடுத்து நிறுத்தியிருக்க முடியும்.

யுத்தத்திற்கு பின்னர் கூட முட்கம்பி வேலிக்குள் மூன்றுலட்சம் தமிழ் மக்களை அடைத்து வைத்த கொடூரத்தை ஐ.நா. சபை கண்டுகொள்ளவில்லை. யுத்த அழிவுகளை பார்வையிட வந்த ஐ.நா. சபைச் செயலாளர் பாங் கீ மூன் உலங்கு வானூர்தியில் ஏறிச் சுற்றினாரே அன்றி தனது பொறுப்பை அவர் செய்யவில்லை.

ஐ.நா.சபைச் செயலாளரின் இச் செயல் பலத்த சந்தேகங்களை எழுப்பியது. இப் போது கூட அவரால் இலங்கையில் நடந்த போர் குற்ற விசாரணைகள் தொடர்பில் இறுக்கமான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள முடியாத அளவில் ஏதோ ஒரு விடயம் அவரைத் தடுக்கின்றது என்பதை மட்டும் ஊகிக்க முடிகின்றது.

இரண்டாம் உலகப் போரை அடுத்து உலகில் அமைதியை ஏற்படுத்தும் நோக்கில் தாபிக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் இத்தகைய போக்கு மூன்றாம் உலகப் போருக்கான கருக்கட்டல் என்பதும், அந்தக் கருக்கட்டல் இலங்கையில் நடந்துள்ளது என்பதையும் எதிர்காலம் சான்றாதாரங்களுடன் உறுதிப்படுத்தும் என நம்பலாம்.

என்ன செய்வது! மிகப்பெரிய சாம்ராச்சியங்கள் மற்றும் மாமன்னர்களின் அழிவுகள் மிகச் சிறியவர்களின் சூழ்ச்சிகளால் நடந்ததாகவே வரலாறுகள் உள்ளன.

இராமன் காடு செல்ல கூனியும், தர்மர் துன்பப்பட சகுனியும் இருந்தது போல் மூன்றாம் உலகப் போரின் கருக்கட்டலுக்கு உலகின் மிகச் சிறிய நாடும் காரணமாக இருக்கலாம் அல்லவா?

## வட மாகாண கல்வித் திணைக்களம் ஏற்பாடு

# தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கல்வியை வினைத்திறனாகக் கொண்டு செல்வதற்கான கூட்டம்

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடவிடயங்களை முறைப்படுத்துவதற்கும் வினைத்திறனுடன் கொண்டுசெல்வதற்கும் ஒவ்வொரு தவணையிலும் துறைசார் ஆணையினருடன் கூட்டங்கள் நடத்தப்படவேண்டும் என கல்வியமைச்சின் அறிவுறுத்தல்களுக்கமைய வட மாகாண கல்வித் திணைக்களத்தினால் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.


தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக்கல்வி, வருடாந்த மீளாய்வும் (2009) திட்டமிடலும் (2010) என்ற தலைப்பில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 09.00 மணிக்கு யாழ். கல்விவலய முகாமைத்துவ மண்டபத்தில் யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு மாகாணக்கல்வி திணைக்களத்தின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக்கல்வி வளவாளர்களும் கலந்து கொள்வார்கள் என வட மாகாணக்கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இக்கூட்டத்திற்கு யாழ். மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களிலும் உள்ள தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ஆசிரிய ஆலோசகர், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப்பாட இணைப்பாளர், கணனி வளநிலை முகாமையாளர், கணனி வன்பொருள் வலையமைப்புஅணி உறுப்பினர் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாட அனுபவம் வாய்ந்த ஆசிரியர் ஆகியோர் கலந்துகொள்ள வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2-19)

# சரத் பொன்சேகாவிற்கு ஆதரவாக ஊடகங்கள் ஏன் குரல் கொடுப்பதில்லை

## கேள்வி எழுப்புகிறார் ரணில்



(கொழும்பு)

ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகாவிற்காக ஊடகங்கள் ஏன் குரல் கொடுப்பதில்லை என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

தமக்கு எதிராக சேறு பூசுவதற்கும், வாரத்தில் ஏழு நாட்களும் விமர்சித்துக் காட்டூன்களை வெளியிடுவதற்கும் நேரத்தைச் செலவிட்டு வரும் ஊடகங்கள் ஏன் சரத் பொன்சேகாவிற்காக ஒரு நாளை ஒதுக்கக் கூடாதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்துடன் சண்டைபிடிக்க முடியாது எனவும் சரத் பொன்சேகாவிற்கு ஐக்கிய தேசியக் கட்சி தனது கடமையை செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவிற்கு நியாயம் கிட்டவேண்டுமென விஹாரைகளில் செத் கவி பாராயணம் செய்யவேண்டும். பழைய தேர்தல் முறைமைகள் ஐக்கியதேசியக் கட்சிக்கு சாதகமாக அமையும் அரசாங்கத்தினால் தேர்தல் மாற்றங்கள் ஐக்கிய கட்சியின் வெற்றிக்கு வழிகோலும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மீது சேறு பூசுவதற்காக ஊடகங்கள் கூடுதல் காலத்தை செலவிடுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய தேர்தல் முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டால் ஊடகங்களின் ஒத்துழைப்பு பெரிதாக அவசியமில்லை. ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவளித்தவர்களுக்கு என்னவாயிற்று என அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

தாமும் முன்னணி பௌத்தபிக்கு ஒருவரும் மட்டுமே சரத் பொன்சேகாவிற்காக தற்போது குரல் கொடுப்பதாக அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

# கச்சதீவை ஆக்கிரமிக்க தமிழக மீனவர்கள் திட்டம்

தமிழ்நாடு மீனவர்கள் எதிர்வரும் 11ஆம் திகதி கச்சதீவை ஆக்கிரமித்துக் கட்டுப்பாட்டில் கொண்டுவரத் தீர்மானித்துள்ளனர்.

தமிழ்நாடு மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினரால் மிக நீண்ட காலமாக நடத்தப்பட்டு வரும் தாக்குதல்களுக்கு உடனடியாக உரிய தீர்வு காணப்பட வேண்டும் என்ற அழுத்தத்தை அரசு மீது திணிப்பதற்காகவே இப் போராட்டம் முடுக்கிவிடப்படுகிறது என்று இம் மீனவர்களின் அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இத்தாக்குதல்களை முடிவுக்குக் கொண்டு வருவது குறித்து தமிழக மீனவர் பிரதி நிதிகளுடன் அரசு பேசுவதற்கு இப் போராட்டம் உந்துசக்தியாக அமையும் என்றும் இவ்வமைப்புகள் நம்பிக்கை தெரிவித்துள்ளன.

இந்தியா கச்சதீவை 1974 ஆம் ஆண்டு இலங்கைக்கு தாரை வார்த்துக் கொடுத்தது என்பது குறிப்பிடத்தக்கது. கச்சதீவு இலங்கைக்கு தாரை வார்க்கப்பட்ட பின்பே தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல்கள் அடிக்கடி இடம்பெறத் தொடங்கின என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

# அம்புலன்ஸ் விபத்து ஊழியர் படுகாயம்

(கரவெட்டி)

அம்புலன்ஸ் வண்டி மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் வைத்தியசாலை ஊழியர் ஒருவர் படுகாயமடைந்தார். சாரதியும், நோயாளியும் தெய்வாதீனமாகத் தப்பினர்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நோயாளியை ஏற்றிக்கொண்டு யாழ்.போதனா வைத்திய சாலைக்கு சென்றவேளை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பலத்த மழை பெய்துகொண்டு இருந்தமையால் வேகக் கட்டுப்பாட்டையிழந்த அம்புலன்ஸ் மின்கம்பத்துடன் மோதியது. இவ்விபத்துச்சம்பவத்தில் வைத்தியசாலை ஊழியரான அல்வாய் வடக்கைச் சேர்ந்த சச்சிதானந்தம் பிரணவன் (வயது 35) என்பவர் படுகாயமடைந்ததுடன் அம்புலன்ஸ் வண்டியும் பலத்த சேதமடைந்தது. (ச-3,24)

# பொலிஸ் அதிகாரி மீது தாக்குதல்!

ஆளும் ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் அடியாட்களால் புத்தளம் மாவட்டத்தின் தங்கொட்டுவப் பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்துப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் நேற்றுத் தாக்கப்பட்டுள்ளார்.

எம்.பியின் சகோதரன் ஒருவர் தலைக்கவசம் இல்லாமல் மோட்டார் சைக்கிளில் பயணித்து இருக்கிறார்.


அதனால் எம்.பியின் சகோதரன் மீது பொலிஸ் அதிகாரி நடவடிக்கை எடுத்திருக்கிறார்.இக் கோபத்திலேயே பொலிஸ் அதிகாரியை அடியாட்களைக் கொண்டு அடித்திருக்கிறார் எம்.பி என முறையிடப்பட்டுள்ளது. (ச-5)

## சுவாமி விவேகானந்தரின் அருள்வாக்கு



ஒளி மிக்கவனே! எழுந்திரு. எப்போதும் தூயவனே !பிறப்பு, இறப்பு அற்றவனே! எழுந்திரு.எல்லாம் வல்லவனே! எழுந்து உனது உண் மை இயல்பை வெளிப்படுத்து. உங்கள் உடலுக்குப் பின் னால் எவ்வளவு சக்தி, எத்த னை வகை ஆற்றல்கள், வேகங்கள் எல்லாம் மறைந்துள்ளன என்பது உங்களுக் குத் தெரியுமா?

மரணமில்லாப்பெருநிலையோ, ஆனந்தமோ நாம் வெளியிலி ருந்து பெறுவதில்லை.அவை முன்பே நம்மிடம் இருக் கிறது.எப்போதும் நம்முடைய வையாகவே இருந்து வரு கிறது.



இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனத்தின் வடமாகாண நிலையத்தின் ஏற்பாட்டில் யாழ்.பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தை நிறுவுவதற்கான அடுத்த கட்ட நடவடிக்கை குறித்த கலந்துரையாடல் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தின் வடமாகாண நிலையத் தலைவர் ஆர்.முத்துரட்ணானந்தன், பேராசிரியர் எஸ்.ரட்ணஜீவன் எச்.ஹூல் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

# சட்டத்தை மீறுவோர் மீது தயவுதாட்சணியமின்றி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் வலியுறுத்தல்

பிரதேசத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற போது அதற்கு மாறாகவும், அபிவிருத்திக்கு இடையூறாகவும், சட்டத்திற்குப் புறம்பாகவும் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மீது தயவுதாட்சணியமின்றி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற சண்டிலிப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், மக்களுக்கு பணியாற்றுவதற்காகத்தான் அரசாங்கம் அரச ஊழியர்களுக்கு ஊதியம் வழங்குகிறது.

எனவே,அரச ஊழியர்கள் மக்களின் இடங்களுக்குச் சென்று அவர்களின் பிரச்சினைகளை நேரில் கேட்டு அதற்கான தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். அப்படி மக்களுக்காகவே பணியாற்றும் போது நான் உங்களுக்கு எப்போதும் பக்கபலமாக இருப்பேன் எனவும் கூறினார்.

தொடர்ந்து கடந்த மாதம் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் முன்னேற்றம் தொடர்பான கூட்டறிக்கை ஒவ்வொரு துறைசார்ந்த விடயங்களாக வாசிக்கப்பட அதன் முன்னேற்றங்கள் குறித்து மக்கள் அமைப்புகளின் கருத்துக்களும் விமர்சனங்களும் புறப்பட்டு அந்த இடத்திலேயே உரிய அந்தந்த திணைக்களங்களின் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு தீர்வுகளும் பெறப்பட்டன.

அந்த வகையில் குடிநீர், மின்சாரம், போக்குவரத்து, நீர்விநியோகம், மீன்பிடி, விவசாயம்,கால்நடை, வீதி அபிவிருத்தி, கல்வி,கலாசாரம்,வீடமைப்பு, கிராம அபிவிருத்தி , கைத்தொழில் கூட்டுறவு பனை மற்றும் தென்னை என பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டதுடன் மக்களின் தேவைகள் கேட்டறிந்து அதற்கு உரிய திணைக்களங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் கோரப்பட்டு அத் தேவைகளைப் பூர்த்தி செய்து மக்களுக்கு வழங்குமாறு அவர் பணிப்புரை வழங்கினார்.

அத்தோடு நிறுவனங்களாலும் திணைக்களங்களாலும் பொறுப்பேற்கப்பட்ட வேலைகள் அனைத்தும் விரைவாக முடிக்கப்பட்டு மக்களிடம் கையளிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இவ் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலாளர் திருமதி அன்ரன் யோகநாயகம், ஈ.பி.டி.பி. வலிகாம இணைப்பாளர் ஜீவன், ஈ.பி.டி.பி மானிப்பாய் பிரதேச பொறுப்பாளர் ஜீவா உட்பட அரச திணைக்களங்களின் உயரதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள், கிராம அலுவலர்கள் மக்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-2)

# பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

கிளி/ முருகானந்த மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 30 ஆம்திகதி வியாழக்கிழமை மாலை 4மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெறவுள்ளதால் அனைத்துப் பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு வித்தியாலய அதிபர் ரி.வரதன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சிறுவர் தினத்தை முன்னிட்டு அன்பளிப்பு பொருட்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

சிறுவர் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். போதனா வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவில் ஸ்ரீ அம்மா பகவானால் ஸ்தாபிக்கப்பட்ட ஏகத்துவ இயக்கத்தின் இலங்கை அமைப்பின் அனுசரணையுடன் அன்பளிப்புப் பொருட்கள் வழங்கப்படவுள்ளதால், புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 20 வயதிற்கு உட்பட்டவர்கள் விடுதி இல. 26 இற்கு எதிர்வரும் முதலாம் திகதி (வெள்ளிக்கிழமை) அன்று காலை 8மணிக்கு தவறாது வருகை தருமாறு யாழ்.போதனா வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியகலாநிதி என். ஜெயகுமாரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

# இலங்கையில் வெளிநாட்டு முதலீடுகள் அதிகரிப்பு

## ஜனாதிபதி தெரிவிப்பு

இலங்கையில் முதலீடு செய்ய பல வெளிநாட்டு நிறுவனங்கள் முன்வந்துள்ளதாக ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வோல்ட் ஸ்டீட் ஜேனல் செய்தித்தாளுக்கு வழங்கிய செவ்வியில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார். சீனத் தொழிலாளர்களுக்கான செலவீனம் அதிகளவில் அதிகரித்திருப்பதன் காரணமாக இலங்கைத் தொழிலாளர்களுக்கு சிறந்த வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக, ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளைச் சேர்ந்த சிறியளவிலான வர்த்தகர்கள் தற்போது இலங்கை ஊழியர்களின் சேவையைப் பெற அதிக விருப்பம் காட்டுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சமாதானம் ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னரான ஒரு வருடமும் ஆறு மாத காலப்பகுதியினுள் பெரும் உட்கட்டமைப்பு உட்பட பல அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.

இதன்காரணமாக, வீதி, புகையிரதப் பாதை, மின்சார விநியோகம் மற்றும் சுத்தமான குடிநீர் போன்றவை தற்போது இலகுவாக மக்களுக்கு கிடைப்பதனால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்ய பெரும் ஆவல் கொண்டுள்ளதாகவும் அந்த செவ்வியில் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# வெருகல் ஆற்றில் நீராடிய சிறுமி நீரில் மூழ்கி மரணம்

திருகோணமலை- மட்டக்களப்பு எல்லையிலுள்ள வெருகல் ஆற்றில் நேற்று நீராடிக் கொண்டிருந்த 8 வயதான சிறுமி நீரில் மூழ்கி இறந்துள்ளாள்.

வாகரை 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருநா மதூஷிகா என்ற சிறுமியே இவ்வாறு இறந்ததாக அவரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோவில் வருடாந்த உற்சவத்திற்காக சென்ற இச்சிறுமி நேற்று காலை 11 மணியளவில் தனது உறவினர்கள் மற்றும் ஏனைய பக்தர்களுடன் நீராடிக் கொண்டிருந்த போது நீரோட்டத்தினால் இழுத்துச் செல்லப்பட்டாள்.

சிறுமியுடன் அவளின் 10 வயதான சகோதரனும் நீரோட்டத்தினால் இழுத்துச் செல்லப்பட்டனர். அச் சகோரதனை காப்பாற்ற முடிந்த போதிலும் சிறுமியைக் காப்பாற்ற முடியவில்லை என குடும்ப அங்கத்தவர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த ஆற்றில் முதலைகள் இருப்பதால் சிறுமி நீரில் இழுத்துச் செல்லப்பட்டதை கண்டவர்களும் முதலை என நினைத்து ஒதுங்கியதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது சிறுமியின் சடலத்தை வாகரை பொலிஸார், வெருகலம்பதி ஆலய பொலிஸாருடன் இணைந்து உறவினர்கள் தேடி வருகின்றனர். (ஸ்ரீ-2)

# பருத்தித்துறை லீக் உதைபந்தாட்ட போட்டிகளில் பங்குபற்ற வதிரி பொம்மேர்ஸ் அணிக்கு அனுமதி

(கரவெட்டி)

இரண்டு வருடங்களுக்குப் பின் மீண்டும் பருத்தித்துறை லீக் உதைபந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு வதிரி பொம்மேர்ஸ் அணிக்கு கடந்த 9 ஆம் திகதி கரவெட்டிப் பிரதேச செயலகத்தினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு கரவெட்டி பிரதேச செயல்க விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வான உதைபந்தாட்ட இறுதிப் போட்டியானது நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இதில் வதிரி பொம்மேர்ஸ் அணியின் சில வீரர்கள் போட்டியின் பிரதான நடுவரைத் தாக்கியமையாலும் இறுதிப் போட்டியில் குழப்பம் விளைவித்தமையாலும் கரவெட்டி பிரதேச செயலாளர் எஸ்.சத்தியசீலன் குழுவினரால் அவ்வணிக்கு தடைவிதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.மேலும் வதிரி பொம்மேர்ஸ் அணி வடமராட்சியில் சிறந்த முன்னணி வீரர்களை உள்வாங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வணியானது பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்படுகின்ற உதைபந்தாட்டப் போட்டிகளில் இரண்டு வருடங்களுக்கும் பின் கலந்துகொள்ளவுள்ளன. (ஸ்ரீ-2-24)

# இறைவழிபாடு உடல்நலத்துடன் மன நலத்தையும் வளர்க்கும்

## ஆய்வில் தகவல்

(வோஷிங்டன்)


பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தின் சமூகநல ஆய்வாளர் கிறிஸ்டோபர் ஸ்கெய்டில் ஒரு ஆய்வு மேற்கொண்டார். அதில் இறைவழிபாட்டில் நம்பிக்கை வைத்து இருப்பவர்கள் சிறந்த உடல்நலத்துடன் விளங்குகின்றனர் என தெரிவித்துள்ளார்.

இறைவழிபாட்டில் ஆழ்ந்த 423 பேரிடம் கடந்த 1972ஆம் ஆண்டு தொடக்கம் 2006 ஆம் ஆண்டு வரை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அவர்களில் 96 பேர் மதமாற்றம் செய்து கொண்டுள்ளதுடன் 54 பேர் இறை வழிபாட்டில் இருந்து முழுவதுமாக விலகிவிட்டனர். ஆனால் முழுமையான இறைவழிபாட்டில் ஈடுபட்டவர்கள் சமூக நலம், உடல் நலம் மற்றும் நன்னடத்தையில் சிறந்து விளங்கினர்.

இதன்மூலம் இறைவழிபாடு உடல்நலத்துடன் மன நலத்தையும் வளர்க்கும் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். -(ஸ்ரீ-2)

# சென்னை சுப்பர் கிங்ஸ் சம்பியன்ஸ் லீக்கில் சம்பியன்





சகலதுறையிலும் ஜொலித்த சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இலகுவாக வென்று சம்பியன்ஸ் லீக் தொடரில் சம்பியனானது.

சொந்த மண்ணில் வாரியர்ஸ் அணி ஏமாற்றமடைந்தது. தென்னாபிரிக்காவில் நடைபெற்று வந்த சம்பியன்ஸ் லீக் இருபது -20 கிரிக்கெட் தொடரில் 10 உள்ளூர் அணிகள் மோதின.

இத்தொடரின் இறுதிப்போட்டி நேற்று ஜோகானஸ் பேர்க்கில் நடைபெற்றது. இதில் இந்தியாவின் சென்னை சுப்பர்கிங்ஸ் அணியும் தென்னாபிரிக்காவின் வாரியர்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய வாரியர்ஸ் அணிக்கு ஜேக்கப்ஸ்- பிறின்ஸ் ஜோடி அதிரடி ஆரம்பம் வழங்கினர்.

இந்த ஜோடி 4.1 ஓவர்களில் 39 ஓட்டங்களை எடுத்தபோது பிறின்ஸ் 6 ஓட்டங்களுடன் பொல்லிங்கரின் பந்துவீச்சில் நேரடியாக போல்டாகி ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த இங்க்ராம் சிறப்பாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் அதிரடியாக ஆடிய அணித்தலைவர் ஜேக்கப்ஸ் 21 பந்துகளில் (8 பவுண்டரிகள் உட்பட) 34 ஓட்டங்களை எடுத்து அஸ்வினின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த கேரியூச் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி நம்பிக்கையளித்தார். இதில் இங்க்ராம் 23 பந்துகளில் (ஒரு பவுண்டரி உட்பட) 16 ஓட்டங்களை எடுத்து மோர்கலின் பந்துவீச்சில் ரெய்னாவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த மார்க் பௌச்சர் 5 ஓட்டங்களை மாத்திரமெடுத்து முரளிதரனின் பந்து வீச்சில் நேரடியாக போல்டாகி ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து கேரியூச் 17 பந்துகளில் (ஒரு பவுண்டரி உட்பட )17 ஓட்டங்களை எடுத்து முரளிதரனின் பந்துவீச்சில் ரெய்னாவிடம் பிடிகொடுத்தும் ஜெகான் போத்தா 7 ஓட்டங்களுடன் அஸ்வினின் பந்து வீச்சிலும் அனிருத்தாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழக்க வாரியர்ஸ் அணி 17.1 ஓவர்களில் 111 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்களை இழந்தது.

பின்வரிசையில் திஸ்ஸன் அதிரடி காட்ட வாரியர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 128 ஓட்டங்களை எடுத்தது.

பதிலுக்கு 20 ஓவர்களில் 129 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர்கிங்ஸ் அணிக்கு முரளி விஜய் - ஹசி ஜோடி அதிரடி ஆரம்பம் வழங்கினர்.

இந்த ஜோடியின் அற்புதமான ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வெற்றியை நோக்கி சீறியது. இதில் முரளி விஜய் 47-வது பந்தில் அரைச்சதம் கடக்க சென்னை சுப்பர்கிங்ஸ் அணி 14.2 ஓவர்களில் 100 ஓட்டங்களை எட்டியது. எனினும் முரளி விஜய் 53 பந்து களில் (06 பவுண்டரிகள்,02 சிக்ஸர்கள் அடங்கலாக) 58 ஓட்டங்களைக் குவித்து போஜேயின் பந்துவீச்சில் இரியூச்சிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.



அடுத்து வந்த சுரேஸ் ரெய்னா 02 ஓட்டங்களுடன் நிற்றினியின் பந்துவீச்சில் போத்தாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

எனினும் அடுத்து அணித்தலைவர் தோனி களமிறங்க மறுமுனையில் மைக்கல் ஹசி 45 பந்துகளில் அரைச்சதம் கடந்தார்.

இந்நிலையில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 19 ஓவர்களில் 02 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 132 ஓட்டங்களைக் குவித்து 08 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன் மூலம் இரண்டாவது சம்பியன்ஸ் லீக் தொடரில் சென்னை சுப்பர்கிங்ஸ் அணி சம்பியனானது.

இதில் மைக்கல் ஹசி 46 பந்துகளில் (03 பவுண்டரிகள் உட்பட) 51 ஓட்டங்களையும் அணித்தலைவர் தோனி 12 பந்துகளில் (02 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 17 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் நிற்னி,போஜே ஆகியோர் தலா ஒரு விக்கட்டை வீழ்த்தினர். இப்போட்டியில் சென்னை சுப்பர்கிங்ஸ் அணியின் வெற்றிக்கு அடித்தளமிட்ட முரளி விஜய் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இத் தொடரில் பிரகாசித்த ரவிச்சந்திரன் அஸ்வின் தொடர் நாயகன் விருதை வென்றார். கடந்த ஏப்பிரலில் நடைபெற்ற இந்தியன் பிரிமிய லீக் தொடரில் சம்பியனான சென்னை சுப்பர்கிங்ஸ் அணி இத் தொடரிலும் தனது பலத்தை வெளிப்படுத்தியுள்ளது.

## யுத்தத்தால் கணவனை இழந்தவர்களுக்கு சகல வழிகளிலும் முன்னுரிமை வழங்கப்படும் - சந்திரகுமார் எம்.பி

யுத்தத்தால் கணவன்மார்களை இழந்தவர்களுக்கு சகல வழிகளிலும், முன்னுரிமை வழங்கப்படும் என் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

நேற்று பரந்தன் நகர கிராமசேவையாளர் பிரிவு மக்களை நேரில் சென்று பார்வையிட்டு அவர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பரந்தன் நகர் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் மகேந்திரன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் அந்தக் கிராமத்தை சேர்ந்த மக்கள் கலந்து கொண்டு தங்களுடைய தேவைகள் மற்றும் பிரச்சினைகளை நாடாளுமன்ற உறுப்பினரிடம் தெரிவித்தனர்.

அந்த வகையில் அக்கிராம மக்கள் தங்களின் அடிப்படைத் தேவைகள் பலவற்றை தெரிவித்தனர். இதில் குறிப்பாக அக்கிராமத்தில் வசிக்கின்ற 640 குடும்பங்களில் 360 குடும்பங்களுக்கு காணி இல்லையெனவும் அதற்கு தாங்கள் தீர்வினைப் பெற்றுத்தருமாறும் கோரப்பட்டது.

மிக நீண்டகாலமாக சில காணிகளில் அம் மக்கள் வசித்து வருகின்மையால் அம் மக்களுக்கே அக் காணிகளை வழங்குவது தொடர்பாக பிரதேச செயலருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் காணிக் கச்சேரி ஏற்பாடு செய்யப்பட்டு அக்காணிகளை வழங்குவது தொடர்பில் தீர்வு பெறப்பட்டு அம்மக்களுக்கு உடன் தெரியப்படுத்தப்படும்.

மேலும் இக்கிராமத்திற்கான வீதி, முன். பள்ளி மற்றும் மக்களின் தற்காலிக நிரந்தர வீடுகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. எதிர்வரும் மழைகாலத்திற்கு முன்பாக அவர்களது உடனடி அடிப்படைத் தேவைகள் சிலவற்றை பூர்த்தி செய்வது தொடர்பாகவும் ஆராயப்பட்டது. எதிர்வரும் மழைக்காலத்திற்கு முன்பாக அவர்களது உடனடி அடிப்படைத் தேவைகள் சிலவற்றை பூர்த்திசெய்வது தொடர்பாகவும் தான் கூடிய கவனம் செலுத்தி நடவடிக்கை எடுப்பதாகவும் சந்தரகுமார் எம்.பி தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கிராம அலுவலர் அம்பிகைபாலன், கிராம அபிவிருத்திச்சங்க தலைவர், மாதர்சங்கத் தலைவி மற்றும் கிராம மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-5)








மயிலனி சைவ மகா வித்தியாலய நூற்றாண்டு விழா நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், பிரதம விருந்தினராக கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் கானலாம்.

# கலாநிதி வேல்நம்பி பேராசிரியராக பதவியுயர்வு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ வணிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருநாவுக்கரசு வேல்நம்பி பேராசிரியராக பதவியுயர்வு பெற்றுள்ளார்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்ற பேராசிரியர் வேல்நம்பி, யாழ்.பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறையில் முதுகலைமாணிப்பட்டத்தை மேற்கொண்டு "திருக்குறளில் முகாமைத்துவக் கருத்துக்கள்" என்ற ஆய்வையும் செய்திருந்தார்.

சுமார் நாற்பதுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் பத்துக்கு மேற்பட்ட நூல்களையும் எழுதிய இவர், புத்தூரை சொந்த இடமாகக் கொண்டதுடன் புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரியின் பழைய மாணவராவார்.

அமுதசுரபி கலாமன்றத்தின் அமைப்பாளரான் பேராசிரியர் வேல்நம்பி சிறந்த பேச்சாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந)

# வட. கிழக்கு முன்பள்ளி ஆசிரியருக்கு நம்பிக்கை நிதி கொடுப்பனவு

(கொழும்பு)

இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்தம் கொடுப்பனவுகளை வழங்கும் பொருட்டு சிறுவர் நம்பிக்கை நிதியம் ஒன்றை ஸ்தாபிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக மகளிர் மற்றும் சிறுவர் விவகார துணை அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

இந்த நிதியத்திற்கு சேவ் த சில்ரன் முதற் கட்டமாக 100 மில்லியன் ரூபா வழங்கியுள்ளதாகவும் ஏனைய தன்னார்வ தொண்டர் அமைப்புக்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்களிடமிருந்தும் இதற்கான நிதியை மேலும் பெற உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

இது தொடர்பாக தமது அமைச்சினால் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாகவும் விரைவில் நாடாளுமன்றத்திலும் சமர்ப்பித்து அங்கீகாரத்தைப் பெறவிருப்பதாகவும் அவர் கூறுகின்றார்.

சேவ் த சில்ரன் வழங்கியுள்ள நிதி, வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளது. அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தின் மூலம் முதற்கட்டமாக கிழக்கு மாகாணத்தில் 500 முன்பள்ளி ஆசிரியைகள் மாதாந்தம் ரூபாய் 2000 ஊக்குவிப்புக் கொடுப்பனவைப் பெறவிருக்கிறார்கள்.

ஏனை பாடசாலைகள் முன்பள்ளி ஆசிரியைகளுக்கு கட்டம் கட்டமாகவே இத்திட்டம் விஸ்தரிக்கப்படவிருக்கிறது. அதற்கான நிதியைப் பெறுவதற்கான முயற்சிகளிலும் அமைச்சு ஈடுபட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார் மகளிர் மற்றும் சிறுவர் விவகார துணை அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹஸ்புல்லாஹ். (ச-5)

# இலங்கை மீது ஒபாமா...

இன்று பொருளாதாரம் பின்னடைவை சந்தித்துள்ளது. ஆனால் அதற்காக நாம் மனித உரிமைகளை புறம் தள்ளமுடியாது. குறுகிய கால உறுதித்தன்மைக்காகவும் பொருளாதார நலன்களுக்காகவும் சுதந்திரத்தை விலையாக்க முடியாது.

சில நாட்டின் தலைவர்கள் தமது பதவிக் காலத்தின் எல்லைகளை இல்லாது செய்துள்ளனர். சிவில் நிர்வாகம் சீரழிந்து போவதை நாம் காண்கின்றோம். நல்லாட்சி அற்ற நிலையையும், ஊழல்களையும் நாம் காண்கின்றோம். ஜனநாயகம் காலவரையறையின்றி குழிதோண்டிப் புதைக்கப்படுவதை நாம் காண்கிறோம். அமெரிக்காவிலும் சில தவறுகள் இருந்தாலும் வெனிசுலா அதிபர் கியூகோ சாவேஷ் இதனை மேற்கொண்டுள்ளார். உகண்டா அதிபர் முசேவெனி அதனை மேற்கொள்ள முயலுகிறார் (பதவிக்காலத்தை அதிகரிக்க) இலங்கையை பொறுத்தவரையில் நாம் தற்போது காணுவது அண்மையில் நிகழ்வு ஒன்ற ஒபாமா தெரிவித்துள்ளதாகவும் ஆனால் ஒபாமாவுக்கு பின்னர் பேசும் சந்தர்ப்பம் கிடைத்தும் ஒபாமாவின் பேச்சுக்கு பதில் கொடுக்க இலங்கை அரசு தவறிவிட்டதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தொடரில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோர் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# திலீபன்...

இந்நிகழ்ச்சியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன், திலீபன் படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்தார். அப்போது நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அனைவரும் எழுந்துநின்று ஒருநிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர்.

திலீபன் நினைவு நாளை ஒட்டி, தென் சென்னை மாவட்ட மருத்துவர் அணி சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இலவச மருத்துவ முகாமையும் திருமாவளவன் தொடங்கிவைத்தார். (ஏ-1)

# ரயில்...

சிலாபம் நோக்கி பயணித்த ரயில் வண்டியில் மோதி விபத்துக்குள்ளானதாக ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

ரயில் விபத்தில் 9 மாதப் பிள்ளை ஒன்றும் 2 பெண்களும் பலியாகியுள்ளனர். சம்பவத்தில் காயமடைந்த நபர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதாக வைத்தியசாலைப் பொலிஸார் குறிப்பிட்டனர். (ச-3)

# மீண்டும்...

மத்திய மகாவித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் சிறப்பு அதிதிகளாக வடக்கு மாகாண ஆளுனர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ சந்திரசிறி, யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன், வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த கத்துருசிங்க ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

சுமார் 20 வருடங்களின் பின்னர் வயாவிளான் மத்திய கல்லூரி சொந்த இடத்தில் மீள இயங்குவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# வன்னி மக்களுக்கு உதவு...

அவர் மேலும் கூறியதாவது,

இந்தப் பாடசாலை இன்று நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். நூற்றாண்டு விழா கொண்டாடுவது என்பது ஒரு அரிய விடயம். அந்தப் பேற்றை இன்று இந்தப் பாடசாலை பெற்றுள்ளது.

இந்தப் பாடசாலை உலகின் தலைசிறந்த குடிமக்களைப் பெற்றுக்கொடுத்துள்ளது. அதனையிட்டு யாழ்.மக்களாகிய நாம் தலை நிமிர்ந்து பெருமிதம் கொள்ளலாம். இன்று யாழ். மாவட்டத்தின் பாடசாலைகளில் குறைகள் இருக்கின்றன. ஆனால் வன்னியில் பாடசாலைகளே இல்லை என்று சொல்லுமளவிற்கு நிலைமை மோசமாக உள்ளது. ஒரு பாடசாலையிலும் கூரைகள் இல்லை.

ஆசிரியர்கள் தங்குவதற்கு விடுதிகள் இல்லை. கோப்புக்கள் வைப்பதற்குக்கூட வசதிகள் இல்லை. அத்தியாவசிய கட்டமைப்புக்கள் எதுவும் இல்லை. வன்னியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆசிரியர்கள் தங்குவதற்குக் கூட வீடுகள் இல்லை. ஆனாலும் ஆசிரியப் பெருமக்கள் அங்கு சென்று கல்வி கற்பிக்கின்றனர். வன்னிப் பகுதியில் பணியாற்றும் ஆசிரியர்கள் பெரும்பாலும் யாழிலிருந்தும் மற்ற இடங்களிலிருந்தும் சென்றுதான் பணியாற்றுகின்றனர். அப்படியான ஆசிரியப் பெருந்தகைகளையிட்டு நாம் பெருமைப்பட வேண்டும்.

கடந்த ஆண்டு நடைபெற்ற யுத்தம் வன்னி மக்களைப் பெரிதும் பாதித்துள்ளது. பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக அவர்கள் சேர்த்து வைத்திருந்த செல்வங்கள், வளங்கள் என்பவை அழிவுற்றுள்ளதுடன் அவர்களது கால்நடைகள் முதல் அனைத்தும் சூறையாடப்பட்டுள்ளன.

கணவனை இழந்த பெண்கள், மனைவியை இழந்த கணவன், பெற்றோரை இழந்த குழந்தைகள், அன்னையின் அரவணைப்பிற்காக ஏங்கும் குழந்தைகள் என வன்னி நிலப்பரப்பு சோகம் நிறைந்த ஒரு இடமாக மாறியுள்ளதை நாம் நீங்கள் அறிவீர்கள்.

அங்கு எதுவுமே நடக்கவில்லை என்ற மனோநிலை எமக்கு இருக்கக் கூடாது. நமக்கும் அப்பகுதிக்கும் தொடர்பில்லை என்பதாக நாம் இருந்துவிடமுடியாது.

அங்குள்ள மக்கள் எமது உறவுகள், எம்மில் பலருக்கு அப்பகுதியில் சொந்தக்காரர்கள் இருக்கக்கூடும்.

ஆகவே பாதிக்கப்பட்ட வன்னி மக்களுக்கு உதவுவதிலிருந்து நாம் ஒதுங்க முடியாது. நாம் அனைவருமே பாதிக்கப்பட்டவர்கள் தான். ஆனாலும் நம்மைவிடக் கூடுதலாக பாதிக்கப்பட்ட வன்னி மக்களுக்கு உதவுவது நமது இன்றைய கடமை. அனைத்தையும் இழந்துவிட்ட எமக்கு எமது எதிர்காலத்தை வளமாக்கிக் கொள்வதற்கு ஆதாரமாக இருப்பது கல்வி மட்டுமே.

ஆகவே எமது பிள்ளைகள் தமது எதிர்காலத்தைஉருவாக்கிக்கொள்வதற்குகல்வியில் சிறந்த கவனம் செலுத்த வேண்டும். அரசின் தவறான கல்விக் கொள்கை மாற வேண்டும்என்று அவர் தனது உரையில் குறிப் பிட்டுள்ளார். (ச-5)

# ஆயுதங்கள்...

தெரிவித்ததாகவும் இதனையடுத்து அப்பகுதியில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு குளத்தை இறைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சுமார் 10 நீர் இறைக்கும் இயந்திரங்களை பயன்படுத்தி நீர் இறைக்கும் பணி நடைபெறுவதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். இன்றும் இப்பணி இடம்பெறக் கூடும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-1)

# சரத் பொன்...

இதற்கிடையில் பீடாதிபதிகளின் இந்த முயற்சி தோல்வி அடையும் பட்சத்தில் தற்போது கடற்படைத் தளத்தில் இருக்கின்ற அவர் சிறைக்கு மாற்றப்படுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் அவர் தோல்வி கண்டது முதல் அவர் அங்கேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இரண்டாவது இராணுவ நீதிமன்றம் சரத் பொன்சேகாவின் குற்றச்சாட்டை உறுதி செய்ததைத் தொடர்ந்து அவருக்கு 3 வருட சிறை தண்டனை விதிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் ஜனாதிபதியின் உறுதிப்படுத்தலின் பின்னரே இந்த தீர்ப்பு செல்லுபடியாகும். எனவே இது தொடர்பாக ஜனாதிபதியிடம் பேச்சுவார்த்தை நடத்தி இந்த தீர்ப்பை நிராகரிப்பதற்காக பீடாதிபதிகள் முயற்சிகளை மேற்கொள்ளவிருப்பதாக அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

# இந்தியா...

இலங்கைப் படைத்தரப்பின் மீது தமது சந்தேகத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இதற்காக இலங்கையில் இந்தியா தமது புலனாய்வுப் பிரிவுகளை விரிவுப்படுத்தலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதனையடுத்து இலங்கையும் இந்தியாவுக்கு ஒத்துழைப்பை வழங்க முன்வந்துள்ளதாக அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் தகவல் குறித்து விரைவில் இலங்கை அதிகாரிகள் இந்தியாவுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இதன் ஒரு கட்டமாக இந்திய, இலங்கை கடற்படைகளின் உயர்மட்ட தளபதிகளின் சந்திப்பு ஒன்று எதிர்வரும் 29ஆம் திகதி இரு நாட்டுக் கடல் எல்லையில் வைத்து இந்தியக் கடற்படைக்கு சொந்தமான கப்பல் ஒன்றில்இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச-5)

**தேவை**

❖ அலுவலக வேலை காரணமாக வெளியிடங்களுக்கு சென்றுவரக்கூடியவர் தேவை (ஆண்/பெண்)

❖ பேப்பர் தட்டி அடுக்கக் கூடிய அச்சக வேலை தெரிந்தவர் தேவை. (ஆண்/ பெண்)

தொடர்பு இல. :- 0711472276

(2558)

இப்பொழுது கிளிநொச்சியிலும் வவுனியாவிலும்!!!

Face to Face Chatting

Internet Browsing

E-Mail

உங்கள் வெளிநாட்டு உறவுகளுடன் முகம் பார்த்து பேசும் வசதிகள்

Photo Copy · Local & Foreign Call · Laminating

புதிய கணனி மற்றும் திருத்த வேலைகள்




220க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

கடிதங்கள் · உடுபுடவைகள் · அன்பளிப்புப் பொருட்கள் · CD,DVD · ஆவணங்கள் · உணவுப் பொருட்கள்

DHL

மற்றும் சகல விதமான பொருட்களையும் மிக விரைவாக அனுப்பிடலாம்

திருமுருகன் கொம் நெற்

→ இல-05 பிரதான வீதி, திருநகர், கிளிநொச்சி.

→ இல. 14, மில் றோட், வவுனியா.

021 222 7835

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.